E Paper

மின்னிதழ்

2022 ஓகஸ்ட் 20 சனிக்கிழமை

# தினகரன்

THINAKARAN தினகரன்

www.thinakaran.lk

/ Thinakaran.lk / ThinakaranLK

1932 - 2022

வரு. 90 இல. 195 | Saturday 20, August, 2022 | 13பக்கங்கள்

வடக்கில் கல்வி, சமூக பிரச்சினைகள்:

## அமைச்சர் சுசில் தலைமையில் விரிவாக கலந்துரையாடல்



யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சி மாவட்ட கல்விச் சமூகத்தினர் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் தொடர்பான விரிவான கலந்துரையாடல்கள் நேற்று முன்தினம் கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தலைமையில் யாழ்ப்பாணம்

06

## அரச அதிகாரிகளுக்கு வெளிநாட்டு வேலைவாய்ப்பு புலமைப்பரிசில் மூலம் வெளிநாட்டு கல்விவசதி

### இரு வேலைத்திட்டங்களையும் துரிதப்படுத்துவதில் அரசாங்கம் தீவிர கவனம்

**லோரன்ஸ் செல்வநாயகம்**

அரச அதிகாரிகளை வெளிநாட்டு வேலைவாய்ப்புக்களுக்கு அனுப்பும் வேலைத்திட்டத்தைத் துரிதப்படுத்துவதில் அரசாங்கம் கவனம் செலுத்தியுள்ளது.

அந்நிய செலாவணி வருமானத்தை அதிகரிப்பது, அரச ஊழியர்களை வெளிநாட்டு வேலைவாய்ப்புகளுக்கு திறம்பட அனுப்பும் செயல்முறையைத் துரிதப்படுத்துவது, இதனுடன் தொடர்புள்ள நிறுவனங்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பது உள்ளிட்ட பல விடயங்கள் குறித்து ஜனாதிபதியின் செயலாளர் சமன் ஏக்கநாயக்க தலைமையில் அண்மையில் நடந்த கலந்துரையாடலில் ஆராயப்பட்டது.

அரச உத்தியோகத்தர்களை வெளிநாட்டு வேலை வாய்ப்புகளுக்கு அனுப்பும் முறைமையை, இலகுபடுத்தும் வகையில் 14/2022 ஆம் இலக்க அரச நிர்வாக சுற்றறிக்கையை திருத்துவது உட்பட 06 விடயங்கள் குறித்து இதன்போது கலந்துரையாடப்பட்டது.

06

## கொரியாவின் மீன்பிடித் துறையில் ஆயிரத்துக்கும் அதிக தொழில் வாய்ப்பு

### இலங்கையரை ஈடுபடுத்த அமைச்சர் மனுஷ நடவடிக்கை

**லோரன்ஸ் செல்வநாயகம்**

கொரியாவில் மீன்பிடித் துறையில் 1,047 தொழில்வாய்ப்புக்கள் உள்ளதாகவும் அதற்காக இலங்கையரை அனுப்புவதற்கான பரீட்சை ஒக்டோபர் மாதத்தில் நடத்தப்படுமெனவும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சர் மனுஷ நாணயக்கார தெரிவித்துள்ளார்.

இந்த வருட இறுதிக்குள் இலங்கையரை அந்தத் தொழில்களில் ஈடுபடுத்துவதற்கு கொரிய மனிதவளத் திணைக்களத்தின் இலங்கைக்கான பணிப்பாளர் லீ உறுதியளித்துள்ளதாகவும் அமைச்சர் குறிப்பிட்டுள்ளார். கொரிய மனிதவள திணைக்களத்தின் இலங்கைக்கான அலுவலகம் திறக்கப்பட்டதன் பின்னர் எந்தவொரு அமைச்சரும் அங்கு சென்றிருக்கவில்லையென்பதைக் குறிப்பிட்டுள்ள அமைச்சர் மனுஷ நாணயக்கார,




06

இலவச சுகாதார சேவையை முழுமையாக மக்கள் அனுபவிக்க ஏற்பாடு:

# மருந்து தட்டுப்பாடுகளுக்கு விரைவில் தீர்வு காணப்படும்

### ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நேற்று தெரிவிப்பு



**விபத்துக்குள்ளாகி சிகிச்சை பெற்றுவரும் நடிகர் ஜெக்சன் அன்ரனியை பார்வையிட்ட பின்னர் ஜனாதிபதி கருத்து**

**லோரன்ஸ் செல்வநாயகம்**

நாட்டிலுள்ள அரசாங்க வைத்தியசாலைகளில் தட்டுப்பாடாகியுள்ள மருந்துகளை பெற்றுக் கொடுப்பதற்கு விரைவான நடவடிக்கை எடுக்கப்படுமென ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

தட்டுப்பாடான மருந்துகளை விரைவாக பெற்றுக் கொடுப்பது தமது முக்கிய நோக்கமென தெரிவித்துள்ள ஜனாதிபதி அதற்கான நடவடிக்கைகளை தற்போது முன்னெடுத்து வருவதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

அது தொடர்பில் மேலும் தெரிவித்துள்ள அவர், நாடு முழுவதுமுள்ள அரசாங்க வைத்தியசாலைகளில் நிலவும் மருந்து தட்டுப்பாடு காரணமாக பாதிக்கப்பட்டுள்ள நோயாளர்களின் உயிர் தொடர்பில் தமக்கு பாரிய பொறுப்புள்ளதாகவும் வெகு விரைவாக மருந்து தட்டுப்பாட்டுக்கு தீர்வு

06



விபத்தொன்றில் படுகாயமடைந்து சிகிச்சை பெற்றுவரும் பிரபல சிங்கள திரைப்பட நடிகர் ஜெக்சன் அன்ரனியின் உடல்நிலை தொடர்பில் அறிந்துகொள்வதற்காக நேற்று (19) கொழும்பு தேசிய வைத்தியசாலைக்கு விஜயம் செய்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, ஜெக்சன் அன்ரனியின் மனைவியிடம் அவரது சுகநலம் குறித்து விசாரித்தபோது..



தனிப்பட்ட விருப்பு வெறுப்பை புறந்தள்ளி

**நாட்டை மீட்டெடுக்க முன்வர ஒன்றுபடுமாறு -ரோஸி அழைப்பு**

03

## ஊழல் எதிர்ப்பு சட்டத்தில் விரைவாக திருத்தம் அவசியம்

### நீதியமைச்சர் விஜேயதாச ராஜபக்ஷ தெரிவிப்பு



**லோரன்ஸ் செல்வநாயகம்**

ஊழல் எதிர்ப்பு சட்டத்தில் விரைவாக திருத்தங்களை மேற்கொள்வது அவசியம் என நீதியமைச்சர் விஜேயதாச ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

06

## Gas உட்பட சில பொருட்கள் இனி கட்டுப்பாட்டு விலையில்

### அமைச்சர் நளின் பெர்னாண்டோ அறிவிப்பு



**லோரன்ஸ் செல்வநாயகம்**

சமையல் எரிவாயு, சீமெந்து உள்ளிட்ட சில பொருட்களின் விலைகளை கட்டுப்படுத்துவது தொடர்பில் அரசாங்கம் கவனம் செலுத்தியுள்ளது.

அதற்கான கட்டுப்பாட்டு விலைகளை நடைமுறைப்படுத்துவது தொடர்பில் உரிய கவனம் செலுத்தப்படும் என வர்த்தக மற்றும் உணவு பாதுகாப்பு அமைச்சர் நளின் பெர்னாண்டோ தெரிவித்துள்ளார். நாட்டில் தற்போது சமையல் எரிவாயு

06

## இலங்கைக்கு உதவ இந்தியா எப்போதுமே துணை நிற்கும்

### இந்த வருடம் மட்டும் 3.8 பில். டொலர் உதவி



இலங்கை சர்வதேச நாணய நிதியத்திடம் மேற்கொள்ளும் வேலைத்திட்டங்களுக்கு இந்தியா எந்தவொரு சந்தர்ப்பத்திலும் ஒத்துழைப்பை வழங்க தயாராக இருப்பதாக இந்திய வெளிவிவகார அமைச்சர் எஸ்.ஜெய்சங்கர் தெரிவித்தார்.

மேலும், இந்தாண்டு மட்டும் இந்தியா 3.8 பில்லியன் அமெரிக்க டொலர்களை இலங்கைக்கு வழங்கியுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

தாய்லாந்தில் உள்ள ஒரு பல்கலைக்கழகத்தில் 'இந்தோபசிபிக் பற்றிய இந்தியாவின் பார்வை'

06

இணையத்தளம் மூலமாக

## சிறுவர், சிறுமியருக்கு பாலியல் தொல்லையா?

### அறிவிக்க 1929 அவசர இலக்கம் அறிமுகம்



இணையத்தளமூடாக சிறுவர், சிறுமியர்களுக்கு பாலியல் ரீதியான தொந்தரவுகளுக்கு உட்படுத்துபவது தொடர்பிலான தகவல்களை 1929 என்ற இலக்கத்துக்கு வழங்குமாறு தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபை கோரியுள்ளது. தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையின் தலைவர் கலாநிதி உதயகுமார அமரசிங்க இந்த கோரிக்கையை விடுத்துள்ளார். இணையத்தளமூடாக கற்றல் செயற்பாடுகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதன் காரணமாக சிறுவர்கள் ஸ்மார்ட் தொலைபேசிகளை பயன்படுத்துகின்றனர்.

06



இலங்கைத் திறந்த பல்கலைக்கழகத்தின் யாழ். பிராந்திய கற்கை நிலையத்தின் புதிய கட்டடத்தொகுதி திறந்து வைக்கும் நிகழ்வுக்கு நேற்று (19) கல்வி அமைச்சர் சுசில் பிரேம ஜயந்த் சென்ற போது திலகமிட்டு வரவேற்கப்படுவதையும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, அங்கஜன் இராமநாதன் எம்.பி ஆகியோர் அருகில் நிற்பதையும் படத்தில் காணலாம். ( யாழ். விசேட நிருபர் மயூரப்பிரியன்)

தமிழர்களின் அரசியல், சமூக விடயங்கள்:

## இலங்கைக்கான நோர்வே அதிகாரியுடன் கலந்துரையாடல்

### 6 தமிழ்க் கட்சித்தலைவர்கள் கூட்டாக பேச்சு



நோர்வே வெளிவிவகார அமைச்சின் இலங்கைக்கான விசேட அதிகாரி ஆன் கிளாட்டுடன் 6 தமிழ் தேசியக் கட்சிகளின் தலைவர்களும் பிரதிநிதிகளும் மெய்நிகர் தொழில்நுட்பம் மூலம் கலந்துரையாடியுள்ளனர்.

06

## NHDA மக்களுக்கு வழங்கிய கடனில் 10 பில். ரூபா நிலுவை

### இதுவரை வசூலிக்கப்படவில்லையென தகவல்

### மாவட்ட மட்டத்தில் வசூலிக்க அமைச்சர் பிரசன்ன பணிப்பு

தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபை 1979 ஆம் ஆண்டு நிறுவப்பட்டதன் பின்னர் மக்களுக்கு வழங்கப்பட்ட கடன் தொகையில் 10 பில்லியன் ரூபாவுக்கும் அதிகமான தொகை இதுவரை வசூலிக்கப்படவில்லையென தெரியவந்துள்ளது.

National Housing Development Authority

மாதாந்தம் 563 மில்லியன் ரூபா வசூலிக்கப்பட வேண்டும், ஆனால் ஜூலை மாதத்தில் 127 மில்லியன்


06



இலங்கைக்கு மனிதாபிமான உதவியாக

**அவுஸ்திரேலிய அரசினால் 25 மில்.டொலர் நிதியுதவி**

03



ஸ்ரீ ஜெயவர்தனபுர வைத்தியசாலை அபிவிருத்திக்கு

**இலங்கைக்கு ஜப்பான் 500 மில். யென் உதவி**

03



நுரைச்சோலைக்கு இரண்டு வருடங்களுக்கு

**நிலக்கரி வழங்க ரஷ்ய நிறுவனம் முன்வந்துள்ளது**

03


**மரண தண்டனை கைதி விடுதலையாவது எப்படி?**

மைத்திரியிடம் CIDயினர் விசாரணை

03

மூழ்கிக் கொண்டிருந்த படகிலிருந்து

## தென்கடலில் 6 மீனவர்களை காப்பாற்றியது கடற்படை



மாத்தறை தேவேந்திரமுனையிலிருந்து சுமார் 18.5 கடல் மைல் (34 கிலோமீற்றர்) தொலைவில் தென் கடலில் விபத்துக்குள்ளான மீன்பிடி படகிலிருந்த 6 இலங்கை மீனவர்களை நேற்று (19) அதிகாலை கடற்படையினர் உயிருடன் மீட்டுள்ளனர். கடந்த 16ஆம் திகதி குடாவெல்ல மீன்பிடி துறைமுகத்தில்

06

## கட்டுப்பாட்டை இழந்து கடையை மோதிய லொறி

### இருவர் பலி; நால்வருக்கு காயம்



காலி – கொழும்பு பிரதான வீதியில் இந்துவ ரயில் நிலையத்துக்கு அருகில் புதன்கிழமை (17) இரவு 8.30 மணியளவில் இடம்பெற்ற வாகன விபத்தில் கடை உரிமையாளரும் பெண் ஒருவரும் உயிரிழந்துள்ளதுடன் நால்வர் படுகாயமடைந்து வைத்தியசாலையில்

06

# சர்வதேச செய்திகள்

## உக்ரைனிய அணுமின் நிலையத்தில் ஐ.நாவின் செயற்பாட்டுக்கு இணக்கம்

சபோரிசியா அணுமின் நிலையத்தில் சர்வதேச அணுசக்தி நிறுவனத்தின் சாத்தியமான நடவடிக்கை ஒன்றுக்கு உக்ரைன் ஜனாதிபதி வொலோடிமிர் செலன்ஸ்கி இணங்கியுள்ளார்.

இந்த அணுமின் நிலையம் உள்ள வளாகத்தின் மீது தொடர்ச்சியாக இடம்பெறும் ஷெல் தாக்குதல்களால் அணுசக்தி பேரழிவு ஒன்று பற்றிய அச்சம் அதிகரித்த நிலையிலேயே இந்த உடன்பாடு எட்டப்பட்டுள்ளது.

துருக்கி ஜனாதிபதி ரிசப் தையிப் எர்துவான், ஐ.நா செயலாளர் நாயகம் அன்டோனியோ குட்டரஸ் மற்றும் உக்ரைன் ஜனாதிபதிக்கு இடையே லிவிவ் நகரில் கடந்த வியாழக்கிழமை முத்தரப்பு சந்திப்பு ஒன்று இடம்பெற்றது.

இதனைத் தொடர்ந்து இடம்பெற்ற செய்தியாளர் மாநாட்டில் பேசிய செலன்ஸ்கி, "ஐ.நாவின் சர்வதேச அணுசக்தி நிறுவனம், ஏனைய நிறுவனங்களினால் நிலைமையை கட்டுப்படுத்துவது மற்றும் முழுமையான வெளிபடைத்தன்மை ஒன்றினால் மாத்திரமே அணு பாதுகாப்புக்கு உத்தரவாதம் அளிக்க முடியும்" என்று குறிப்பிட்டார்.

எனினும் இந்தத் திட்டத்திற்கு ரஷ்யா இணங்கியுள்ளது பற்றி உறுதி செய்யப்படவில்லை.

தெற்கு உக்ரைனில் இருக்கும் அணு மின் நிலையத்தில் இருந்து ரஷ்யா தமது படைகளை உடன் வாபஸ் பெற வேண்டும் என்றும் அந்தப் பகுதியில் முன்னெடுக்கும் அனைத்து இராணுவ செயற்பாடுகளையும் உடன் நிறுத்த வேண்டும் என்றும் செலன்ஸ்கி வலியுறுத்தியுள்ளார்.

இந்த அணு மின் நிலையத்தின் மீதான தாக்குதல் தொடர்பில் ரஷ்யா மற்றும் உக்ரைன் பரஸ்பரம் குற்றம்சாட்டி வருகின்றன. ஐரோப்பாவின் மிகப்பெரிய அணுமின் நிலையமாக உள்ள சபோரிசியா அணுமின் நிலையத்தை ரஷ்ய துருப்புகள் உக்ரைன் போரின் ஆரம்பத்திலேயே கைப்பற்றி இருந்தன.

அணுமின் நிலையத்தை சூழ தொடரும் இராணுவ செயற்பாடுகள் பற்றி துருக்கி ஜனாதிபதி கவலை வெளியிட்டார். "மற்றொரு செர்னோபில் எமக்குத் தேவையில்லை" என்று அவர் குறிப்பிட்டார்.

அணுமின் நிலையத்தை சூழவுள்ள பகுதியை இராணுவமயமற்ற பகுதியாக மாற்ற வேண்டும் என்று ஐ.நா செயலாளர் நாயகம் குறிப்பிட்டார். "சபோரிசியாவில் ஏற்படு எந்த ஒரு சேதமும் தற்கொலையாகும்" என்று எச்சரித்தார்.




## கொவிட் பற்றி தவறான தகவலை பரப்பும் பேஸ்புக் பக்கம் முடக்கம்



கொவிட்–19 தொடர்பாகத் தவறான தகவல்களைப் பரப்பும் தடுப்பூசி எதிர்ப்புக் குழு பேஸ்புக் தளத்திலிருந்து வெளியேற்றப்பட்டுள்ளது.

பேஸ்புக் சமூக ஊடகத் தளத்தின் உரிமையாளரான மெடா நிறுவனம் அந்தக் குழுவை வெளியேற்றியது.

சிறுவர்களின் சுகாதார பாதுகாப்பு எனும் அந்தக் குழுவின் பேஸ்புக் மற்றும் இன்ஸ்டாகிராம் கணக்குகள் மூடப்பட்டதாக மெடா தெரிவித்தது.

தவறான தகவல்களைப் பரப்பக் கூடாது என்ற மெடா நிறுவனத்தின் விதிமுறை மீண்டும் மீண்டும் மீறப்பட்டதால் அந்தக் கணக்குகள் மூடப்பட்டன. சிறுவர்களின் சுகாதார பாதுகாப்பு அமைப்பு குழந்தைகளுக்குத் தடுப்பூசி போடுவதைக் குறைகூறுகிறது. அதன் பேஸ்புக், இன்ஸ்டாகிராம் பக்கங்களை நூறாயிரக் கணக்கானோர் பின்தொடர்ந்து வந்ததாக அந்த அமைப்பு கூறியது.

மெடா நிறுவனத்தின் மீது பேச்சு சுதந்திரம் தொடர்பாக தான் தொடுத்திருக்கும் வழக்கை ஒட்டி தனது பக்கங்கள் மூடப்பட்டிருக்கலாம் என்று அந்த அமைப்பு குறிப்பிட்டது.

"கடுமையான அரச கொள்கைகளை விமர்சிக்கும் அனைவரையும் தடுக்கும் மத்திய அரசின் ஒடுக்குமுறைக்கான பிரதிநிதியாகவே பேஸ்புக்கின் செயல் உள்ளது" என்று சிறுவர்களின் சுகாதார பாதுகாப்பு அமைப்பின் நிறுவனரும் முன்னாள் ஜனாதிபதி ஜோன் எப் கென்னடியின் மருமகனுமான ரொபர்ட் கென்னடி ஜூனியர் தெரிவித்துள்ளார்.

## உலகெங்கும் கொரோனா இறப்பு 4 வாரத்தில் 35 வீதம் அதிகரிப்பு



உலகெங்கும் கடந்த 4 வாரங்களில் கொரோனா இறப்பு 35 வீதம் அதிகரித்துள்ளதாக உலக சுகாதார அமைப்பு தெரிவித்துள்ளது.

உலகம் முழுவதும் கொரோனா பாதிப்பு தொடர்ந்து வருகிறது. தொற்று பாதிப்பைக் குறைக்கும் நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இந்நிலையில் உலக சுகாதார அமைப்பின் தலைவர் டெட்ரோஸ் அதானோம், "கொரோனா தொற்றுடன் வாழக் கற்றுக்கொண்டதால் தொற்று பாதிப்பு இல்லை என்று எடுத்துக்கொள்ள முடியாது. தற்போது பாதிப்பு அதிகரித்து வருகிறது. நம்மைப் பாதுகாத்துக்கொள்ளவும், மற்றவர்களைப் பாதுகாக்கவும் பாதுகாப்பு நடவடிக்கைகளை கடைப்பிடிக்க வேண்டும்.

உலகம் முழுவதும் கடந்த நான்கு வாரங்களில் கொரோனா, குரங்கம்மை உள்ளிட்ட உலகளாவிய நோய்கள் தொடர்பான இறப்புகள் 35 வீதம் அதிகரித்துள்ளன. கடந்த வாரம் மட்டும் கொரோனாவுக்கு 15,000 பேர் உயிரிழந்துள்ளனர். தடுப்பூசி, முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் இருக்கும்போது இது ஏற்றுக்கொள்ள முடியாதது.

எனவே அனைவரும் தடுப்பூசி செலுத்திக்கொள்ளுங்கள். சமூக இடைவெளி, முகக்கவசம் அணிதல் ஆகியவற்றைப் பின்பற்றுங்கள்" என்று கூறினார். மேலும், குரங்கம்மை குறித்து பேசிய அவர், "கடந்த வாரம் 7,500 பேருக்கு குரங்கம்மை தொற்று உறுதியாகியுள்ளது. முந்தைய வாரத்தைவிட பாதிப்பு 20 வீதம் அதிகமாகும். தற்போது வரை 92 நாடுகளில் 35,000 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். 12 பேர் உயிரிழந்துள்ளனர்" என்றார்.

## ஐரோப்பாவை தாக்கிய புயலால் 12 பேர் பலி




மத்திய மற்றும் தெற்கு ஐரோப்பாவை தாக்கிய சக்திவாய்ந்த புயலால் மூன்று சிறுவர்கள் உட்பட குறைந்தது 12 பேர் உயிரிழந்துள்ளனர்.

இதில் இத்தாலி, ஆஸ்திரியா மற்றும் பிரான்ஸ் தீவான கொர்சிகாவில் மரங்கள் விழுந்தே பலரும் உயிரிழந்துள்ளனர். ஐரோப்பா எங்கும் பல வாரங்களாக வெப்ப அலை மற்றும் வரட்சி தாக்கிய நிலையிலேயே இந்த புயலும் தாக்கியுள்ளது.

கோர்சிகாவில் மணிக்கு 224 கிலோமீற்றர் வேகத்தில் காற்று வீசியதில் வீதிகளில் மரங்கள் வேரோடு பிடுங்கப்பட்டு நடமாடும் வீடுகள் சேதமடைந்துள்ளன. முகாம் இருக்கும் தளம் ஒன்றில் மரம் விழுந்து 13 வயது சிறுமி கொல்லப்பட்டதாக அதிகாரிகள் குறிப்பிட்டுள்ளனர். இதனையொத்த சம்பவத்தில் ஆடவர் ஒருவர் உயிரிழந்திருப்பதோடு கடற்கரை கூடாரத்தின் கூரை தாக்கி காரில் வந்த 72 வயது பெண் ஒருவர் கொல்லப்பட்டுள்ளார்.

மேலும் கடலுக்குச் சென்ற இரு மீனவர்கள் மற்றும் பெண் படகோட்டி ஒருவரும் உயிரிழந்துள்ளனர். தாவிர, ஆஸ்திரியா மற்றும் இத்தாலி நாடுகளிலும் உயிரிழப்புகள் பதிவாகியுள்ளன.

## உக்ரைனுக்கு அமெ. மேலும் 800 மில்லியன் டொலர் உதவி



அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடனின் நிர்வாகம் உக்ரைனுக்குக் கூடுதல் இராணுவ உதவியை வழங்குவதற்கு தயாராகி வருவதாக சிலர் தகவல் வழங்கியுள்ளனர்.

அதுகுறித்துக் கூடிய விரைவில் அறிவிக்கப்படலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது. வழங்கப்படவுள்ள இராணுவ உதவியின் மதிப்பு, தற்போது சுமார் 800 மில்லியன் டொலர்களாக உள்ளது.

இராணுவ ஆயுதங்களை உக்ரைனுக்கு அனுப்புவது குறித்து அடுத்த வாரம் அறிவிக்கப்பட்டால், அதன் மதிப்பு மாறக்கூடும்.

அமெரிக்காவிடம் மிகுதியாக இருக்கும் ஆயுதங்களை மற்ற நாடுகளுக்கு அனுப்ப அமெரிக்க ஜனாதிபதிக்கு உரிமை உள்ளது. அந்த உரிமையைப் பயன்படுத்தி ஜனாதிபதி பைடன் உக்ரைனுக்கு அவற்றை அனுப்பவிருப்பதாகக் கூறப்படுகிறது. அடையாளம் வெளியிடப்படாத நபர்கள் ரோய்ட்டர்ஸ் செய்தி நிறுவனத்திடம் வழங்கிய தகவல்கள் குறித்து வெள்ளை மாளிகை கருத்துத் தெரிவிக்க மறுத்தது.

ரஷ்யா இவ்வாண்டு பெப்ரவரி மாதத்தில் உக்ரைன் மீது படையெடுத்தது. அப்போதிலிருந்து இதுவரை அமெரிக்கா உக்ரைன் அரசாங்கத்துக்குப் பில்லியன் கணக்கான டொலர் மதிப்பிலான உதவியை வழங்கியுள்ளது.

## தலிபான்களின் நடமாட்டத்திற்கு எதிராக பாகிஸ்தான் மாகாணத்தில் ஆர்ப்பாட்டம்



பாகிஸ்தானின் கைபர் பக்துன்க்வா மாகாணத்தில் தலிபான்களின் நடமாட்டத்திற்கு எதிராக அங்குள்ள மக்கள் ஆர்ப்பாட்டமொன்றை நடாத்தியுள்ளனர்.


தலிபான்களின் நடமாட்டம் காரணமாக சட்டம் ஒழுங்கு மிக மோசமாகப் பாதிக்கப்பட்டு வருவதாகவும் அமைதியையும் பாதுகாப்பையும் கோரி இம்மாகாண மக்கள் ஆர்ப்பாட்டம் நடாத்தியுள்ளதாகவும் பாதுகாப்பு அமைச்சர் கவாஜா ஆசிப் தேசிய சட்டமன்றத்தில் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் குறிப்பிடுகையில், இவ்வார்ப்பாட்டங்கள் கைபர் பக்துன்க்வா மாகாணத்தில் அரசியல் ஸ்திரமின்மையை ஏற்படுத்தியுள்ளதோடு தலிபான்களின் நடமாட்டத்திற்கு எதிரான உணர்வுகளும் இங்கு வளர்ந்து வருகின்றன என்றுள்ளார்.

இதேவேளை பழங்குடியினப் பகுதியின் கூட்டாட்சி நிர்வாகத்திற்கான தேசிய சபையின் உறுப்பினர் மொஹ்சித் தவார் விடுத்துள்ள அறிக்கையில் கைபர் பக்துன்க்வாவில் பயங்கரவாதம் அதிகரித்து வருவதாக குறிப்பிட்டுள்ளார்.

ஆப்கானிஸ்தானில் தலிபான்கள் ஆட்சிக்கு வந்த பின்னரே இந்நிலைமை ஏற்பட்டுள்ளது. அதனால் அமைதியையும் பாதுகாப்பையும் கோரி வடக்கு வசிரிஸ்தான் மக்கள் 26 நாட்களுக்கும் மேலாக ஆர்ப்பாட்டம் நடாத்தியுள்ளனர். இங்கு பரவியுள்ள பயங்கரவாதம் தொடர்பில் கவனம் செலுத்தத் தவறினால் அது முழு நாட்டிலும் பரவும் ஆபத்துள்ளது எனவும் அவர் சுட்டிக்காட்டியதாக "டவுன்" தெரிவித்துள்ளது.

## பின்லாந்து பிரதமரின் நடனத்தால் சர்ச்சை



பின்லாந்து பிரதமர் சன்னா மரின் நடனமாடும் வீடியோ ஒன்று கசிந்ததை அடுத்து அவர் மீதான விமர்சனங்கள் வலுத்துள்ளன.

சமூக ஊடகத்தில் இருந்த எடுக்கப்பட்டதாக நம்பப்படும் வீடியோ ஒன்றில் அவர் மற்றும் நண்பர்கள் கொண்டாட்ட நிகழ்ச்சி ஒன்றில் ஆடிப் பாடி மகிழும் காட்சிகள் பதிவாகியுள்ளன.

இதனையடுத்து பிரதமருக்கு எதிராக எதிர்க்கட்சிகள் விமர்சனங்களை வெளியிட்டு வருவதோடு, அவர் போதைப் பொருள் எடுத்துக் கொண்டதாகவும் குற்றம்சாட்டுகின்றன.

36 வயதான மரின் இந்தக் குற்றச்சாட்டை நிராகரித்துள்ளார். தாம் மதுபானம் மாத்திரமே அருந்தியதாகவும் ஆரவாரமாகக் கொண்டாட்டத்தில் ஈடுபட்டதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

முன்னர் இளம் அரச தலைவராக சாதனை படைத்த அவரின் சாதனையை தற்போது அவரை விடவும் மூன்று மாதங்கள் மாத்திரம் இளையவரான சிலி ஜனாதிபதி கப்ரில் பொலின் வகிக்கிறார்.

மரின் கொண்டாட்ட நிகழ்ச்சிகளில் பங்கேற்பது ரகசியமானது அல்ல என்பதோடு இசை நிகழ்ச்சிகளில் அவரை அடிக்கடி காண முடிகிறது. கடந்த ஆண்டு இரவு விடுதி ஒன்றுக்கு சென்று கொவிட் விவகாரத்தில் சிக்கிக் கொண்டதால் மன்னிப்புக் கோட்டிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

## பலஸ்தீன உரிமை அமைப்பு அலுவலகங்களுக்குப் பூட்டு



பலஸ்தீன மனித உரிமைகள் மற்றும் உதவி அமைப்புகளின் பல அலுவலகங்களையும் இஸ்ரேலிய துருப்புகள் மூடியுள்ளன. இந்த அமைப்புகளை கடந்த ஆண்டு பயங்கரவாத குழுக்களாக அடையாளப்படுத்திய நிலையில் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

கடந்த வியாழக்கிழமை அதிகாலையில் ஆக்கிரமிக்கப்பட்ட மேற்குக் கரையில் உள்ள இந்த அலுவலகங்களை சுற்றிவளைத்த இஸ்ரேலிய படையினர் அங்கிருக்கும் ஆவணங்களை எடுத்ததோடு அவைகளை இழுத்து மூடினார்கள்.

இந்த அமைப்புகள் போராட்ட பிரிவுகளுடன் தொடர்புபட்டிருப்பதாக இஸ்ரேலிய நிர்வாகம் குற்றம் சாட்டியது. இதனை அந்த அமைப்புகளும் அவைகளின் ஐரோப்பிய கொடையாளி நாடுகளும் நிராகரித்துள்ளன.

அட்மீர், ஆய்வு மற்றும் அபிவிருத்திக்கான பிசான் மையம், சர்வதேச–பலஸ்தீன சிறுவர்களுக்கான பாதுகாப்பு, கமத்தொழிலாளர் குழுக்களின் ஒன்றியம் மற்றும் பலஸ்தீன பெண்கள் குழுக்களின் ஒன்றியத்துடன் சேர்த்து தமது அமைப்பின் ரமல்லா நகரில் உள்ள அலுவலகத்திற்கு அதிகாலை 3 மணி அளவில் இஸ்ரேலிய படையினர் நுழைந்து தேடுதலில் ஈடுபட்டதாக அல் ஹக் மனித உரிமைகள் அமைப்பு குறிப்பிட்டுள்ளது.

தினகரன் விளம்பரம்
0112429367
விற்பனை பிரிவு
0112429444,
0112429378
ஆசிரியபீடம்
editor.tkn@lakehouse.lk

# தினகரன்
THINAKARAN
තිනකරන්

2022 ஓகஸ்ட் 20 சனிக்கிழமை



**தொழுகை நேரம்**

20 முதல் 23 வரை

| | |
|---|---|
| சுபஹ் | 04.46 |
| லுஹர் | 12.15 |
| அஸர் | 03.28 |
| மஃரிப் | 06.24 |
| இஷா | 07.36 |

**இன்றைய சுபதினம்**

சுபகிருது வருடம் ஆவணி 4

ராகுகாலம் : பகல் : 9.00 - 10.30வரை
சுபநேரம் : காலை : 7.30 - 9.00வரை

யோகம்: அமிர்த யோகம்

திதி: நவமி

**இராசி பலன்கள்**

| | |
|---|---|
| மேஷம் | நன்மை |
| ரிஷபம் | சுகம் |
| மிதுனம் | தனம் |
| கடகம் | போட்டி |
| சிம்மம் | கோபம் |
| கன்னி | முயற்சி |
| துலாம் | செலவு |
| விருச்சிகம் | நிறைவு |
| தனுசு | வெற்றி |
| மகரம் | பொறுமை |
| கும்பம் | மறதி |
| மீனம் | பாராட்டு |

கலாநிதி இராமச்சந்திரகுருக்கள் (பாபு சர்மா)

இந்தோனேஷிய சுதந்திர தினத்தை முன்னிட்டு

# சமயத்தலைவர்களிடம் உலர்உணவு அன்பளிப்பு




இந்தோனேஷியாவின் 77வது சுதந்திர தினத்தை முன்னிட்டு மற்றும் இலங்கை இந்தோனேஷியாவின் 70ஆவது வருட நட்புறவு நன்நாளை முன்னிட்டு சர்வமத தலைவர்களிடம் 2.5 இலட்சம் பெறுமதியான உலர் உணவு பொருட்கள் கொழும்பு இந்தோனேஷியா தூதரகத்தில் நேற்று இந்தோனேஷியா தூதுவர் Dewi custina Tobing னால் கையளிக்கப்பட்டுள்ளது.

இதன்போது பௌத்தமத தேரர் வணக்கத்துக்குரிய சோமரத்ன தேரர், அருட் தந்தை அனுரா பிரீஸ், கலாநிதி சிவஸ்ரீ ராமசந்திர குருக்கள் பாபு சர்மா, மலாய் சங்கத்தின் பொதுச் செயலாளர் ரில்வான் கரீம் ஆகியோர் இந்தோனேஷியா தூதுவரிடம் இருந்து உலர் உணவுப் பொருட்களை பெற்றுக் கொள்வதை படத்தில் காணலாம்.

# முச்சக்கர வண்டிகளை ஒழுங்குபடுத்த ஆணைக்குழு



முச்சக்கர வண்டிகளை ஒழுங்குபடுத்துவதற்கு தேசிய போக்குவரத்து ஆணைக்குழு நடவடிக்கை எடுத்துள்ளது.

போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் மற்றும் வெகுஜன ஊடக அமைச்சர் கலாநிதி பந்துல குணவர்தனவின் பணிப்புரைக்கமைய இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக பணிப்பாளர் நாயகம் நிலான் மிராண்டோ தெரிவித்தார்.

இது தொடர்பான அமைச்சரவைப் பத்திரம் தயாரிக்கப்பட்டு அமைச்சரவையின் அனுமதிக்காக அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகவும் அவர் கூறினார்.

அதன் பின்னர், சட்ட வரைவுப் பிரிவுக்கு அனுப்பி வைக்கப்படுமெனத் தெரிவித்த அவர், முன்னர் சமர்ப்பிக்கப்பட்ட வரவுசெலவுத் திட்டத்தில் முச்சக்கர வண்டிகளை ஒழுங்குபடுத்துவதற்கு தேசிய அதிகார சபையொன்றை ஸ்தாபிக்க முன்மொழியப்பட்டதாகவும், இதன் காரணமாக இது தாமதமானதாகவும் தெரிவித்தார்.

அமைச்சரவையின் அங்கீகாரம் கிடைத்ததும்,

06

கடன் மறுசீரமைப்பு தொடர்பான பேச்சுவார்த்தை

# ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அடுத்தமாதம் ஜப்பானுக்கு விஜயம்

**லோரன்ஸ் செல்வநாயகம்**

கடன் மறுசீரமைப்பு தொடர்பில் முக்கிய பேச்சுவார்த்தை நடத்துவதற்காக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அடுத்த மாதம் ஜப்பானுக்கான விஜயம் ஒன்றை மேற்கொள்ளவுள்ளார்.

இந்த விஜயத்தின் போது ஜனாதிபதி ஜப்பானிய பிரதமர் பூமியோ கிசிடா சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தவுள்ளதாக ஜனாதிபதி ரொய்டர் செய்தி சேவைக்கு வழங்கியுள்ள நேர்காணலில் தெரிவித்துள்ளார்.

இலங்கைக்கு வழங்கப்பட்டுள்ள கடனை மறுசீரமைப்பு செய்வது தொடர்பில் பேச்சுவார்த்தை நடத்துவதற்காக சீனா, இந்தியா உள்ளிட்ட இலங்கைக்குக் கடன் வழங்கியுள்ள பிரதான நாடுகளுக்கு அழைப்புவிடுக்குமாறு ஜப்பானிடம் கேட்டுக் கொண்டுள்ளதாக ஜனாதிபதி தெரிவித்துள்ளார்.

அதற்கிணங்க, அடுத்தமாதம் தாம் ஜப்பானிய பிரதமரை சந்திப்பதற்காக ஜப்பானுக்கான விஜயம் ஒன்றை மேற்கொள்ளவுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

சர்வதேச நாணய நிதியத்தின் அறிக்கைக்கு இணங்க 2020ம் ஆண்டு நிறைவில் இலங்கையானது இருதரப்பு கடனாக 6.2 பில்லியன் டொலரை பெற்றுக் கொண்டுள்ளதாகவும் ஜனாதிபதி தெரிவித்துள்ளார்.

ஜப்பான் நெருங்கிய நாடு என்ற வகையில் சீனா தவிர்ந்த இலங்கைக்கு இருதரப்பு கடன் வழங்கும் இந்தியா உள்ளிட்ட ஏனைய முக்கிய நாடுகள் ஒரே மேசையில் அமர்ந்து பேச்சுவார்த்தை நடத்த வேண்டும் என்பதை நிதி தொடர்பான நிபுணர்கள் தெரிவிக்கின்றனர்.

அந்த வகையில் சீனாவுடன் பேச்சுவார்த்தை நடத்தி வருவதாகவும்

சீனாவிடமிருந்து கிடைத்துள்ள பதில் சாதகமானதாக அமைந்துள்ளதாகவும் ஜனாதிபதி தெரிவித்துள்ளார்.

இலங்கையுடன் அதிகாரிகள் மட்ட உடன்படிக்கையை மேற்கொள்வதற்காக பேச்சுவார்த்தை நடத்துவதற்கு சர்வதேச நாணய நிதியத்தின் அதிகாரிகள் இந்த மாத இறுதியில் இலங்கைக்கு வரவுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

சுற்றுலா பயணிகளின் வருகை அதிகரிப்பு

# ஏழு மாதங்களில் 4,58,670 பேர் வருகை 824.9 மில்.அமெ. டொலர் வருமானம்

**லோரன்ஸ் செல்வநாயகம்**




நாட்டுக்கு வருகை தரும் வெளிநாட்டு சுற்றுலா பயணிகளின் எண்ணிக்கை அதிகரித்துள்ளதாக சுற்றுலாத்துறை அமைச்சு தெரிவித்துள்ளது.

2021 ஆம் ஆண்டின் முதல் 07 மாதத்துடன் ஒப்பிடுகையில் இந்த வருடத்தின் முதல் ஏழு மாதத்தில் நாட்டுக்கு வருகை தந்துள்ள உல்லாசப் பிரியாணிகளின் எண்ணிக்கையில் பாரிய முன்னேற்றம் காணப்படுவதாகவும் அந்த அமைச்சு தெரிவித்துள்ளது.

கடந்த வருடம் முதல் 07 மாதங்களில் 19,337 வெளிநாட்டு உல்லாசப் பயணிகள் நாட்டுக்கு வருகை தந்துள்ளதுடன் இந்த வருடத்தின் முதல் ஏழு மாதத்தில் அந்த எண்ணிக்கை 4,58, 670 ஆக அதிகரித்துள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

அதன்படி இந்த வருடத்தின் முதல் ஏழு மாதங்களில் மாத்திரம் சுற்றுலாத் துறை மூலம் அரசாங்கம் 824.9 மில்லியன் அமெரிக்க டொலர்களை வருமானமாகப் பெற்றுக் கொண்டுள்ளதாகவும் அமைச்சு தெரிவித்துள்ளது.

அத்துடன் ஜூலை மாதத்தில் மாத்திரம் சுற்றுலாத்துறை மூலம் 85. 1 மில்லியன் அமெரிக்க டொலர் வருமானமாக பெற்றுக் கொள்ள முடிந்துள்ளதாகவும், கடந்த வருடத்தின் முதல் ஏழு மாதங்களில் சுற்றுலாத்துறை மூலம் 50.4 மில்லியன் அமெரிக்க டொலர்களையே வருமானமாகப் பெற்றுக்கொள்ள முடிந்ததென்றும் அமைச்சு தெரிவித்துள்ளது.

# மரண தண்டனை கைதி விடுதலையாவது எப்படி?

**மைத்திரியிடம் CIDயினர் விசாரணை**




முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிடம் குற்றவியல் விசாரணை திணைக்களம் நேற்றுமுன்தினம் மூன்று மணி நேரம் விசாரணை நடத்தி வாக்குமூலமொன்றை பதிவு செய்துக்கொண்டுள்ளது.

றோயல் பார்க் வீடமைப்பு தொகுதியில் 19 வயதான இவோன் ஜோன்சன் என்ற வெளிநாட்டு யுவதியை கொலை செய்த குற்றத்திற்காக மரண தண்டனை விதிக்கப்பட்டிருந்த ஜூட் ஷாமன் அந்தனி ஜயமஹா என்ற கைதிக்கு பொது மன்னிப்பு வழங்கி விடுதலை செய்த விடயத்தில் இலஞ்சம் பெற்றமை சம்பந்தமாக நடத்தப்படும் விசாரணைகளுக்கு அமைய இந்த வாக்குமூலம் பெறப்பட்டுள்ளது.

முன்னாள் ஜனாதிபதி மற்றும் பாராளுமன்ற உறுப்பினர் அத்துரலியே ரதன தேரர் ஆகியோர் செய்த இரண்டு முறைப்பாடுகளை அடிப்படையாக கொண்டு குற்றவியல் விசாரணை திணைக்களம் இந்த விசாரணைகளை ஆரம்பித்துள்ளது.

முன்னாள் ஜனாதிபதி

06

நுரைச்சோலைக்கு இரண்டு வருடங்களுக்கு

# நிலக்கரி வழங்க ரஷ்ய நிறுவனம் முன்வந்துள்ளது



நுரைச்சோலை அனல் மின் நிலையத்திற்கு இரண்டு வருடங்களுக்கு நிலக்கரி வழங்க ரஷ்ய நிறுவனம் ஒன்று முன்வந்துள்ளது.

நிலக்கரி விநியோகத்திற்கான விலைமனு கோரலுக்கு பதிலளித்த இரண்டு நிறுவனங்களில், ரஷ்ய நிறுவனம் ஏலம் பெறுவதற்கான வாய்ப்புகளை அதிகம் கொண்டுள்ளதாக லங்கா நிலக்கரி நிறுவனத்தின் தலைவரும், முகாமைத்துவப் பணிப்பாளருமான ஜகத் பெரேரா தெரிவித்தார்.

ஒக்டோபர் இறுதி வரை போதுமான நிலக்கரி கையிருப்பு இருப்பதாக அவர் கூறினார். செப்டம்பர் 30 வரையான காலப்பகுதிக்கு தேவையான நிலக்கரியே எம்மிடம் இருந்தது.இருப்பினும், நுரைச்சோலை மின் நிலையத்தின் ஒரு மின்பிறப்பாக்கியை கட்டாய பராமரிப்புக்காக மூட வேண்டியிருந்தது. மற்றொரு மின்பிறப்பாக்கி அண்மையில் பழுதடைந்தது. அது வழமைக்கு திரும்ப இரண்டு வாரங்களாகும் என்பதால், ஒக்டோபர் இறுதி வரை கையிருப்பு போதுமானதாக இருக்கும் என்று அவர் கூறினார்.

தொடர்ந்தும் கருத்து தெரிவித்த அவர்,

06

## நூல் வெளியீட்டு விழா

**‘இளம் தலைமைத்துவ ஆளுமையும் சஹீட் எம். ரிஸ்மியுடனான நேர்காணலும்’**



லேக் ஹவுஸ், தினகரன்,தினகரன் வாரமஞ்சரியின் ஊடக அனுசரணையுடன் எமது சிரேஷ்ட ஊடகவியலாளர் இக்பால் அலி தினகரனில் எழுதிய நேர்காணல் பத்திகளின் தொகுப்பான 'இளம் தலைமைத்துவ ஆளுமையும் சஹீட் எம். ரிஸ்மியுடனான நேர்காணலும்' எனும் நூல் வெளியீட்டு விழா எதிர்வரும் 28 ஆம் திகதி பி. ப 2.30 மணிக்கு கொழும்பு - 3 மென்டரினா ஹோட்டலில் நடைபெறவுள்ளது.




அகில இலங்கை வை. எம். எம். ஏ பேரவையின் ஏற்பாட்டில் ஜனாதிபதி சட்டத்தரணி பாயிஸ் முஸ்தபா தலைமையில் நடைபெறும் நிகழ்வில் பிரதம அதிதியாக தென்கிழக்குப் பல்கலைக்கழக உபவேந்தர் ரமீஸ் அபூபக்கர் கலந்து கொள்கிறார்.

**வரவேற்புரை:** நூல் அறிமுகம் இர்பான் இக்பால் (சோனகர் கொம். ஆசிரியர்)
**ஆசியுரை :** ரி. செந்தில்வேலவர், (பிரதம ஆசிரியர் தினகரன்)
**வாழ்த்துரைகள் :**
1. மாத்தளை எம். எம். பீர்முஹம்மது (மாத்தளை இஸ்லாமிய தமிழ் இலக்கியப் பேரவை. தலைவர்)
2.ரவூப் ஹக்கீம் (தேசிய தலைவர் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ்)
3. ரிசாட் பதியுதீன் (தேசிய தலைவர் அகில இலங்கை மக்கள் காங்கிரஸ்)
4.என். எம். அமீன் (முன்னாள் தலைவர் முஸ்லிம் மீடியா போரம்)
**நூல் கருத்துரை :**
1. ஏ. எம் நஹியா (முன்னாள் பணிப்பாளர் நாயகம், புனர்வாழ்வு மீனவர், வீடமைப்பு மீனவர் நலன்)
2. கவிஞர் ரா. நித்தியானந்தன் (முன்னாள் விரிவுரையாளர், அரசியல் விஞ்ஞானத்துறை பேராதனைப் பல்கலைக்கழகம்)
**நூலாசிரியர் உரை** : இக்பால் அலி
**ஏற்புரை :** சஹீட் எம். ரிஸ்மி
(தேசியத் தலைவர், அகில இலங்கை வை. எம். எம். ஏ. பேரவை)

நூல் வெளியீட்டு விழாவில் அரசியல் பிரமுகர்கள், சிவில் சமூக அமைப்புக்களின் பிரதிநிதிகள் எனப் பல முக்கியஸ்தர்கள் கலந்து சிறப்பிக்கவுள்ளனர். இந்நிகழ்வில் நாட்டின் உயர்ச்சிக்காகவும் மக்களின் மேம்பாட்டுக்காகவும் அர்ப்பணிப்போடு சேவையாற்றி வரும் மக்கள் நலன் பேணும் துறை சார்ந்த இளம் தலைமைத்துவங்களையும் ஊடகத் துறை சார்ந்தவர்களையும் பாராட்டி கௌரவிக்கும் நிகழ்வும் உள்ளடங்கும்.

எனவே உங்களின் பெறுமதியான கால நேரத்தை ஒதுக்கி இந்நூல் வெளியீட்டு விழாவில் கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு மிக அன்புடன் வேண்டுகின்றோம்.

- ஏற்பாட்டுக் குழு

ஊடக அனுசரணை தினகரன் வாரமஞ்சரி

இலங்கைக்கு மனிதாபிமான உதவியாக

# அவுஸ்திரேலிய அரசினால் 25 மில்.டொலர் நிதியுதவி

**லோரன்ஸ் செல்வநாயகம்**



அவுஸ்திரேலிய அரசாங்கமானது இலங்கைக்கு 25 மில்லியன் அமெரிக்கன் டொலரை மனிதாபிமான உதவியாக வழங்குவதற்கு முன் வந்துள்ளது.

ஐக்கிய நாடுகள் சபை ஊடாக இந்த மனிதாபிமான உதவியை இலங்கைக்கு வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என அவுஸ்திரேலிய அரசாங்கம் தெரிவித்துள்ளது. அந்த நிதி கிடைத்ததும் அதன் மூலம் நாட்டு மக்களுக்கு தேவையான உணவுப் பொருட்கள் மற்றும் மருந்துப் பொருட்களைக் கொள்வனவு செய்வதற்கு அதனைப் பயன்படுத்த தீர்மானித்துள்ளதாக இலங்கை அரசாங்கம் தெரிவித்துள்ளது.

பொருளாதார நெருக்கடியை நிவர்த்திக்கும் வகையில்

06

ஸ்ரீ ஜெயவர்தனபுர வைத்தியசாலை அபிவிருத்திக்கு

# இலங்கைக்கு ஜப்பான் 500 மில்.யென் உதவி



ஸ்ரீ ஜெயவர்தனபுர வைத்தியசாலையில் தொற்றா நோய் பராமரிப்பு வசதிகளை மேம்படுத்துவதற்காக 500 மில்லியன் ஜப்பானிய யென் மானியமாக வழங்க ஜப்பான் அரசாங்கம் இணங்கியுள்ளது.

இலங்கை அரசாங்கத்தின் வேண்டுகோளுக்கு இணங்க இந்த மானியம் வழங்கப்படுவதாக ஜப்பான் தெரிவித்துள்ளது. இது தொடர்பான ஆவணங்களை நிதி, பொருளாதார ஸ்திரப்படுத்தல் மற்றும் தேசிய கொள்கை அமைச்சின் செயலாளர் எம்.மஹிந்த சிறிவர்தன மற்றும் ஜப்பானிய அரசாங்கத்தின் தூதுவர் மிசுகோஷி ஹிடேயாகி ஆகியோர் பரிமாறிக்கொண்டனர்.

தனிப்பட்ட விருப்பு வெறுப்பை புறந்தள்ளி

# நாட்டை மீட்டெடுக்க முன்வர ஒன்றுபடுமாறு–ரோஸி அழைப்பு



நாட்டை மீட்டெடுப்பதற்காக தனிப்பட்ட அரசியல் இலாபங்களை கைவிட்டு, அனைத்து பாராளுமன்ற உறுப்பினர்களும் முன்வர வேண்டும் என்று கொழும்பு மாநகர மேயர் ரோசி சேனாநாயக்க கேட்டுக் கொண்டார்.

கொழும்பில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கருத்து வெளியிட்ட அவர், இன்று நாட்டில் ஏற்பட்டுள்ள நெருக்கடியைத் தீர்க்க, ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு 225 பாராளுமன்ற உறுப்பினர்களும் ஒத்துழைப்பை வழங்க வேண்டும். தற்போதுள்ள சவால்களை வெற்றிகொள்ள இதுவே இயலுமாக இருக்கும் என்பதை நான் உறுதியாக நம்புகிறேன் என அவர் தெரிவித்தார்.

நாடு சிக்கலில் உள்ள இந்தத் தருணத்தில் கட்சியை பாதுப்பது குறித்தோ அல்லது வாக்கு வங்கி குறித்தோ சிந்தித்து செயற்படக் கூடாது என்றும் நாளைய தினத்தை பற்றிச் சிந்தித்து நாட்டு மக்களை

06

## நாணய மாற்று

| நாணயம் | வாங்கும் விலை | விற்பனை விலை |
|---|---|---|
| அவுஸ்திரேலியா டொலர் | 249.31 | 261.39 |
| கனடியன் டொலர் | 274.90 | 288.06 |
| யூரோ | 361.54 | 376.57 |
| ஜப்பான் யென் | 2.6693 | 2.7772 |
| சிங்கப்பூர் டொலர் | 257.84 | 269.03 |
| ஸ்டேலிங் பவுன்ஸ் | 428.61 | 446.10 |
| சுவிஸ் பிராங்க் | 375.23 | 393.05 |
| அமெரிக்க டொலர் | 357.37 | 368.68 |

| மத்திய கிழக்கு | குறித்த விலை | | குறித்த விலை |
|---|---|---|---|
| பஹ்ரின் டினார் | 957.45 | கட்டார் ரியால் | 98.08 |
| குவைத் டினார் | 1,176.53 | சவூதி ரியால் | 96.12 |
| ஓமான் ரியால் | 937.58 | ஐ.அ. இராச்சியம் டிர்ஹாம் | 98.27 |

தினகரன்
THINAKARAN
35, டி. ஆர். விஜயவர்தன மாவத்தை, கொழும்பு - 10
தபால் பெட்டி இலக்கம் : 834
தொலைபேசி இலக்கம் : 2429429, 2429272, 2429279
பெக்ஸ் : 2429270, 2429329, விளம்பர முகாமையாளர் : 2429321
சுபகிருது வருடம் ஆவணி மாதம் 04ஆம் நாள் சனிக்கிழமை
ஹிஜ்ரி வருடம் 1444 முஹர்ரம் பிறை 21

## குறள் தரும் சிந்தனை



குறிப்பிற் குறிப்புணர் வாரை உறுப்பினுள்
யாது கொடுத்தும் கொளல்

தான் குறிப்புச் செய்ய, அதைக் கண்டு பிறர் முகத்தையும் கண்ணையும் பார்த்தே அவர் மனக்கருத்தைக் கண்டு சொல்லும் திறம் மிக்கவரைத் தன்னிடம் இருக்கும் செல்வங்களுள் எதைக் கொடுத்தேனும் துணையாக வைத்துக் கொள்ள வேண்டும்.

# பெருந்தோட்ட காணி உரிமையை சட்டரீதியாக எதிர்கொள்ள வேண்டும்

பெருந்தோட்ட சமூகம் தொடர்ச்சியாக எதிர்கொண்டுவரும் பிரதான பிரச்சினையாக விளங்குவது அச்சமூகத்துக்கான காணி உரிமையே. மலையகத்தில் இச்சமூகத்தின் பிரசன்னம் 175 வருடங்களைத் தாண்டியுள்ளது. எனினும் அவர்களுக்கு வீட்டுரிமையும் இல்லை, காணி உரிமையும் கிடையாது. மனித உரிமைகளைப் பேணும் ஒரு ஜனநாயக நாட்டில் தாம் பரம்பரையாக வாழும் இடத்தில சொந்தக் காணியில் வீடமைத்து வாழும் உரிமை இன்றளவும் இந்நாட்டு குடிமக்களான ஒரு பிரிவினருக்கு வழங்கப்படவில்லை என்பது அதிர்ச்சி அளிக்கும் ஒரு விஷயம் தான். ஆனால் நாட்டின் பெரும்பான்மையான மக்கள் இதை உணராதவர்களாகவும் அதில் அக்கறை அற்றவர்களாகவும் இருப்பது மேலும் அதிர்ச்சியை ஏற்படுத்துகிறது.

ஆரம்பத்தில் பெருந்தோட்டங்கள் பிரித்தானிய முதலாளிமாருக்கும் இலங்கையைச் சேர்ந்த தனியாருக்கும் சொந்தமாக இருந்தன. எழுபதுகளில் காணிச்சீர்திருத்தக் கொள்கையை சட்டமாக்கிய ஸ்ரீமா அரசு, தோட்டங்களை அரசுடமையாக்கியது. இப்பெருந்தோட்டங்கள் காணிசீர்திருத்த ஆணைக்குழுவின் கீழ் வந்தன.தொண்ணூறுகளில் அரசு தான் கையேற்ற தோட்டங்களை 21 தனியார் நிறுவனங்களிடம் குத்தகை அடிப்படையில் ஒப்படைத்தது. இக்காணிகளையும், பெருந்தோட்ட குடியிருப்பு காணிகளையும் இவை குத்தகைக்கு எடுத்துள்ளன. ஆனால் இக்காணி அரசுக்கு சொந்தமானவை.

பெருந்தோட்டக் குடியிருப்புகளை விஸ்தரிக்கவும், பழுது பார்க்கவும் அல்லது குடியிருப்பை ஒட்டிய காணியில் பயிர்ச்செய்கையில் ஈடுபடவும் முயலும் குடியிருப்பாளர்கள் மீது நிர்வாகங்கள் ஒழுங்கு நடவடிக்கைகளில் ஈடுபட்டு அவர்களை பொலிசிலும் நீதிமன்றத்திலும் நிறுத்திய சம்பவங்கள் இந்த அடிப்படையில்தான் நடைபெறுகின்றன. தோட்ட நிர்வாகங்கள் காணியை குத்தகைக்கு எடுத்திருப்பதால் தொழிலாளரின் இந் நடவடிக்கைகளை அத்துமீறல்களாக அவை பார்க்கின்றன.

இங்கே இரண்டு விஷயங்களை கவனிக்க வேண்டியிருக்கிறது. முதலாவது காலங்காலமாக குடியிருந்து வரும் குடும்பங்களுக்கு சொந்தக் காணியில் சொந்த வீட்டில் குடியிருக்கும் உரிமையைத் தொடர்ந்து மறுப்பது. இரண்டாவது, சட்டம் பேசி பிரச்சினையை இழுத்தடிக்கும் கம்பனித்தரப்பு. இப்பிரச்சினையில் தலையிட்டு ஒரு தீர்வை பெற்றுத் தருவதில் எந்த அக்கறையும் காட்டாத அரசுகளையும் மூன்றாம் தரப்பாக இங்கே குறிப்பிட்டாக வேண்டும்.

தொழிலாளர்களுக்கு தினசரி வேதனமாக ஆயிரம் ரூபா வழங்கப்பட வேண்டுமா அல்லது 2500 ரூபா வழங்கப்பட வேண்டுமா என்பது முக்கியம்தான். ஆனால் இருப்பு என்பது அதைவிட முக்கியம். நல்லாட்சி காலத்தில் தோட்டங்களை கிராமங்களாக்கும் திட்டத்துக்காக ஒரு அமைச்சே உருவாக்கப்பட்டது. பலநூறு வீடுகள் அமைக்கப்பட்டன. அப்போது பிரதமராக இருந்தவர் இன்றைய ஜனாதிபதி. ஆட்சி மாறியதும் பதவிக்கு வந்த கோட்டாபய ராஜபக்ஷ, சிறுபான்மை மக்களுக்கு எந்த நன்மையும் செய்வதில்லை என தீர்மானித்தவர்போல நடந்து கொண்டார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பெருந்தோட்ட விவகாரங்களில் நல்ல அனுபவம் கொண்டவர். இம்மக்களின் கஷ்டங்களையும் அறிவார். பெருந்தோட்ட சமூகத்துக்கு பங்கம் விளைவிக்கும் நடவடிக்கைகளில் ஈடுபட்டவரல்ல. அவர் அமைக்கவிருக்கும் சர்வகட்சி ஆட்சிமுறையில் மலையகக் கட்சிகள் பங்கெடுத்துக்கொள்ள வேண்டியது அவசியம். இதை ஒரு வாய்ப்பாகவே இக்கட்சிகள் கருத வேண்டும். சர்வகட்சி அரசியல் மலையகக் கட்சிகள் இடம் பெறுவதால் அவை பொறுப்பேற்கும் அமைச்சுகளுக்கு பெருந்தொகை நிதி ஒதுக்கீடு செய்யப்படும் என்றும் அந்த அமைச்சுகள் வழியாக பெருந்தோட்ட சமூகத்துக்கு சேவையாற்றக் கூடும் என்றும் எவரும் கருதிவிடக் கூடாது. நாடு சந்தித்துக் கொண்டிருக்கும் பெரும் பொருளாதார நெருக்கடியில் இருந்து நாட்டை மீட்கும் உபாயங்களை உருவாக்கி அவற்றை நிறைவேற்றுவதன் மூலம் படிப்படியாக பொருளாதார மீட்சியை நோக்கி நகர்வதே இச் சர்வகட்சி ஆட்சி முறையின் எதிர்பார்ப்பு

இந்த அரசில் இணைவதன் மூலம் தேசிய பிரச்சினையில் மலையகக் கட்சிகள் பங்களிப்பு செய்ய முடியும். அதன்மூலம் ஏனைய கட்சிகளின் நன்மதிப்பைப் பெற முடியும். குறிப்பாக சிங்கள மக்களின் கௌரவத்தைப் பெறக்கூடியதாக இருக்கும். இதன்மூலம் மலையக பெருந்தோட்ட சமூகத்துக்கு இழைக்கப்படும் அநீதிகளை எடுத்துச் சொல்ல முடியும்.

இச் சர்வகட்சி ஆட்சியில் இணைவதன் மூலம் சட்டத் திருத்தங்களை ஏற்படுத்தி பெருந்தோட்ட குடியிருப்பு காணிகளை குடியிருப்பாளர்களுக்கே சொந்தமாக்கும் முயற்சியில் நிச்சயம் வெற்றிபெற முடியும் என நாம் நம்புகிறோம். அரசாங்கத்துக்கும் 21 பெருந்தோட்ட கம்பனிகளுக்கும் இடையில் கையெழுத்தான உடன்படிக்கையில் காணி உரிமை தொடர்பிலான ஷரத்துகளில் திருத்தம் செய்யலாம். தோட்டங்களின் குடியிருப்பு மற்றும் விவசாய காணிகளை மீண்டும் காணிசீர்திருத்த ஆணைக்குழுவிடம் கையளித்து அக்காணிகளை குடியிருப்பாளர்களுக்கு அவர்களின் பெயர்களிலேயே நில உரிமைப் பத்திரத்தை வழங்க முடியும். தேவைப்படுவதெல்லாம் ஒப்பந்தத்திலும் சட்டங்களிலும் திருத்தங்களைக் கொண்டு வருவது மாத்திரமே.

ஆனால் இதைச் செய்வதற்கு தேவை, அரசின் நேரடித் தலையீடும் மலையக அரசியல் தலைமைகளின் உறுதியான முயற்சிகளும் தான். வடக்கின் தமிழ்க் கட்சிகள் அரசியல் கைதிகளின் விடுதலை, இராணுவ பிரசன்னம், வடக்கில் காணி விடுவிப்பு மற்றும் சிங்களக் குடியேற்றம் என்பனவற்றை முன் நிபந்தனைகளாக முன்வைக்கின்றன. புலம் பெயர்த் தமிழ்ச் சமூகத்தின் முதலீடுகளை அரசு எதிர்பார்க்கும் நிலையில் அச்சமூகமும் இது போன்ற நிபந்தனைகளை முன் வைக்கலாம். அரசொன்றினால் செய்ய முடிந்தவற்றை செய்து தரும்படி கேட்பதில் தவறில்லை.

அதுபோலவே மலையகக் கட்சிகலும் மிகவும் நியாயமானதும், மனிதாபிமான அடிப்படையைக் கொண்டதுமான காணியுரிமை மற்றும் வீட்டுரிமையை தமது ஒன்றுபட்ட கோரிக்கையாக அல்லது நிபந்தனையாக முன் வைப்பதில் எந்தத் தவறும் கிடையாது.

editor.tkn@lakehouse.lk

# எழில் மிகுந்த இயற்கைப் பிரதேசங்களின் தூய்மையை பேணிக் காப்பது நம் கடமை

மக்கள் மனங்களைக் கொள்ளை கொள்ளும் இயற்கையின் அருட் கொடைகள்,இரம்மியமானபிரதேசங்கள் போன்ற இடங்கள் சுத்தம், சுகாதாரமாகப் பேணிப் பாதுகாக்கப்பட வேண்டியவையாகும். அதிகமான மக்களைக் கவரும் இடங்களான கடற்கரைப் பிரதேசங்கள், ஆற்றங்கரைப் பகுதிகள் முக்கியத்துவம் பெறுகின்றன. தற்காலத்தில் பெருமளவிலானவர்கள் உல்லாசம், ஓய்வு, பொழுது போக்கு, விளையாட்டு, உடற்பயிற்சி போன்ற காரணங்களுக்காக மேற்படி பிரதேசங்களை அதிகம் பயன்படுத்தி வருகின்றனர்.

இவை தவிர, அதிக உஷ்ணம் கொண்ட வரட்சிக் காலங்களில் கடற்கரைகள், ஆறுகள், குளங்கள், ஏரிகள் போன்ற நீர்நிலைகளை நாடும் மக்கள் தொகையும் அதிகரித்துக் காணப்படுகின்றது. இரவு, பகல் என்று பாராது சனக்கூட்டம் நிரம்பிக் காணப்படும்.

இவ்வாறு மக்கள் மத்தியில் முக்கியத்துவம் பெற்று விளங்கும் இயற்கைப் பிரதேசங்கள் சுத்தம், சுகாதாரமாகப் பேணிப் பாதுகாக்கப்படாத ஒரு அவல நிலையையே தற்காலத்தில் அதிகம் அவதானிக்கக் கூடியதாக உள்ளது. இதில் கடற்கரைப் பிரதேசங்கள் முக்கியத்துவம் பெறுகின்றன.

குறிப்பாக, அம்பாறை மாவட்டத்தில் பொது மக்கள் ஓய்வு மற்றும் பொழுது போக்கிற்காக பயன்படுத்தும் பொது இடங்கள் அதிகமுள்ளன. இவ்வாறான பொது இடங்கள் நீண்ட காலம் சுத்தம் செய்யப்படாது, கவனிப்பாரற்ற நிலையில் மிகவும் கவலைக்கிடமான நிலையில் இருப்பதை அவதானிக்கக் கூடியதாக உள்ளது.





'இயற்கையைப் பாதுகாத்தால், இயற்கை எங்களைப் பாதுகாக்கும்' என்ற வாசகமடங்கிய பதாகையொன்று பிரதான வீதியோரத்தில் பயணிகள் பார்வைக்கு காட்சிப்படுத்தப்பட்டிருந்தது. ஆனால், தற்காலத்தில் இயற்கையின் அருட்கொடையான பொது இடங்கள், இரம்மியப் பிரதேசங்களை பாதுகாப்பதை விடவும் அசிங்கப்படுத்துபவர்களையே அதிகம் காணக் கூடியதாக உள்ளது.

அது மாத்திரமன்றி, கடற்கரைப் பிரதேசங்களை பொழுதுபோக்கிற்கு பயன்படுத்துவதைத் தவிர, போதைப் பொருள் பாவனைக்குப் பயன்படுத்தி வருபவர்கள் தொகையும் அதிகரித்துள்ளதாக கவலை தெரிவிக்கப்படுகின்றது. அண்மைக் காலத்தில் கடற்கரைப் பிரதேசங்களில் மேற்கொள்ளப்பட்ட துப்புரவுப் பணிகளின் போது கிடைக்கப்பெற்ற கழிவுகள் இதனைத் தெளிவாக உறுதிப்படுத்தியுள்ளன.

## சமூகவிரோதிகளின் மறைவிடங்களைத் துப்புரவாக்கும் பணியில் தன்னார்வத் தொண்டர்கள்

இவ்வாறு போதைவஸ்துப் பாவனையின் எச்சங்கள் கடற்கரைப் பிரதேசங்களில் காணப்படுவது சமயப் பிரமுகர்கள், சமூக ஆர்வலர்கள், இயற்கையை நேசிக்கும் இரசிகர்கள், பொதுமக்கள் மத்தியில் அதிகம் கவலையை ஏற்படுத்தியுள்ளது. அது மாத்திரமன்றி, கடற்கரைப் பிரதேசத்திற்கு பயணிக்க இருக்கின்றவர்கள் மனதில் அச்ச நிலையையும் தோற்றுவித்துள்ளது.

குறித்த சில கடற்கரைப் பிரதேசங்கள் முறையான பராமரிப்பின்றி, குப்பை கூளங்களினால் நிறைந்து காணப்படுகின்றன. தெரு மின்விளக்குகளின்றி இருளில் மூழ்கியுள்ளன. கட்டாக்காலிகளின் நடமாட்டம் அதிகரித்துக் காணப்படுகின்றது. குடிநீர், கழிவறை வசதிகளேனும் இல்லாத அவலம் தொடருகின்றது. பொதுமக்கள் கழிவுகளை பாதுகாப்பான முறையில் அகற்றுவதற்கான கழிவுத் தொட்டிகள் இல்லை.

இவ்வாறான காரணங்களினால் கடற்கரைப் பிரதேசங்கள் மனித சஞ்சாரமின்றி வெறிச்சோடிக் காணப்படுகின்றன. உல்லாசத்திற்காகப் பயன்படுத்துபவர்கள் தொகையும் பெருமளவில் குறைவடைந்து செல்வதை காணக் கூடியதாக உள்ளது. இதனை சாதகமாகப் பயன்படுத்தும் விஷமிகள் போதைப்பொருள் பாவனை, சமூக விரோதச் செயற்பாடுகளில் ஈடுபட்டு வருகின்றனர். இது மிகவும் கவலைக் குரியது.

இவ்வாறான நிலையில், தன்னார்வ தொண்டு நிறுவனங்கள், பொது அமைப்புக்கள், சங்கங்கள், கழகங்கள், இளைஞர்கள், பொதுமக்களில் ஒருசாரார் என நல்லுள்ளம் கொண்டவர்கள் இதனை சுத்தம், சுகாதாரமாக பேணிப் பாதுகாக்க வேண்டும் என்ற நல்ல நோக்கில் பணியாற்றி வருகின்றனர். தினசரி, வாராந்தம், மாதாந்தம் என்ற அடிப்படையில் நேரம் வகுத்து துப்புரவுப் பணியில் ஈடுபட்டு வருகின்றனர்.

அக்கரைப்பற்று கடற்கரைப் பிரதேசத்தில் அதிகளவில் இடம்பெறும் துப்புரவுப் பணிகளை இதற்கு சிறந்த உதாரணமாகக் குறிப்பிடலாம். இப்பணியில் ஈடுபடுபவர்கள் பாராட்டுக்குரியவர்கள். அம்பாறை மாவட்டத்தின் ஏனைய பிரதேசங்களும் இதனை சிறந்த முன்னுதாரணமாகக் கொண்டு கடற்கரை மற்றும் இயற்கைப் பிரதேசங்களை சுத்தம் சுகாதாரமாகப் பேணிப் பராமரிக்கும் பணியை எதிர்காலத்தில் வெற்றிகரமாக முன்னெடுக்க வேண்டும். இவ்விடயம் தொடர்பில் சம்பந்தப்பட்ட உள்ளூராட்சி சபைகள், சுகாதார வைத்திய அதிகாரி காரியாலயங்கள் முறையான கண்காணிப்பினை மேற்கொண்டு உதவ வேண்டும்.

**முகம்மட் றிஸான்...**
*(அட்டாளைச்சேனை மத்திய நிருபர்)*

# இங்கிலாந்தில் இருந்து இலங்கையில் சமய சமூக பணியாற்றும் விழிசிட்டி டொக்டர் சீ. நவரத்தினம்

அன்றைய காலத்தில் ஒருவரை இனம் காண்பதற்கு அவரது பெயருக்கு முன்னே அவர் பிறந்த கிராமத்தின் பெயரையும் இணைத்து விடுவார்கள். கிராமத்தை வைத்துத்தான் ஒருவரை இனம் காண்பார்கள். ஆனால் அதில் ஒரு சிலரால் கிராமம் இனங்காணப்படுகிறது என்பதும் உண்மை. அவர்களால் அக்கிராமம் பேசப்படுகிறது. பெருமையுறுகிறது. நினைவில் நிற்கிறது.

விழிசிட்டி என்பது ஒரு சிறிய கிராமம். விழிசிட்டியின் மைந்தர்கள் சிலர் அதன் பெயரைத் துலங்க வைத்துள்ளனர். அவர்களில் முதன்மையில் நிற்பவர் வைத்திய கலாநிதி சீ.நவரத்தினம் அவர்கள். எனக்கு அவருடன் ஏறக்குறைய 55 வருட பரிச்சயம். எனவே அவரது செயல் தன்மையை சந்தேகத்துக்கு இடமின்றி எடுத்துக் கூற முடியும்.

அக்குடும்பம் சமய உணர்வுடன் சமூக உணர்வும் நிறைந்த குடும்பம். எனவே கிராமத்தினது உயர்ச்சியிலும், எழுச்சியிலும், இறை உணர்விலும் அதிக அக்கறை கொண்ட குடும்ப சூழலில் வளர்க்கப்பட்டமையால் உள்ளூர் ஆலயமாகிய வைரவர் கோவில் வீதியைச் சிரமதானம் மூலம் துப்புரவு செய்து வைப்பதிலும், வாராவாரம் வெள்ளி தோறும் அங்கே பஜனை பண்ணுவதில் இளம் பராயம் தொட்டு நவரத்தினம் முக்கிய பங்கேற்றார்.

மருத்துவக் கல்லூரி சென்று மருத்துவராகி இலங்கையில் சேவையாற்றிய காலத்திலும் பின்னர் இங்கிலாந்தில் நிரந்தரமாக வாழ்ந்து கொண்டிருக்கின்ற போதும் இந்த கிராமத்தையும் வைரவ கோவிலையும் அவர் மறந்தார் இல்லை. அந்த ஆலயத்துக்குத் தொடர்ந்து பண உதவி செய்து வந்துள்ளதுடன் ஆலயத்தின் பிரதம குருவினது மாதாந்த சம்பளத்தை அவர் செலுத்தி வந்துள்ளார். மருத்துவக் கல்லூரியில் கற்கின்ற வேளையில் விடுமுறைக் காலங்களில் தனது ஊருக்கு வர தவறியதே இல்லை.

மகாஜனாக் கல்லூரியில் வெகுவிமரிசையாக நடைபெறும் நிறுவியவர் தின பரிசளிப்பு விழாவின் போது நவரத்தினம் அந்தந்த பகுதிக்குரிய அத்தனை பரிசுகளையும் தனதாக்கிக் கொள்வார்.

1951ஆம் ஆண்டு பரிசளிப்பு விழாவின் போது நடந்த ஒரு நிகழ்ச்சி, விழாவிற்கு சமூகம் கொடுத்த அத்தனை பேர்களுடைய கண்களுக்கும் விருந்தாக அமைந்தது. சிறுவன் நவரத்தினத்தின் பெயரை ஒவ்வொரு முறையும் அழைக்கும் போது அவன் தனது பிஞ்சுக் கால்களால் நடந்து மேடையேறிப் பரிசுகளைப் பெற்று வருவதைக் கண்டு கொல்லாங்கலட்டியைச் சேர்ந்த பெரியவர் ஒருவர் மனம் பொறுக்காமல், 'குழந்தை எத்தனை தரம் நீ நடந்து மேடை ஏறுவாய? நான் இம்முறை உன்னை தூக்கிச் செல்வேன்' என அடம் பிடித்து அவரைத் தூக்கி மேடை நோக்கி சென்ற காட்சி இன்றும் பலர் நினைவில் நிற்கிறது.

மருத்துவரான பின்னர் தனது பயிற்சி இலங்கையில் அக்காலத்தில் பிரபலமாயிருந்த பேராசிரியர் மில்ரோய் போல் அவர்களின் கீழும் மகப்பேற்று வைத்தியத்தில் புகழ் மிக்க பேராசிரியர் பிறின்ஸ் இராஜரத்தினத்தின் கீழும் பயிற்சி பெற்றார். பின்னர் யாழ் மருத்துவசாலையில் மூன்று ஆண்டுகள் (1965_1968) சேவையாற்றியது ஊர்வாசிகளுக்கோர் வரப்பிரசாதமாக அமைந்த காலம் எனலாம்.



யாழ்ப்பாணத்தில் பிரபல வைத்தியராக விளங்கிய தர்மலிங்கம் அவர்களின் மகள் தர்மாம்பாள் அவர்களை திருமணம் செய்தார். அதன் பின்னர் மேற்படிப்புக்காக 1968ஆம் ஆண்டில் இங்கிலாந்து சென்ற அவர் தனது கடினமான உழைப்பின் காரணமாக தோற்றிய அத்தனை உயர் கல்வித் தகமை களிலும் சிறப்பு தேர்ச்சி பெற்றுள்ளார். தனது கல்வித் தைகமைக்கும் மனதிற்கும் உகந்த வேலை கிடைத்தமையால் இங்கிலாந்திலேயே தங்கிவிட்டார்.

இங்கிலாந்து வந்தடைந்து ஆறு வருடங்களிலேயே வாதவியல் துறை ஆலோசகராக நியமனம் பெற்றார். 36 வருட சேவையின் பின் ஓய்வு பெற்ற பின்னரும் கௌரவ ஆலோசகர் சேவையாற்றுகிறார். தமிழர்களின் உடற்கல்வி மற்றும் மருத்துவத் தேவைகள் பற்றிய அறிவு வளர்ச்சி ஊக்குவிக்கும் முகமாக 1979 ஆண்டிலே தமிழர் மருத்துவ நிறுவனம் ஒன்றினை அமைத்து அதன் இயக்குனர் சபையிலும் சேவையாற்றியுள்ளார்.

தனது பாடசாலையான மகாஜனாவிற்கு உதவ வேண்டும் என்ற நோக்கில் கல்லூரிக்கான பழைய மாணவர் சங்க கிளை ஒன்றினை நிறுவி அதன் தலைமையை 1987 முதல் 1991 வரை ஏற்று பல விடயங்களிலும் மகாஜனாவின் வளர்ச்சிக்கு உறுதுணையாக நின்றுள்ளார் லண்டனில் நிறுவப்பட்ட மகாஜன நூற்றாண்டு விழா நிதியத்தின் காப்பாளராகவும் செயற்பட்டு வருகின்றார்.

அவரது நோக்கம் தனது கிராமத்தை மீளக் கட்டியெழுப்புவது. மீண்டும் அவரது பிறந்தகம் புதுமை பொலிவுடன் விளங்க வேண்டும் என்ற ஆசையில் ஏனைய இடங்களில் வசித்து வரும் ஊரவர்களைத் திரும்பவும் ஊருக்கு வந்துவிட வேண்டும் என வினயமாக வேண்டுகோள் விடுத்துள்ளார். ஊரில் உள்ள ஆலயங்கள் புணருத்தாரணம் செய்வதற்காக பணச் செலவை ஏற்க தயாராக இருப்பதுடன் மக்களுக்கு உதவக் கூடிய பல செயற்திட்டங்களும் உதவ முன் வந்துள்ளார். மொத்தத்தில் வைத்தியர் நவரத்தினம் என்றும் எப்பொழுதும் தன் கிராமத்தின் வளர்ச்சி பற்றிய கனவுகளுடன் வாழும் பெருமனிதர்.

**எச்.எச்.விக்ரமசிங்க...**

# கல்வியினால் நேர்மையான சமூகம் உருவாக வேண்டும்!

## கல்முனை வடக்கு பிரதேச செயலாளர் அதிசயராஜ்

கல்வி நேர்மையான சமுதாயத்தை உருவாக்க வேண்டும் என்று கல்முனை வடக்கு பிரதேச செயலாளர் ரி.ஜே. அதிசயராஜ் தெரிவித்தார்.

கிழக்கு மாகாணத்தில் புகழ் பெற்ற கல்முனை கார்மேல் பற்றிமா தேசிய கல்லூரியில் புலமையாளர் கௌரவிப்பு விழா அதிபர் அருட்சகோதரர் சந்தியாகு தலைமையில் அண்மையில் நடைபெற்றபோது அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். கடந்த ஆண்டு நடைபெற்ற தரம்_ 5 புலமைப் பரிசில் பரீட்சையில் கல்லூரி சார்பில் சித்தி பெற்ற 222 மாணவர்களுக்கு பாராட்டும் கௌரவமும் வழங்கப்பட்டது. பிரதம அதிதியாக கல்முனை வடக்கு பிரதேச செயலாளர் ரி.ஜே. அதிசயராஜ் கலந்து சிறப்பித்தார்.

கௌரவ அதிதியாக கல்முனை வலய பிரதி கல்வி பணிப்பாளர் திருமதி வரணியா சாந்தரூபன், சிறப்பு அதிதிகளாக கல்முனை தமிழ் பிரிவு கோட்டக் கல்வி பணிப்பாளர் எஸ். சரவணமுத்து, சம்மாந்துறை வலய உதவி கல்வி பணிப்பாளர் வி.ரி. சகாதேவராஜா, கல்முனை வலய ஆசிரிய ஆலோசகர் கே சாந்தகுமார் ஆகியோர் கலந்து கொண்டு இந்த கௌரவங்களை வழங்கி வைத்தார்கள்.









பற்றிமாவில் 222 புலமையாளர் கௌரவிப்பு

அங்கு அவர் மேலும் உரையாற்றுகையில் "மாணவர்கள் வெறும் புத்தகப் படிப்பை மாத்திரம் நம்பியிருக்கக் கூடாது. நல்ல விழுமியப் பண்புகளை வளர்த்து கொள்வதோடு ஏனைய திறன்களை வளர்த்துக் கொள்ள வேண்டும். இன்று எத்துறையை எடுத்தாலும் நேர்மையற்ற போக்கினை காண்கிறோம். பெற்றோலுக்கான வரிசையில் கூட நேர்மையீனம். சுயநலமற்ற பண்புகள் உருவாக வேண்டும்" என்றார்.

உதவி கல்வி பணிப்பாளர் வி.ரி.சகாதேவராஜாவும் (விஷேட அதிதி) உரையாற்றினார்.

கடந்த ஆண்டு பரீட்சையில் 190 புள்ளிகளைப் பெற்று சாதனை புரிந்த செல்வன் தவராசா ஹேஷானந்த் உள்ளிட்ட 222 புலமையாளர்கள் நினைவுச் சின்னங்கள் வழங்கி பாராட்டப்பட்டனர்.

கலந்து கொண்ட அதிதிகளுக்கும் அதிபரால் கௌரவம் வழங்கப்பட்டது.

**வி.ரி.சகாதேவராஜா...**
*(காரைதீவு குறூப் நிருபர்)*

# வரலாற்றின் வரிகளை வரைந்த பன்முக ஆளுமை மிகுந்தவர் பேராசிரியர் எம்.ஏ. நுஃமான்


**நவீன தமிழ் உரைநடைக்கான இலக்கணத்தை உருவாக்க பணியாற்றிய பேராசிரியர் எம்.ஏ.நுஃமான் தமிழ் இலக்கியச் சூழலில் மிக முக்கிய விமர்சகர்களில் ஒருவராவார். கல்வித்துறை சார்ந்தும், இலக்கியம் சார்ந்தும் இவர் வெளியிட்ட புத்தகங்கள் ஏராளம். யாழ் பல்கலைக்கழகத்திலும், பின்னர் பேராதனை பல்கலைக்கழகத்தில் தமிழ்ப் பேராசிரியராகப் பணியாற்றியவர்.**

1980களின் பிற்பகுதியில் மரணம் கவிந்த இருள் எங்கும் படர்ந்த கால கட்டத்திலும், அதன் மத்தியிலும் ஒரு நம்பிக்கைச் சுடருடன் வாழ்வு தொடர்கின்றது. இதுவே இன்றைய எமது யதார்த்தமாகும்.இந்த யதார்த்தமே ஈழத்துக் கவிதையின் பிரதான கருப்பொருளாக அமைந்தது என 1989 இல் சார்ள்ஸ் எழுதிய 'இன்னமும் இருட்டினில்' கவிதைத் தொகுதியின் முன்னுரையில் பேராசிரியர் நுஃமான் குறிப்பிட்டுள்ளார்.

இந்த யதார்த்தத்தைப் பிரதிபலிக்கும் பல கவிதைத் தொகுதிகள் சமீப காலத்தில் இங்கு வெளிவந்துள்ளன. ஆற்றல் மிகுந்த இளங் கவிஞர்கள் பலரை இந்த யதார்த்தம் உருவாக்கி வளர்த்துள்ளது. ஒடுக்குமுறையின் கொடூரத்தையும் மக்களின் அவலத்தையும், விடிவிற்கான வேட்கையையும், சுபீட்சமான ஒரு எதிர்காலக் கனவினை இக்கவிஞர்கள் தங்கள் படைப்புகளில் வெளிப்படுத்துகிறார்கள் என்றும் பேராசிரியர் நுஃமான் தன் முன்னுரையில் தெரிவித்துள்ளார்.

எம்.ஏ. நுஃமானின் பிறந்த தினம் ஒகஸ்ட் 10, 1944 ஆகும். ஈழத்து தமிழ் அறிஞரான பேராசிரியர் நுஃமான் கவிஞர், எழுத்தாளர், விமர்சகர், மொழிபெயர்ப்பாளர், ஆய்வாளர், இதழாளர் என பல துறைகளில் பன்முக ஆற்றலுடன் செயல்பட்டவர்.

"ஒருவருக்கு ஒற்றை அடையாளம் இல்லை. நம் எல்லோரது அடையாளமும் பன்முகப்பட்டதுதான். தொழிலைப் பொறுத்தவரை நான் ஒரு பேராசிரியன். மாணவர்களுக்குக் கல்வி புகட்டுவதிலே, ஆய்வுத் துறையில் ஈடுபடுவதிலே ஒரு திருப்தி இருக்கின்றது" எனக் கூறும் பேராசிரியர் நுஃமான் தன் பதினாறம் வயதில் கவிதை எழுதத் தொடங்கியவர்.








கவிஞர் நீலாவணன் வழியாக இலக்கியம் அறிமுகமானது. நீலாவணன்தான் நுஃமானுக்கு மகாகவி, முருகையன்,புரட்சிக் கமால் அண்ணல் போன்றோரின் கவிதைகளை அறிமுகப்படுத்தினார்.

1967 இற்குப் பின் முற்போக்கு எழுத்தாளர் சங்கத் தொடர்பால் தனிமனித உணர்வுகள், சமூகப் பிரச்சினைகளை சார்ந்த படைப்புகளைப் படைத்தார். யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் பணியாற்றிய பொழுது கவிதாநிகழ்வு என்னும் நிகழ்ச்சியை நடத்தினார். கவியரங்குகளில் கலந்து கொண்டு கவிதை பாடியிருக்கிறார்.

கவியரங்குகளின் போக்கு பற்றி இவர் வரைந்த ஒரு கட்டுரை கவியரங்குகள் சமூகத்தில் பெற்றிருந்த ஏற்ற இறக்கங்களைக் குறிப்பிடுவதாகும். கவிதை பற்றிய தம் எண்ணங்களை 'அழியா நிழல்கள்' தொகுப்பில் பதிவு செய்துள்ளார். பாலஸ்தீன நாட்டுக் கவிஞர்கள் எழுதிய கவிதைகளை நுஃமான் மொழிபெயர்த்துள்ளார். 'பதினொரு ஈழத்துக் கவிஞர்கள்' என்ற நூல் குறிப்பிடத்தக்க நூலாகும். இருபதாம் நூற்றாண்டின் இடைப்பகுதியில் தோன்றிய ஈழத்துப் புதுக்கவிதை வளர்ச்சியை அறிவதற்கு இந்த நூல் பயன்படும்.

பேராசிரியர் நுஃமான் முப்பதுக்கும் மேற்பட்ட நூல்களை படைத்துள்ளார். மொழியும் இலக்கியமும் (2006), மொழியியலும் இலக்கியத் திறனாய்வும் (2001), மார்க்சியமும் இலக்கியத் திறனாய்வும் (1987), திறனாய்வுக் கட்டுரைகள் (1986), பாரதியின் மொழிச்சிந்தனைகள் (1999), இருபதாம் நூற்றாண்டு ஈழத் தமிழ் இலக்கியம்(1979), அடிப்படைத் தமிழ் இலக்கணம் (2007) ஆகியன பேராசிரியர் நுஃமானின் முக்கியமான விமரிசன நூல்கள்.

அத்துடன் மழைநாட்கள் வரும் (1983), அழியா நிழல்கள் (1982), தாத்தாமாரும் பேரர்களும் நெடுங்கவிதைகள்(1977), பதினொரு ஈழத்துக் கவிஞர்கள் (1984) ஆகிய பேராசிரியர் நுஃமானின் முக்கியமான கவிதை நூல்கள் மிகப் பரவலாக அறியப்பட்டவை.

"மொழிபெயர்ப்பை ஓர் இலக்கியப் பணியாக மட்டுமின்றி ஒரு சமூக, அரசியல் பணியாகவும் நான் கருதுகின்றேன். எனது மொழிபெயர்ப்புகள் அத்தகையனதான். எனது மொழிபெயர்ப்புகள் பெரும்பாலும் மூன்றாம் உலகப் படைப்புகள் தொடர்பானவைதான். நான் மொழிபெயர்த்த பலஸ்தீனக் கவிதைகள் பலஸ்தீன மக்களின் விடுதலைப் போராட்டத்துக்கு எனது ஆதரவை தெரிவிப்பதாக மட்டுமின்றி எல்லா நாடுகளிலும் ஒடுக்கப்பட்ட மக்களின் போராட்ட உணர்வின் வெளிப்பாடாகவும் உள்ளன" எனத் தெரிவிக்கும் பேராசிரியர் நுஃமான், பாலஸ்தீனக் கவிதைகள், முப்பது கவிஞர்களின் 109 கவிதைகள் (2008), மொகமூத் தர்விஸ் கவிதைகள் (2008), பாலஸ்தீனக்கவிதைகள், 15 கவிஞர்களின் 71 கவிதைகள் (2000), காற்றில் மிதக்கும் சொற்கள் (மலாய் மொழி கவிதைகள்), இரவின் குரல் (இந்தோனேசிய மொழி கவிதைகள்) ஆகிய மொழிபெயர்ப்புக் கவிதை நூல்கள் பலவற்றையும் வெளியிட்டுள்ளார்.

பன்முக ஆற்றல் மிகுந்த பேராசிரியர் நுஃமானின் சிறப்பான கவிதையான 'எங்கள் கிராமத்து மண்ணும், வியட்நாமின் குருதியும்' 1970களின் பிற்காலத்தில் மிகப் பரவலாக அறியப்பட்டதும், பிரபல்யமானதாகும். நவீனத் தமிழ் இலக்கிய உலகில் மிகுந்த ஆளுமை மிக்க கவிஞரான பேராசிரியர் எம்.ஏ. நுஃமானின் கவிதைகள் காலங்காலமாக நிலைத்து நிற்பது போல, தமிழ் உரைநடைக்கான இலக்கணத்தை உருவாக்க பேராசிரியர் எம்.ஏ.நுஃமான் ஆற்றிய பங்கு அளப்பரியதாகும்.

**ஐங்கரன் விக்கினேஸ்வரா...**

# பாகிஸ்தான் உயர்ஸ்தானிகராலயத்தினால் இலங்கை மாணவர்களுக்கு புலமைப்பரிசில்

**பாகிஸ்தான் உயர்ஸ்தானிகராலயத்தால், சிறப்புத் தேர்ச்சி பெற்ற இலங்கை உயர்தர மாணவர்களுக்கான புலமைப்பரிசில் வழங்கும் வைபவம், கொழும்பு பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் அண்மையில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. ஓகஸ்ட் 14 ஆம் திகதி கொண்டாடப்பட்ட பாகிஸ்தானின் 75 ஆவது சுதந்திரதினத்தின் தொடர்ச்சியாக இந்த விழா நடைபெற்றது.**



2006 ஆம் ஆண்டு முதல் உயர்தர மற்றும் சாதாரணதர இலங்கை மாணவர்களுக்கு பாகிஸ்தான் அரசாங்கத்தினால் புலமைப்பரிசில்கள் வழங்கப்பட்டு வருகின்றன. மேலும், இதுவரை சுமார் 2300 இலங்கை மாணவர்கள் இந்த ஜின்னா புலமைப்பரிசில் திட்டத்தின் மூலம் பயனடைந்துள்ளனர்.

பாகிஸ்தான் உயர்ஸ்தானிகர் மேஜர் ஜெனரல் (ஓய்வுநிலை) உமர்பாரூக் பர்கி விழாவிற்கு வருகை தந்தோரை வரவேற்றார். சிறந்த கல்வி வாய்ப்புகளுடன் இளைஞர்களின் திறன்களை மேம்படுத்துவதில் இலங்கையின் பெருமைமிக்க பங்காளியாக பாகிஸ்தான் திகழ்வதாகவும், மருத்துவம், பல்மருத்துவம், மருந்தியல் மற்றும் பொறியியல் ஆகிய துறைகளில் பாகிஸ்தான் தொழில்நுட்ப உதவித் திட்டம் (PTAP) மற்றும் அல்லாமா இக்பால் புலமைப்பரிசில் உட்பட பல்வேறு புலமைப்பரிசில் திட்டங்களின் கீழ் பாகிஸ்தான் அரசாங்கம் 1976 ஆம் ஆண்டு முதல் இலங்கை மாணவர்களுக்கு உயர்கல்வி புலமைப்பரிசில்களை வழங்கி வருவதாகவும் அவர் தனது வரவேற்பு உரையில் குறிப்பிட்டார்.

தனது உரையின் இறுதியில் பாகிஸ்தான் உயர்ஸ்தானிகர், இவ்வைபவத்திற்கு வருகை தந்து சிறப்பித்த கௌரவ விருந்தினர்களுக்கு தமது நன்றியினை தெரிவித்ததோடு, இருநாடுகளினதும் இருதரப்பு உறவின் முக்கியத்துவத்தையும், வலுவான இந்த உறவினை மென்மேலும் வலுப்படுத்துவதை பாகிஸ்தான் நோக்கமாகக் கொண்டுள்ளது என்றும் குறிப்பிட்டார்.

இந்நிகழ்வில் கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த பிரதம அதிதியாக கலந்து சிறப்பித்தார். அவர் தனது உரையில், பாகிஸ்தான் அரசாங்கத்தின் இப்புலமைபரிசில் திட்டத்தை பாராட்டியதோடு ஜின்னா புலமைப்பரிசில் திட்டத்திற்கு தெரிவு செய்யப்பட்ட மாணவர்களையும் பாராட்டினார்.

மேலும் அவரது உரையில், பாகிஸ்தான் நாட்டின் உருவாக்கத்திற்கு காரணமான பாகிஸ்தானின் தேசியதந்தை, குவாய்த் இஆசாம், முஹம்மது அலிஜின்னாவுக்கு தமது மரியாதையை செலுத்தியதோடு, இந்த புலமைப்பரிசில்கள் இலங்கை மாணவர்களுக்கு எவ்வித பாரபட்சமின்றி வழங்கப்படுவது மிகவும் வரவேற்கத்தக்க விடயமாகும் எனவும் குறிப்பிட்டார்.

வலுவான பாகிஸ்தான் மற்றும் இலங்கை ஆகிய நாடுகளுக்கிடையிலான உறவுகளை நினைவு கூர்ந்த அவர், 2006 ஆம் ஆண்டு முதல் பல இலங்கை மாணவர்களுக்குப் பயனளித்து வரும் ஜின்னா புலமைப்பரிசில் திட்டத்தைப் பாராட்டியமை குறிப்பிடத்தக்கது.

# மோடியின் அறிவிப்பினால் விவசாயிகள் மகிழ்ச்சி

**இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி தலைமையிலான மத்திய அமைச்சரவை, அனைத்து நிதி நிறுவனங்களுக்கும் குறுகிய கால விவசாயக் கடன்களுக்கான 1.5 சதவீத வட்டி மானியத்தை விவசாயிகளுக்கு அளிக்கப்படும் 3 இலட்சம் ரூபாய் வரை கடன் வழங்க ஒப்புதல் அளித்துள்ளது.**



2022_23 முதல் 2024_25 நிதியாண்டுக்குப் பொதுத்துறை வங்கிகள், தனியார் துறை வங்கிகள், சிறு நிதி வங்கிகள், பிராந்திய கிராமப்புற வங்கிகள், கூட்டுறவு வங்கிகள் மற்றும் கணினிமயமாக்கப்பட்ட பிஏசிஎஸ் உள்ளிட்ட கடன் வழங்கும் நிறுவனங்களுக்கு 1.5 சதவீதம் வட்டி மானியம் வழங்கப்படும்.

விவசாயிகளுக்கு அளிக்கப்படும் 3 இலட்சம் ரூபாய் வரை கடனுக்கு ஒப்புதல் அளிக்கப்பட்ட 1.5 சதவீத வட்டி மானியத்திற்கு இந்தக் காலகட்டத்திற்கு மத்திய அரசுக்குக் கூடுதலாக ரூ.34,856 கோடி பட்ஜெட் ஒதுக்கீடுகள் தேவைப்படும் அல்லது கூடுதல் சுமை உருவாகும்.

விவசாயிகளுக்கு அளிக்கப்படும் கடன்களுக்கு வட்டி மானியத்தை அதிகரிப்பதன் மூலம் விவசாயத் துறையில் பணப்புழக்கம் அதிகரிப்பது மட்டும் அல்லாமல் இத்துறையில் கடன் வழங்கும் நிறுவனங்களின் நிதி ஆரோக்கியத்தையும் உறுதி செய்யும் என்று மத்திய அரசு கூறியது.

விவசாயிகளுக்குக் குறுகிய காலத்திற்குக் கடன் வழங்க ஊக்குவிக்கப்படுவதன் மூலம் கால்நடை வளர்ப்பு, பால் பண்ணை, கோழி வளர்ப்பு மற்றும் மீன் பிடி உள்ளிட்ட அனைத்து வகையான நடவடிக்கைகளுக்கும் குறுகிய கால விவசாயக் கடன்கள் வழங்கப்படுவதால், இந்தத் திட்டம் இத்துறையில் வேலைவாய்ப்பை உருவாக்க வழி வகுக்கும்.

# தேசிய ரீதியில் முதன்மையான கல்வி வலயமாக அக்கரைப்பற்று கல்வி வலயம் மிளிர வேண்டும்

**தேசிய ரீதியில் முதன்மைக் கல்வி வலயமாக அக்கரைப்பற்று கல்வி வலயம் மிளிர வேண்டும். அந்த உயர்ந்த இலக்கை அடைவதற்கு கல்விசார் மற்றும் கல்விசாரா உத்தியோகத்தர்கள், ஊழியர்கள் நிறைவான ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என்று அக்கரைப்பற்று வலயக் கல்விப் பணிப்பாளர் அஷ்ஷெய்க் ஏ.எம்.றஹ்மத்துல்லாஹ் (நழீமி) கேட்டுக் கொண்டார்.**

கிழக்கு மாகாணக் கல்வி அமைச்சின் செயலாளர் எச்.ஈ.எம்.டபிள்யூ.ஜீ.திசாநாயக மற்றும் கிழக்கு மாகாணக் கல்விப் பணிப்பாளர் நகுலேஸ்வரி புள்ளநாயகம் ஆகியோரிடமிருந்து நிரந்தர நியமனக் கடிதம் பெற்றுக் கொண்ட, இலங்கை கல்வி நிர்வாக சேவை முதலாந்தர உத்தியோகத்தர் அஷ்ஷெய்க் ஏ.எம்.றஹ்மத்துல்லாஹ் (நழீமி) அக்கரைப்பற்று வலயக் கல்விப் பணிப்பாளராக அண்மையில் கடமையேற்றுக் கொண்டார்.

அதனைத் தொடர்ந்து நடைபெற்ற கூட்டத்தில் அவர் உரையாற்றினார். பணிப்பாளர் றஹ்மத்துல்லாஹ் மேலும் கூறுகையில், "கொவிட் 19 அசாதாரண நிலை மற்றும் பொருளாதார நெருக்கடி நிலைமை காரணமாக பாதிக்கப்பட்ட மாணவர்களின் கல்வியை மீளக்கட்டியெழுப்ப வேண்டிய பாரிய பொறுப்பு கல்வித் துறையினர்களாகிய எங்களுக்குண்டு. அதற்காக அர்ப்பணிப்பு, கூட்டுப் பொறுப்புடன் எதிர்காலப் பணிகளை திட்டமிட்ட அடிப்படையில் முன்னெடுக்க வேண்டும். எதிர்காலத்தில் மாணவர்களை நாட்டுக்குப் பயன்மிக்க சிறந்த கல்வியியலாளர்களாகவும், சமூகத்தை வழிநடத்தக் கூடிய நல்ல ஆளுமையுள்ள தலைவர்களாகவும் புடம்போட வேண்டிய பாரிய பொறுப்பு எங்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

அந்த எதிர்பார்ப்புக்களிலிருந்து நாங்கள் சிறிதளவேனும் விலகிவிடாது கல்விப் பணிகளை முன்னெடுக்க வேண்டும். அக்கரைப்பற்று கல்வி வலயம் கடந்த காலங்களில் தேசிய ரீதியில், மாகாண மட்டத்தில் பல வெற்றிகள், சாதனைகளைச் சந்தித்துள்ளது. இதற்கு நாங்கள் பேதங்களின்றி ஒரு குடும்பமாக, கூட்டுப் பொறுப்புடன் தொழிற்பட்டமையே பிரதான காரணமாகும். தற்பொழுது தேசிய ரீதியில் முதலாமிடம் என்ற உயர்ந்த இலக்குடன் நாங்கள் எதிர்காலப் பணிகளை முன்னெடுக்க வேண்டும்.

## வலயக் கல்விப் பணிப்பாளர் றஹ்மத்துல்லாஹ்





அக்கரைப்பற்று வலயக் கல்விப் பணிப்பாளராகக் கடமையாற்றுவது மிகவும் சுலபமாகும். உத்தியோகத்தர்கள் பணிகளை தாங்களே ஏற்று சுமப்பவர்களாகவும், பொறுப்புக் கூறுபவர்களாகவும் விளங்குவதே இதற்கு பிரதமான காரணமாகும். வேறு கல்வி வலயங்களில் இந்நிலையைக் காண்பது அரிதென்பது எனது தனிப்பட்ட அபிப்பிராயமாகும்.

அக்கரைப்பற்று, அட்டாளைச்சேனை, பொத்துவில் பிரதேசங்களில் அமைந்துள்ள 72 பாடசாலைகளிலுள்ள, சுமார் 33 ஆயிரம் மாணவர்களின் கல்வி எங்களது கைகளில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. வலயக் கல்விப் பணிப்பாளர், 02 ஆயிரத்திற்கும் அதிகமான அதிபர்கள், ஆசிரியர்கள், கல்விசார், கல்விசாரா உத்தியோகத்தர்கள், இதர கல்வித்துறை சார்ந்த பணியாளர்கள் அனைவரும் மாணவர்களுக்காகத்தான் என்பதை எவரும் இலகுவில் மறந்து தொழிற்படலாகாது.

நாம் ஏற்றுள்ள பணி பாரிய சுமையாகும். இதனை சிறந்தமுறையில் வெற்றி கொள்வதற்கு நாங்கள் ஒவ்வொருவரும் திடசங்கற்பம் பூண வேண்டும்.

அக்கரைப்பற்று கல்வி வலயத்திலுள்ள எந்தவொரு மாணவரும், எந்தவொரு பாடத்திலும் சித்தியின்மையைப் பெற்றுவிடக் கூடாது என்பதில் நாங்கள் மிகவும் அவதானமாக இருக்க வேண்டும். அதற்கேற்ற வகையில் எங்களது எதிர்காலப் பணிகள் புதிய உத்வேகத்துடன் முன்னெடுக்கப்படும். இரவு பகலாக எங்களை மாணவர் சமூகத்திற்காக அர்ப்பணிக்க வேண்டும்" என்று குறிப்பிட்டார்.

பிரதிக் கல்விப் பணிப்பாளர் (நிர்வாகம்) ஏ.ஜி.பஸ்மில் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில், பிரதிக் கல்விப் பணிப்பாளர்கள் எம்.எம்.சித்தி பாத்திமா, ஏ.எம்.ஹஸீன், ஏ.எஸ்.அஹமட் கியாஸ், என்.அப்துல் வஹாப், கணக்காளர் கே.லிங்கேஸ்வரன், நிர்வாக உத்தியோகத்தர்; ஏ.எம்.றிம்ஸான், உதவிக் கல்விப் பணிப்பாளர்கள், ஆசிரிய ஆலோசகர்கள், கோட்டக் கல்வி அதிகாரிகள், அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர்கள், அலுவலகப் பணியாளர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

**முகம்மட் றிஸான்...**
*(அட்டாளைச்சேனை மத்திய நிருபர்)*

# QR முறையை உருவாக்க பங்களித்தோருக்கு நன்றி

## சம்பந்தப்பட்டோரை சந்தித்த அமைச்சர் கஞ்சன



தேசிய எரிபொருள் அனுமதி (QR) முறையை உருவாக்குவதற்கு பங்களிப்புச் செய்த தரப்பினரை மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சர் கஞ்சன விஜயசேகர நேற்று சந்தித்துள்ளார்.

ICTA, Dialog மற்றும் Millennium IT நிறுவனங்கள் QR முறையை உருவாக்கி மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சிற்கு இலவசமாக வழங்கியுள்ளன. நேற்று அந்த நிறுவனங்களுடன் எதிர்கால அபிவிருத்தி நடவடிக்கைகள் தொடர்பில் உடன்படிக்கை மேற்கொள்ளப்பட்டது. "இதற்கு எனக்கு உறுதுணையாக இருந்த மூன்று நிறுவனங்கள் மற்றும் அதன் அதிகாரிகள் மற்றும் இதை நடைமுறைப்படுத்த முன்வந்த அனைத்து பொது மற்றும் தனியார் நிறுவனங்கள் மற்றும் அனைத்து தரப்பினருக்கும் மீண்டும் ஒருமுறை நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன்" என அமைச்சர் கஞ்சன விஜேசேகர தனது பேஸ்புக் தளத்தில் தெரிவித்துள்ளார்.

# கொழும்பில் சில பகுதிகளுக்கு இன்று 10 மணி நேர நீர் வெட்டு



கொழும்பு மாநகர சபை எல்லைக்குட்பட்ட சில பகுதிகளில் இன்று சனிக்கிழமை (20) பத்து மணிநேர நீர்வெட்டு அமுல்படுத்தப்படவுள்ளதாக தேசிய நீர்வழங்கல், வடிகாலமைப்பு சபை தெரிவித்துள்ளது.

அத்தியாவசிய மேம்படுத்தல் பணிகளுக்காக இவ்வாறு நீர் விநியோகத் தடை செய்யப்படவுள்ளதாக அந்த சபை தெரிவித்துள்ளது.

அதற்கமைய, கொழும்பு 05 மற்றும் 06 ஆகிய பகுதிகளில் இன்று சனிக்கிழமை இரவு 11 மணி முதல் நாளை ஞாயிற்றுக்கிழமை (21) காலை 09 மணி வரை 10 மணி நேர நீர்வெட்டு அமுலாக்கப்படவுள்ளது.

அத்துடன், கொழும்பு 04 பகுதிக்கு குறைந்த அழுத்தத்துடன் நீர் விநியோகிக்கப்படுமெனவும் நீர்வழங்கல், வடிகாலமைப்பு சபை மேலும் தெரிவித்துள்ளது.

## கடற்படையின் திடீர் சுற்றிவளைப்பு

# யாழ்.மாதகல் கடற்கரையில் 93 கிலோ கேரள கஞ்சா மீட்பு

யாழ்ப்பாணம் மாதகல், சவுக்கடி கடற்கரைப் பகுதியில் நேற்று (19) இலங்கைக் கடற்படையினர் நடத்திய திடீர் ரோந்துப் பணியின் போது, சுமார் 40 பொதிகள் கொண்ட 93 கிலோ கஞ்சா கைப்பற்றப்பட்டன.

வடக்கு கடற்படைக் கட்டளைக் குட்பட்ட இலங்கை கடற்படைக் கப்பலான அக்போவினால், மாதகல், சவுக்கடி கடற்கரைப் பகுதியில் மேற்கொள்ளப்பட்ட விசேட ரோந்து நடவடிக்கையின் போது, சவுக்கடி கடற்கரையில் சாக்குப் பைக்குள் வைக்கப்பட்டிருந்த நாற்பது (40) பார்சல்களில் அடைக்கப்பட்ட 93 கிலோ கேரள கஞ்சா கைப்பற்றப்பட்டது. கடற்படையின் திடீர் ரோந்து நடவடிக்கையின் காரணமாக கடத்தல்காரர்கள் இந்த கேரள கஞ்சாவை கரைக்கு கொண்டு வர முடியாமல் வைத்து விட்டு சென்றிருக்கலாமென நம்பப்படுகிறது.

## கட்டுப்பாட்டை...

அனுமதிக்கப்பட்டுள்ளனர். காலியிலிருந்து வந்த லொறி , சாரதியின் கட்டுப்பாட்டை இழந்து கடைக்குள் புகுந்ததில் 44 வயதுடைய இரண்டு பிள்ளைகளின் தந்தையான கடை உரிமையாளரும் பெண் ஒருவரும் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளனர். இந்த விபத்தில் லொறியின் சாரதி கடை உரிமையாளரின் மனைவி உட்பட இருவர் காயமடைந்து வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

வர்த்தக நிலையமும் பலத்த சேதமடைந்தது. கொஸ்கொட பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## ஊழல் எதிர்ப்பு...

ஊழல் எதிர்ப்பு சட்டத்தை திருத்தம் செய்வதற்காக நியமிக்கப்பட்டுள்ள குழுவுடனான விசேட மீளாய்வுக் கூட்டமொன்று நீதியமைச்சர் விஜேதாச ராஜபக்சவின் தலைமையில் நீதிமைச்சின் கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது.

இதன்போது புதிய சட்டத்தில் உள்ளடக்கப்பட்டுள்ள விடயங்கள் தொடர்பில் விரிவாக கலந்துரையாடப்பட்டுள்ளதுடன் சட்டத்தை விரைவாக நிறைவேற்ற வேண்டியதன் அவசியத்தையும் அவர் இதன்போது வலியுறுத்தியுள்ளார்.

ஊழலுக்கு எதிரான ஐக்கிய நாடுகள் பிரகடனத்தை அடிப்படையாகக் கொண்டு புதிய சட்டம் தயாரிக்கப்படும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருவதுடன் மேற்படி பேச்சுவார்த்தையில் நீதியமைச்சின் செயலாளர் வசந்தா பெரேரா மற்றும் அதிகாரிகள், நீதி அமைச்சு, சட்ட மா அதிபர் திணைக்களம்,சட்ட மூலம் தயாரிப்பு திணைக்களம்,இலஞ்ச,ஊழல் விசாரணை ஆணைக்குழுவின் பிரதிநிதிகளும் கலந்து கொண்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## அமைச்சர் சுசில் தலைமையில்...

மற்றும் கிளிநொச்சியில் நடைபெற்றன.

கிளிநொச்சி மாவட்டத்துக்குரிய கலந்துரையாடல் கிளிநொச்சி மாவட்டச் செயலகத்திலும், யாழ்ப்பாணம் மாவட்டத்துக்குரிய கலந்துரையாடல் கோப்பாய் தேசிய கல்வியியற் கல்லூரியிலும் இடம்பெற்றது.

கல்விச் சமூகம் எதிர்கொள்ளுகின்ற பிரச்சினைகளை அடையாளம் கண்டு, அவை தொடர்பான நடவடிக்கைகள் தொடர்பாக ஆராயும் வகையில் இந்தக் கலந்துரையாடல் நடைபெற்றது.

மாகாணக் கல்வி அமைச்சின் அதிகாரிகள், வலயக் கல்விப் பணிப்பாளர்கள், அதிபர்கள் ஆகியோர் இதில் கலந்துகொண்டு தங்கள் கருத்துக்களை முன்வைத்தனர்.

## சிறுவர், சிறுமியருக்கு ...

இதன்போது, பலர் சிறுவர்களை பல்வேறுப்பட்ட குற்றச் செயல்களில் ஈடுபடுத்துகின்றனர்.

இதுபோன்ற பல சம்பவங்கள் தற்போது பதிவாகியுள்ளதாக தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையின் தலைவர் கலாநிதி உதயகுமார அமரசிங்க தெரிவித்தார். இணையத்தளமூடாக சிறுவர்கள் பாலியல் ரீதியான தொந்தரவுக்கு உட்படுகிறார்கள் என்பது தொடர்பிலான தகவல்களை 1929 என்ற இலக்கத்துக்கு வழங்குமாறும் அவர் கோரியுள்ளார்.

## மருந்து தட்டுப்பாடுகளுக்கு...

பெற்றுக் கொடுக்கப்படும் என்றும் தெரிவித்துள்ளார். இலவச சுகாதார சேவையை மக்கள் முழுமையாக அனுபவிப்பதற்கு வழி சமைக்கப்படுமென்றும் அவர் தெரிவித்துள்ளார்.

திடீர் விபத்துக்குள்ளாகி வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வரும் பிரபல நடிகர் ஜெக்சன் அந்தனியை சந்தித்து நலம் விசாரிப்பதற்காக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நேற்று கொழும்பு தேசிய வைத்தியசாலைக்கு சென்றிருந்தார். அதனையடுத்து அவர் தேசிய வைத்தியசாலையின் பணிப்பாளர் விசேட மருத்துவ நிபுணர் டபிள்யூ.கே. விக்கிரமசிங்கவை சந்தித்து வைத்தியசாலையின் நிறை குறைகள் தொடர்பில் ஆராய்ந்தார்.

அதனையடுத்து வைத்தியசாலையை விட்டு வெளியேறும் போது சிகிச்சைகளுக்காக வருகை தந்திருந்த நோயாளர்களுடன் உரையாடிய ஜனாதிபதி, அவர்களின் சுக நலன்களையும் விசாரித்துள்ளார்.

## தென்கடலில் 6...

இருந்து மீன்பிடிப்பதற்காக புறப்பட்ட படகு, கப்பலொன்றுடன் மோதியதில் விபத்துக்குள்ளானதையடுத்து, கடலில் மூழ்க ஆரம்பித்ததாக கடற்படை ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

விபத்து குறித்து கடந்த 18 ஆம் திகதி இரவு கப்பலின் உரிமையாளர் குடாவெல்ல மீன்பிடி துறைமுகத்தில் உள்ள கடற்பாதுகாப்பு திணைக்களத்துக்கு தகவல் வழங்கினார். அதற்கமைய கடற்பாதுகாப்பு திணைக்களம் ஊடாக கடற்படைக்கு அறிவிக்கப்பட்டது. பின்னர் சம்பவ இடத்துக்கு விரைந்த கடற்படையினர் கப்பலில் இருந்த அனைத்து மீனவர்களையும் உயிருடன் மீட்டு கரைக்கு அழைத்துவந்ததாக கடற்படை ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

## கொரியாவின்....

தாம் அங்கு விஜயம் செய்ததாகவும் அத்துடன் கொரிய தொழில் வாய்ப்பை எதிர்பார்த்துள்ளவர்கள் முன்வைத்துள்ள சிக்கல்கள் தொடர்பிலும் மனித வள திணைக்களத்தின் பணிப்பாளருடன் பேச்சுவார்த்தை நடத்தியுள்ளதாகவும் அமைச்சர் தெரிவித்துள்ளார்.

கொரிய பரீட்சைக்குத் தோற்றும் விண்ணப்பதாரிகள் எதிர்கொள்ளும் வெட்டுப்புள்ளி தொடர்பில் கொரிய மனிதவள திணைக்களத்தின் பணிப்பாளருடன் பேச்சுவார்த்தை நடத்தியுள்ளதாகவும் ஒரு தடவை பரீட்சைக்குத் தோற்றியவருக்கு மீண்டும் அடுத்தவருடத்தில் வேறு துறை தொடர்பான பரீட்சைக்கு தோற்றுவதற்கு சந்தர்ப்பம் வழங்கப்படும் என்றும் அவர் தெரிவித்ததாக அமைச்சர் குறிப்பிட்டார்.

## இலங்கைக்கான...

இந்த கலந்துரையாடல் சுமார் ஒன்றரை மணித்தியாலங்கள் இடம்பெற்றுள்ளது.

இலங்கை தமிழரசு கட்சியின் தலைவர் மாவை சேனாதிராசா, தமிழ் மக்கள் கூட்டணியின் செயலாளர் நாயகம் C.V.விக்னேஸ்வரன், தமிழீழ விடுதலை இயக்கத்தின் தலைவர் செல்வம் அடைக்கலநாதன், ஜனநாயக மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர் தர்மலிங்கம் சித்தார்த்தன், தமிழ் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர்களான சிறிதரன், கோவிந்தன் கருணாகரம் , ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் தலைவர் சுரேஷ் பிரேமச்சந்திரன், தமிழ் கட்சிகளின் ஒருங்கிணைப்பாளர் சுரேந்திரன் குருசுவாமி ஆகியோர் இந்த கலந்துரையாடலில் பங்கேற்றுள்ளனர்.

தமிழ் மக்களின் அரசியல், சமூக விடயதானங்கள் தொடர்பில் இதன்போது ஆராயப்பட்டுள்ளது. ஐ.நாவில் பல்வேறு விதமான பிரேரணைகள் நிறைவேற்றப்பட்ட போதிலும், அவை இலங்கை அரசாங்கத்தால் ஏற்றுக்கொள்ளப்பட்டாலும் நிராகரிக்கப்பட்டாலும் விடயங்கள் இன்று வரை நடைமுறைப்படுத்தப்படாமல் இருப்பதை அவதானிக்க முடிவதாக தமிழ் கட்சிகளின் தலைவர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

அரசியல் கைதிகள் விடுதலை, காணாமலாக்கப்பட்டோர் விடயம், காணி அபகரிப்பு, திட்டமிடப்பட்ட குடியேற்றங்கள், பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் இடம்பெறுகின்ற கைது ஆகிய விடயங்களை அவர்கள் நோர்வே பிரதிநிதியின் கவனத்திற்கு கொண்டு சென்றுள்ளனர்.

ஜெனிவா மனித உரிமை பேரவை கூட்டத்தொடருக்கு தாங்கள் தயாராகிக் கொண்டு இருப்பதனால், தமிழ் மக்களின் சார்பாக கட்சித் தலைவர்களும் பிரதிநிதிகளும் தெரிவித்த கருத்துகளை நோர்வே அரசாங்கத்தின் கவனத்திற்கு கொண்டு வருவதோடு, அவற்றை ஐ.நாவில் பிரதிபலிக்கும் வகையில் செயற்படுவதாகவும் ஆன்கிளாட் உறுதியளித்ததாக தமிழ் கட்சிகளின் ஒருங்கிணைப்பாளர் சுரேந்திரன் குருசுவாமி தெரிவித்தார்.

## நாட்டை மீட்டெடுக்க முன்வர... 03ஆம் பக்கத் தொடர்

சிக்கலுக்கு உள்ளாக்கினால், அரசியலுக்கு வந்தே பயனில்லாமல் போய்விடும் என்றும் அவர் குறிப்பிட்டார். எனவே, எமது தனிப்பட்ட விருப்புவெறுப்புகளுக்கு அப்பால் சென்று நாட்டுக்காக செயற்பட அனைவரும் முன்வர வேண்டும் என்றும் அவர் தெரிவித்தார்.

## அவுஸ்திரேலிய அரசினால்... 03ஆம் பக்கத் தொடர்

இலங்கை அரசாங்கத்திற்கு தற்போது அவுஸ்திரேலியா வழங்குவதற்கு தீர்மானித்துள்ள 25 மில்லியன் அமெரிக்கன் டொலருடன் இதுவரை 75 மில்லியன் அமெரிக்கன் டொலர்கள் பெறுமதியான மனிதாபிமான உதவிகளை அந்நாடு வழங்கியுள்ளது.

## முச்சக்கர வண்டிகளை... 03ஆம் பக்கத் தொடர்

முச்சக்கரவண்டிகளை ஒழுங்குபடுத்துதல், ஆலோசனைகள் மற்றும் வழிகாட்டல்கள் தொடர்பான கட்டணங்களை ஆணைக்குழு நிர்ணயம் செய்யும் என்றும், அதன் பிறகு அதற்கான சட்டங்கள் மற்றும் ஒழுங்குமுறைகள் தயாரிக்கப்பட்டு அதிகாரம் வழங்கப்படும் என்றும் அவர் கூறினார்.

அவற்றை நடைமுறைப்படுத்துவது மாகாணத்தின் பொறுப்புக்கு அனுப்பப்படும். ஒன்பது மாகாண சபைகளூடாக அனைத்து முச்சக்கரவண்டிகளும் பதிவு செய்யப்பட வேண்டுமெனவும், மாகாண சபைகளூடாக இந்த முறை நடைமுறைப்படுத்தப்படுமெனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

## நிலக்கரி வழங்க... 03ஆம் பக்கத் தொடர்

ஐந்து மாத கடன் சலுகை காலத்தை கோரினோம்.ரஷ்ய நிறுவனம் ஆறு மாதங்களை வழங்க ஒப்புக்கொண்டது. ஒக்டோபர் முதல் நிலக்கரியை இறக்குமதி செய்யத் தொடங்குவோம், விலை சூத்திரத்தின் மூலம் விலை நிர்ணயிக்கப்படும்.

சமீபத்தில் 4.5 மில்லியன் மெட்ரிக் தொன் நிலக்கரியை லக்விஜய மின் உற்பத்தி நிலையத்திற்கு, மூன்று ஆண்டுகளுக்கு வழங்குவதற்கான கேள்விப் பத்திரத்தை முன்வைத்தது. கடந்த 10 ஆம் திகதி ஏலம் முடிவடைந்தது என்றும் பெரேரா கூறினார்.

மின் உற்பத்தி நிலையத்திற்கு ஆண்டுக்கு 2.36 மில்லியன் மெட்ரிக் தொன் நிலக்கரி தேவைப்படுகிறது. ஒவ்வொரு ஆண்டும் செப்டம்பர் மற்றும் மே மாதங்களில் மட்டுமே நிலக்கரியை இறக்குமதிசெய்ய முடியும். முந்தைய வழங்குநர் இன்னும் 11,40,000 மெட்ரிக் தொன் நிலக்கரியை வழங்க வேண்டியிருந்தது என்றும், அவற்றில் 120,000 மெட்ரிக் டன் நிலக்கரியைப் பெற்றதாகவும் பெரேரா கூறினார்.

ஒக்டோபர் முதல் ரஷ்ய நிறுவனம் 2022 ஆம் ஆண்டுக்குரிய மீதமுள்ள நிலக்கரியையும், 2023 ஆம் ஆண்டும், மற்றொரு வருடத்திற்கும் நிலக்கரியை வழங்கும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

## மரண தண்டனை... 03ஆம் பக்கத் தொடர்

மைத்திரிபால சிறிசேன தனியார் தொலைக்காட்சி ஒன்றில் இடம் பெற்ற அரசியல் நிகழ்ச்சியில், றோயல் பார்க் வழக்கில மரண தண்டனை விதிக்கப்பட்ட ஜூட் ஷாமந்த அந்தனி ஜயமஹாவை விடுதலை செய்ய ஒரு தரப்பு பணத்தை பெற்றுக்கொண்டதாக தனக்கு தகவல் கிடைத்தது எனவும் புலனாய்வுப் பிரிவினர் மூலம் பெறப்பட்ட அறிக்கையில் அது உறுதிப்படுத்தப்பட்டதாகவும் கூறியிருந்தார்.

அத்துடன் இந்த தொலைக்காட்சி நிகழ்ச்சியில் அத்துரலியே ரதன தேரர் பற்றியும் மைத்திரிபால சிறிசேன கூறியிருந்தார். இதன் காரணமாகவே அத்துரலிய ரதன தேரர் குற்றவியல் விசாரணை திணைக்களத்தில் முறைப்பாடு ஒன்றை செய்தார்.

அதேவேளை இந்த விடயம் தொடர்பாக முன்னாள் ஜனாதிபதியும் குற்றவியல் விசாரணை திணைக்களத்தில் முறைப்பாடு செய்தார்.

இந்த நிலையில் கொழும்பில் உள்ள முன்னாள் ஜனாதிபதியின் இல்லத்திற்கு சென்று குற்றவியல் விசாரணை திணைக்களத்தின் நேற்றுமுன்தினம் வாக்குமூலத்தை பதிவு செய்துக்கொண்டுள்ளனர்.

கொழும்பு ராஜகிரிய பிரதேசத்தில் அமைந்துள்ள றோயல் பார்க் தொடர் மாடி வீடமைப்பு தொகுதியில் கடந்த 2005 ஆம் ஆண்டு ஜூன் 20 ஆம் திகதி 19 வயதான இவோன் ஜோன்சன் என்ற வெளிநாட்டு யுவதி கொலை செய்யப்பட்டார்.

தாக்கப்பட்டு, கழுத்து நெறிக்கப்பட்டு, தலையை சுவரில் பலமாக மோத செய்து, யுவதி கொலை செய்யப்பட்டுள்ளதாக விசாரணைகளில் தெரியவந்தது.

## இலங்கைக்கு உதவ...

என்ற தலைப்பில் விரிவுரை ஆற்றிய பின்னர் தொடர்ச்சியான கேள்விகளுக்கு ஜெய்சங்கர் பதிலளிக்கும் போதே அவர் இவ்விடயத்தை தெரிவித்துள்ளார்.

## Gas உட்பட சில...

விநியோகம் பழமையான நிலைக்கு திரும்பி உள்ள நிலையில் உலகச்சந்தையில் சமையல் எரிவாயுவின் விலை, அதற்கான இறக்குமதி செலவுகள் மற்றும் நுகர்வோருக்கு சமையல் எரிவாயுவை வழங்கக்கூடிய சில்லறை விலை ஆகியவை தொடர்பில் ஆராயப்பட்டு வருவதாகவும் அதற்கிணங்க சமையல் எரிவாயு விலையைக் கட்டுப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

அண்மைக்காலமாக சீமெந்து, இரும்பு, டயர்கள் மற்றும் பிஸ்கட் வகைகள் உட்பட பல்வேறு உற்பத்தி பொருட்களினதும் விலைகள் பெருமளவு அதிகரித்துள்ளன. இந்த விலைகள் நியாயமானதா என்பதை ஆராய்வதற்காக அந்த பொருட்களின் விலைகளை நிர்ணயம் செய்பவர்கள் நுகர்வோர் அதிகார சபைக்கு வருகை தந்து அது தொடர்பில் அறிக்கை ஒன்றை பெற்றுக் கொடுக்குமாறு தாம் அவர்களுக்கு பணிப்புரை விடுத்துள்ளதாகவும் அமைச்சர் தெரிவித்துள்ளார்.

அதனையடுத்து அந்த அறிக்கைகளுக்கிணங்க மேற்படி பொருட்களுக்கான விலையை கட்டுப்படுத்துவது தொடர்பில் விரைவான தீர்மானங்கள் மேற்கொள்ளப்படும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

## அரசு அதிகாரிகளுக்கு...

பொது நிர்வாக சுற்றறிக்கையை திருத்துவதன் மூலம், பணம் அனுப்புவதற்கு, வதியாதோர் வெளிநாட்டு நாணயக் கணக்கு (NRFC) அல்லது ரூபாய் கணக்கைப் பயன்படுத்த அனுமதிப்பது, விதவைகள், விதுரர்கள் மற்றும் அனாதைகள் ஓய்வூதியத்துக்கு கிடைக்கும் பங்களிப்புகளுக்கமைய , வங்கிக்கு செலுத்த வேண்டிய தவணைகளை செலுத்துவதற்காக அந்த பணத்தை தொடர்புபடுத்தும் முறையான நடைமுறைகளை நிறுவுதல் என்பன குறித்தும் இதன்போது கவனம் செலுத்தப்பட்டது.

பொது நிர்வாகச் சுற்றறிக்கையை திருத்துவதன் மூலம் 03 மாதங்களுக்கு ஒரு முறையாவது பணத்தை அனுப்ப வாய்ப்பு காணப்படுவதோடு எமது நாட்டில் பணம் பற்று வைக்கப்படும் வகையில் அரச உத்தியோகத்தரின் பெயரில் கணக்கைத் திறக்கவோ, கூட்டுக் கணக்கைத் திறக்கவோ (Joint account) அல்லது பணம் அனுப்ப கணக்கொன்றை தெரிவு செய்யவோ அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

விண்ணப்பிக்கும் அரச ஊழியர்களுக்கு உகந்த வெளிநாட்டு வேலை வாய்ப்புகளை துரிதமாகக் கண்டறிந்து, விண்ணப்பங்களை உரிய தரப்பினருக்கு அனுப்பி, சாத்தியமான வெளிநாட்டு வேலைவாய்ப்புகளை தொடர்ச்சியாக அடையாளம் காணவும் இலக்கு குழுக்களுக்கு அதனை முன்வைக்கவும் வேலைத்திட்டமொன்றை நடைமுறைப்படுத்த தீர்மானிக்கப்பட்டுள்ளது.

வெளிநாட்டு கல்வி வாய்ப்புகளை வழங்கும் திட்டத்தின் கீழ், அரச சேவையின் அபிவிருத்தி உத்தியோகத்தர்களை பரந்தளவில் திறம்படப் பயன்படுத்தி, வெளிநாட்டு புலமைப்பரிசில்கள் மூலம் வெளிநாட்டில் கல்வி கற்பதை ஊக்குவிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

ஜனாதிபதியின் செயலாளர் தலைமையில் நடைபெற்ற இக் கலந்துரையாடலில், வெளிநாட்டில் பணிபுரியும் அரசு ஊழியர்களுக்கான ஓய்வூதிய கொடுப்பனவை முறைப்படுத்த, இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தின் தரவுகளை ஓய்வூதிய திணைக்களத்தின் பயன்பாட்டுக்கு திறந்து விடுவது குறித்தும் கவனம் செலுத்தப்பட்டது.

அரசு ஊழியர்கள் விடுமுறை பெறுவதற்கான விண்ணப்பங்களை அனுப்புவதில் கடைப்பிடிக்க வேண்டிய நடைமுறைகள் குறித்து நிறுவனத் தலைவருக்கு அறிவுறுத்தல் மற்றும் காலக்கெடுவை வழங்குவது குறித்தும், விடுமுறை அனுமதியில் தாமதமாகும் விண்ணப்பங்களுக்காக ஒன்லைன் மேல்முறையீட்டு முறையை அறிமுகப்படுத்துவது குறித்தும் ஆலோசிக்கப்பட்டது.

விடுமுறைக்கான அனுமதி வழங்க முன்னர், விதவைகள், விதுரர்கள் மற்றும் அனாதைகள் ஓய்வூதியப் பங்களிப்புகள் மற்றும் வங்கிக் கடன்கள் என்பவற்றை திட்டமிட்டபடி பெற்றுக்கொடுப்பதை உறுதிப்படுத்தும் முறைமையொன்றை எதிர்வரும் 31 ஆம் திகதிக்கு முன்னர் தயாரித்து நடைமுறைப்படுத்துமாறு பொது நிர்வாக அமைச்சின் செயலாளர் மற்றும் ஓய்வூதியப் பணிப்பாளர் நாயகம் ஆகியோருக்கு ஜனாதிபதியின் செயலாளர் பணிப்புரை விடுத்தார்.

வெளிநாட்டு வேலைவாய்ப்புகளுக்கு விண்ணப்பிப்பதற்கு ஏற்றவகையில் அரசு ஊழியர்களின் திறன்களை மேம்படுத்த, அவர்களின் பல் வகை செயல்திறனைக் கருத்தில் கொள்ளவும் வெற்றிடம் காணப்படும் துறைகளின் குறுகிய கால தேவைகளை அடையாளம் காணவும் அந்த பாடநெறிகளுக்கு அரசு ஊழியர்களை ஈடுபடுத்தவும் எதிர்பார்க்கப்படுகிறது.

அரச அதிகாரிகளை வெளிநாட்டு வேலைவாய்ப்புகளுக்கு அனுப்பும் வேலைத்திட்டம் தொடர்பில் மீளாய்வு செய்வது குறித்தும் இந்தக் கலந்துரையாடலில் ஆராயப்பட்டது.

## NHDA மக்களுக்கு வழங்கிய...

ரூபாய் மட்டுமே வசூலிக்கப்பட்டுள்ளது. இது 23 சதவீதமாகும்.

தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையின் மாவட்ட முகாமையாளர்களுக்கு தெளிவூட்டும் நோக்குடன் நேற்று (19) கண்டியில் நடைபெற்ற விசேட செயலமர்வில் இந்த விபரங்கள் வெளிப்படுத்தப்பட்டன. இந்த சந்திப்பில் நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர் பிரசன்ன ரணதுங்கவும் கலந்து கொண்டார்.

அத்துடன் தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையினால் வழங்கப்பட்ட கடன்களை மீளப்பெறுவதற்கான அவசர வேலைத்திட்டத்தை தயாரிக்குமாறு தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபை அதிகாரிகளுக்கு பணிப்புரை வழங்கினார்.

மாதாந்தம் 300 மில்லியன் ரூபாவை சேகரிக்கும் இலக்குடன் கூடிய வேலைத்திட்டம் தயாரிக்கப்பட வேண்டுமெனவும் அமைச்சர் ஆலோசனை வழங்கினார்.

கண்டி ரஜபீல்ல ஒக்ரே விழா மண்டபத்தில் இந்த செயலமர்வு நடைபெற்றது.

2015 –2019 ஆம் ஆண்டில், அந்த அதிகாரசபைக்குச் சொந்தமான அனைத்து சொத்துக்களையும் பயன்படுத்தி கடன் வழங்கப்பட்டது. கடனுக்கான முழு தவணையை வசூலிக்காததால் மீளப்பெறுவதில் சிக்கல்கள் ஏற்பட்டுள்ளமை இந்த நிலைக்கு முக்கியக் காரணமென அந்த அதிகார சபையின் பொது முகாமையாளர் கே.ஏ. ஜனக வெளிப்படுத்தினார். மேலும், நாட்டில் நிலவும் கோவிட்19 தொற்று, பொருளாதார பிரச்சினை மற்றும் அரசியல் ஸ்திரமின்மை போன்ற காரணங்களால் இந்த கடன் வசூல் குறைவடைந்துள்ளதாக அவர் கூறினார்.கடனை மீளப்பெறுவதற்கு எதிர்வரும் காலங்களில் மாவட்ட முகாமையாளர்கள் அதிக கவனம் செலுத்த வேண்டுமென அதிகார சபையின் தலைவர் ரஜீவ் சூரியாராச்சி தெரிவித்தார். கடன் தவணைகளை முறையாக வசூலிக்க முடியாவிட்டால் ஊழியர்களுக்கு சம்பளம் கூட வழங்க முடியாமல் போகலாமென்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

இதன்படி 300 மில்லியன் ரூபா மாதாந்த கடன் தவணைகளை அறவிடுவதே அதிகாரசபையின் இலக்கு எனவும் அது கட்டாயம் எனவும் தெரிவித்த தலைவர், நகரிலுள்ள ஹோட்டல் ஒன்றில் அதிகார சபை விருந்தொன்றை ஏற்பாடு செய்துள்ளதாக ஊடகங்களில் வெளியான செய்திகளை மறுத்தார்.

இந்த அதிகார சபையை மீண்டும் பலப்படுத்துவதற்கு புதிய நிர்வாகம் மேற்கொண்டு வரும் நடவடிக்கைகளுக்கு எதிராக சில அரசியல் குழுக்கள் இவ்வாறான குற்றச்சாட்டுகளை முன்வைக்கின்றன என்றும் அவர் தெரிவித்தார்.

தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபைக்கு சொந்தமான காணிகளில் அதிகளவான அனுமதியற்ற குடியிருப்பாளர்கள் மற்றும் அனுமதியற்ற கட்டட நிர்மாணங்கள் இடம்பெற்றுள்ளதாகவும் இது தொடர்பில் உடனடி நடவடிக்கை எடுக்கப்படுமெனவும் தலைவர் தெரிவித்தார்.

இதன்போது கருத்துத் தெரிவித்த அமைச்சர் பிரசன்ன ரணதுங்க, மக்களின் அடிப்படைத் தேவையான வீடொன்றை நிறைவேற்றுவதற்காகவே தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபை உருவாக்கப்பட்டது. இந்த நிறுவனத்தில் தேவையற்ற அரசியல் தலையீடுகள் வீழ்ச்சிக்கு வழிவகுத்ததாகவும், இதனை மீளக் கட்டியெழுப்புவது தமது நம்பிக்கை எனவும் தெரிவித்த அமைச்சர், தற்போதைய பொருளாதார நெருக்கடி மீண்டவுடன் புதிய வீடமைப்புத் திட்டங்கள் மீள ஆரம்பிக்கப்படும் என்றார்.

நீண்டகாலமாக தீர்க்கப்படாமலுள்ள வீட்டுப் பிரச்சினைகளைத் தீர்க்கும் வகையில் நடமாடும் சேவைத் திட்டங்களை மாவட்ட மட்டத்தில் உடனடியாக ஆரம்பிக்குமாறு அதிகாரிகளுக்கு அமைச்சர் பணிப்புரை விடுத்தார்.

இந்த செயலமர்வில் தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையின் நிர்வாக சபை உறுப்பினர்கள் மற்றும் அனைத்து மாவட்ட முகாமையாளர்களும் கலந்துகொண்டனர்.




## திறந்த பல்கலைக்கழக யாழ்.பிராந்திய கற்கை நிலையத்தின் புதிய கட்டடத்தொகுதி திறந்துவைப்பு



**யாழ் விசேட நிருபர்**

இலங்கைத் திறந்த பல்கலைக்கழகத்தின் யாழ்.பிராந்திய கற்கை நிலையத்தின் புதிய கட்டடத்தொகுதி திறந்து வைக்கப்பட்டது.

யாழ்ப்பாணத்துக்கான உத்தியோக பூர்வ விஜயத்தை மேற்கொண்டுள்ள கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த இக்கட்டடத் தொகுதியை நேற்றைய தினம் வெள்ளிக்கிழமை திறந்து வைத்ததுடன் நினைவுக்கல்லையும் திரைநீக்கம் செய்தார். இந்நிகழ்வில் கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, யாழ். மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவின் இணைத்தலைவர் அங்கஜன் இராமநாதன், கல்வி அமைச்சின் செயலாளர் எம்.என்.ரணசிங்க, பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் தலைவர் சிரேஸ்ட பேராசிரியர் சம்பத் அமரதுங்க, இலங்கை திறந்த பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் பீ.எம்.சீ. திலகரத்ன, திறந்த பல்கலைக்கழக யாழ்.பிராந்திய பணிப்பாளர் உள்ளிட்ட அதிகாரிகளும், விரிவுரையாளர்களும் மாணவர்களும் உடனிருந்தனர்.





வரலாற்று சிறப்புமிக்க நல்லூர் கந்தசுவாமி ஆலயத்தின் வட திசையில் குபேர வாயில் கோபுரத்திற்கு உட்புறமாக புதிதாக நிர்மாணிக்கப்பட்ட "குபேர திக்கு, குமார வாசல்" கோபுர கலசாபிஷேகம் நேற்றைய தினம் வெள்ளிக்கிழமை நடைபெற்றது. ஆலயத்தின் வருடாந்திர மகோற்சவ திருவிழாக்கள் நடைபெற்று வரும் நிலையில் நேற்றைய தினம் வெள்ளிக்கிழமை கார்த்திகை உற்சவமாகும். அதனை முன்னிட்டு காலை, இடம்பெற்ற வசந்தமண்டப பூஜையை தொடர்ந்து ஆறுமுக பெருமான் பக்தர்கள் மத்தியில் எழுந்தருளி அருட்காட்சி அளித்தார். தொடர்ந்து கோபுர கலசாபிஷேகம் இடம்பெற்றது. அதன்போது பல நூற்றுக் கணக்காணோர் கலந்து கொண்டு ஆறுமுக பெருமானை தரிசித்தனர்.

படங்கள்: யாழ். விசேட நிருபர்

## 15 வயது பாடசாலை மாணவனை காணவில்லை

**ஓமந்தை விஷேட நிருபர்**



வவுனியா, செக்கட்டிபுலவு பாடசாலையில் கல்வி கற்கும் 15 வயது மாணவன் ஒருவனை காணவில்லையென பூவரசங்குளம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

வவுனியா, பம்பைமடு, செக்கட்டிபுலவு பகுதியில் வசித்து வந்த இராசேந்திரன் கிருபன் என்ற 15 வயது மாணவனே இவ்வாறு காணாமல் போயுள்ளார்.

மாணவன் கடந்த 16.08.2022 திகதி அதிகாலை தொடக்கம் காணாமல்போயுள்ளதாக தெரியவருகின்றது.

கடந்த 16ஆம் திகதி அதிகாலை 1 மணியளவில் நித்திரையால் எழுந்து தண்ணீர் அருந்துவதை கண்டதாகவும் அதன்பின்னர் வீட்டிலிருந்தவர்கள் அதிகாலை 4 மணியளவில் எழுந்து பார்த்தபோது அவரை காணவில்லையெனவும் தாயார் பூவரசங்குளம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளார்.

மாணவன் வகுப்பிற்கு போகாமையால் அவரை தயார் 15ஆம் திகதி கண்டித்திருக்கின்றார். அதனாலேயே மாணவன் காணாமல் போயிருப்பதாக சந்தேகிக்கப்படுகின்றது. எனினும் இவ்விடயம் தொடர்பாக பூவரசங்குளம் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

அத்துடன் மாணவனை யாராவது அடையாளம் கண்டால் 0766922218, 0779987491 என்ற தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்பு கொள்ளுமாறும் மாணவனின் சகோதரர் தெரிவித்துள்ளார்.

## யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரிக்கு கல்வி அமைச்சர் விஜயம்





யாழ்ப்பாணத்துக்கான உத்தியோகபூர்வ விஜயத்தை மேற்கொண்டுள்ள கல்வி அமைச்சர் கலாநிதி சுசில் பிரேமஜயந்த யாழ்.தேசிய கல்வியியற் கல்லூரிக்கு விஜயம் மேற்கொண்டார்.

அமைச்சரின் விஜயத்தின் போது, கடற்தொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா,யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதன்,கல்வி அமைச்சின் செயலாளர் எம். என். ரணசிங்க, கல்வியியற் கல்லூரி பணிப்பாளர் உள்ளிட்ட அதிகாரிகளும், விரிவுரையாளர்களும், பாடசாலை அதிபர்களும் உடனிருந்தனர்.

யாழ்.மாவட்ட கல்வித்துறையின் தேவைகள் மற்றும் குறைநிறைகள் தொடர்பாக இவ்விஜயத்தின் போது கல்வி அமைச்சர், கல்வி அதிகாரிகள், பாடசாலை அதிபர்களிடம் கேட்டறிந்து கொண்டார்.

## இடிந்து விழும் அபாயத்தில் யாழ். மந்திரிமனை

## மீள் நிர்மாணம் செய்ய உதவுமாறு புலம்பெயர் தமிழர்களிடம் கோரிக்கை

**யாழ்.விசேட நிருபர்**

யாழ்ப்பாணத்திலுள்ள மந்திரிமனை எதிர்வரும் மழைக்காலத்தில் இடிந்து விழுந்துவிடுமோ என்கிற அச்சம் காணப்படுவதால் அதனை மீள்நிர்மாணம் செய்வதற்கு தேவையான நிதியை பெற செல்வந்தர்களும் புலம்பெயர்ந்தவர்களும் உதவமுன்வர வேண்டுமென யாழ்ப்பாண மரபுரிமை மையத்தினர் அவசர கோரிக்கையை விடுத்தனர்.




யாழ்.ஊடக மையத்தில் நேற்று முன்தினம் வியாழக்கிழமை இடம்பெற்ற ஊடக சந்திப்பிலேயே யாழ்ப்பாண மரபுரிமை மையத்தினர் இந்த அவசர கோரிக்கையை விடுத்தனர்.

இதில் கருத்து தெரிவித்த யாழ். மரபுரிமை மையத்தின் தலைவர் வரலாற்றுத்துறை பேராசிரியர் ப.புஸ்பரட்ணம்,

தற்போது எமக்குள்ள வசதி வாய்ப்பை மீள்நிர்மாணம் செய்யும் போது பல்வேறு தடைகள் ஏற்படுகின்றன.

மந்திரிமனையை மீள்நிர்மாணம் செய்து சுற்றுலாத்தலமாக மாற்ற தொல்லியல் திணைக்களம் எங்களுக்கு அனுசரணை தந்திருக்கின்றது. இந்த பணியை செய்வதற்கு பல தடைகள் காணப்படுகின்றது. அந்தத் தடையை தாண்டி தொல்லியல் திணைக்களத்தின் அனுமதியோடு அதனை செய்யவுள்ளோம்.

மரபுரிமை சின்னங்களினுடைய நில உரிமையாளர்கள் இதற்கு ஒத்துழைக்க வேண்டும். நில உரிமையாளர்கள் மரபுரிமை சின்னங்களை அழித்துவிட்டு வேறு பணியை செய்ய முடியாது. மரபுரிமை சின்னங்களினுடைய நிலங்களை அன்பளிப்பாகவோ அல்லது விலைக்கோ எங்களுக்கு தந்தால் அதனை நாங்கள் ஏற்றுக் கொள்வோம்.

புனரமைக்க வேண்டிய முந்நூறுக்கும் மேற்பட்ட தொல்லியல் சின்னங்கள் தொல்லியல் திணைக்களத்தினால் அடையாளம் காணப்பட்டுள்ளன. அரச அனுமதியோடு புலம்பெயர்ந்தவர்களிடமிருந்து நிதியை பெறுவதற்கு முயல்வதோடு தனவந்தர்கள் இவ்வாறான பணிகளுக்கு உதவமுன்வர வேண்டும்.

## மாந்தை கிழக்கு பிரதேச செயலக வளாகத்தில் அறுவடை விழா

**(பரந்தன் குறூப் நிருபர்)**



தேசிய உணவு உற்பத்தி வேலைத் திட்டத்தின் கீழ் உள்ளூர் உற்பத்தியை ஊக்குவிக்கும் நோக்குடன் முல்லைத்தீவு மாவட்டத்தின் மாந்தை கிழக்கு பிரதேச செயலக வளாகத்தில் இயற்கையான முறையில் செய்கை மேற்கொள்ளப்பட்ட விவசாய அறுவடைவிழா இடம்பெற்றது.

மாந்தை கிழக்கு பிரதேச செயலாளர் ந.ரஞ்சனா தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் மாவட்ட அரசாங்க அதிபர் க.விமலநாதன் பிரதம அதிதியாக கலந்து கொண்டு ஆரம்பித்து வைத்தார்.

மேலும் அதிதிகளாக மாவட்ட செயலக பிரதம உள்ளகக் கணக்காய்வாளரும், உற்பத்தித் திறன் பிரிவின் பிரதம இணைப்பாளருமான கே.லிங்கேஸ்வரன், துணுக்காய் பிரதேச செயலாளர் ஆ.லதுமீரா, உலக உணவுத் திட்டத்தின் மாவட்ட இணைப்பதிகாரி ஜெயபவாணி, வவுனிக்குள நீர்ப்பாசன பொறியியலாளர், பிரதேச செயலக பதவிநிலை உத்தியோகத்தர்கள் கலந்து கொண்டிருந்தனர்.

## வவுனியாவில் விபசார விடுதி முற்றுகை: இரு பெண்கள் உட்பட நால்வர் கைது 30; தோட்டாக்களும் மீட்பு

**வவுனியா விசேட நிருபர்**

வவுனியா தேக்கவத்தைப் பகுதியில் விபசார விடுதியொன்று பொலிஸாரால் நேற்று (19.08) மதியம் முற்றுகையிடப்பட்டதுடன், இரு பெண்கள் உட்பட நான்கு பேர் கைது செய்யப்பட்டதுடன், விடுதியிலிருந்து ரி 56 ரக 30 தோட்டாக்களும் மீட்கப்பட்டுள்ளன.

வவுனியா பொலிஸாருக்கு கிடைத்த இரகசிய தகவலையடுத்து வவுனியா தலைமை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி ஜே.ஏ.ஏ.எஸ்.ஜெயக்கொடி தலைமையில் வவுனியா குற்றத்தடுப்பு பிரிவு பொலிஸார் மற்றும் மதுஒழிப்பு பிரிவு பொலிஸார் மோப்ப நாயின் உதவியுடன் வவுனியா தேக்கவத்தைப் பகுதியில் அமைந்துள்ள விடுதி ஒன்றை முற்றுகையிட்டு சோதனை நடத்தினர். இதன்போது விடுதியில் தங்கியிருந்த இரு பெண்கள், விடுதி முகாமையாளரான ஓய்வு பெற்ற இராணுவ வீரர் உட்பட நான்கு பேர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர். அத்துடன் விடுதியில் பொலிஸார் சோதனை செய்தால் அங்கிருந்து பெண்கள் தப்பியோடும் வகையில் சுவர் ஒன்றில் சூட்சுமமான முறையில் பாதை ஒன்றும் அமைக்கப்பட்டிருந்தமை பொலிஸாரால் கண்டுபிடிக்கப்பட்டது. மேலும் விடுதியில் பொலிஸார் சோதனை செய்த போது மறைத்து வைக்கப்பட்டிருந்த இயங்கு நிலையில் உள்ள ரி56 ரகத்தினை சேர்ந்த 30 தோட்டாக்களும் மீட்கப்பட்டுள்ளன.

## ஐ.நா.அபிவிருத்தி ஒருங்கிணைப்பு அலுவலக பணிப்பாளர் யாழ்.விஜயம்

**யாழ். விசேட நிருபர்**

ஐக்கிய நாடுகளின் அபிவிருத்தி ஒருங்கிணைப்பு அலுவலகத்தின் (UNDCO) ஆசிய, பசிபிக் பிராந்தியத்திற்கான பணிப்பாளர் டேவிட் மெக்லாக்லன்கார் நேற்றைய தினம் வெள்ளிக்கிழமை யாழ்ப்பாணத்திற்கு விஜயம் மேற்கொண்டிருந்தார். யாழ்.மாவட்ட செயலகத்தில் மாவட்ட செயலர் க.மகேசனை டேவிட் மெக்லாக்லன்கார் சந்தித்தார்.

இதன்போது இலங்கைக்கான ஐக்கிய நாடுகள் வதிவிடப் பிரதிநிதி ஹனா சிங்கரும் உடனிருந்தார். தற்போதைய பொருளாதார சூழ்நிலையின் காரணமாக வாழ்வாதாரம் மற்றும் கடற்றொழிலிலுள்ள சவால்கள் குறித்து அரசாங்க அதிபரிடம் கேட்டறிந்ததாக டேவிட் மெக்லாக்லன்கார் தெரிவித்தார். ஐக்கிய நாடுகளின் அபிவிருத்தி ஒருங்கிணைப்பு அலுவலகத்தின் ஆசிய,பசிபிக் பிராந்தியத்திற்கான பிராந்திய பணிப்பாளர் டேவிட் மெக்லாக்லன்கார் கடந்த ஒகஸ்ட் 16ஆம் திகதி இலங்கைக்கு வருகைதந்தது டன்பல்வேறு தரப்புக்களையும் சந்தித்தார்.






# மண்மேடுகள் சரிந்து விழும் அபாயம் பொது மக்கள் அவதானம்



இரத்தினபுரி சுழற்சி நிருபர்

பொதுபிட்டி இறக்குவானை வீதியில் பல இடங்களில் மண் திட்டுக்கள் அல்லது பாரிய கற்கள் பிரதான வீதியில் சரிந்து விழும் அவதானநிலை காணப்படுகிறது.

குறிப்பாக மழை காலங்களில் இந்நிலைமை பரவலாக இடம் பெறுவதைக் காணலாம்.

எனவே இவ்வீதியில் கால்நடையாகவும் வாகனங்களிலும் பயணிக்கும் மக்கள் மிகவும் அவதானமாக பயணிக்குமாறு பொலிஸார் அறிவுறுத்தியுள்ளனர்.

# இளைஞர் யுவதிகளுக்கு ஊடகத்துறை பயிற்சி



ஹற்றன் விசேட நிருபர்

நுவரெலியா மாவட்டத்திலுள்ள இளைஞர் யுவதிகளுக்கு ஊடகத்துறைதொடர்பான பிரயோக பயிற்சி நெறியொன்று நுவரெலியா புனித சவேரியார் ஆலய பங்கு மண்டபத்தில் நடைபெற்றது.

இப்பயிற்சி நெறி அருட்தந்தையர்களான லெஸ்லி பெரேரா,ஜெயநாத் பெரேரா ஆகியோரின் தலைமையில் நேற்றுமுன்தினம் (18) ஆம் திகதி காலை 10 மணி தொடக்கம் மாலை 3.00 மணி வரை நடைபெற்றது.

இப்பயிற்சிநெறிக்கு நுவரெலியா மாவட்டத்திலுள்ள மட்டுக்கலை, கவுலினா, டயகம, ராகலை, நுவரெலியா உள்ளிட்ட பிரதேசங்களைச் சேர்ந்த இளைஞர் யுவதிகள் கலந்து கொண்டனர்.

பயிற்சி நெறியில் செய்தி திரட்டல், செய்தி எழுதுதல் படப்பிடிப்பு,ஒளிப்பதிவு ஊடாக பாதுகாப்பு உள்ளிட்ட பல விடயங்கள் கலந்துரையாடப்பட்டதுடன் செய்தி எழுதுவது தொடர்பாக பயிற்சியும் பெற்றுக்கொடுக்கப்பட்டன. சமூக ஊடகங்களின் பங்களிப்பு சம்பந்தமாகவும் இதன் போது பேசப்பட்டன.

இந்நிகழ்வுக்கான அனுசரனையினை கண்டி மறைமாவட்ட கலைத்தொடர்பு நிலையம் வழங்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# அயகம பிரதேச வனப்பகுதி திட்டமிட்டு அழிப்பு

இரத்தினபுரி சுழற்சி நிருபர்

இரத்தினபுரி மாவட்டத்தின் கலவான அயகம பிரதேச வனங்கள் பொறுப்பின்றி அழிக்கப்படுவதாக பிரதேசவாசிகள், சுற்றாடலியலாளர்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

காடுகளில் வியாபாரத்திற்காக மரங்களை வெட்டும் வியாபாரிகளாலும் விவசாயத்திற்காகவும் கமத்தொழிலுக்காகவும் காடுகளை வெட்டி துப்புறவு செய்பவர்களாலும் இந்நிலைமை ஏற்படுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இந்நிலைமைகளால் இப்பகுதி வனவளம் அழிக்கப்பட்டு அவற்றின் பசுமைத்தன்மை குன்றி வருவதுடன் இவற்றில் வாழ்ந்து வந்த உயிரினங்கள் பல படிப்படியாக அருகி வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இவ்வாறான இயற்கை சுற்றாடல் அழிவுக்கு இதனை பாதுகாக்க வேண்டிய வனப் பாதுகாப்பு அதிகாரிகளினதும் நேரடி மறைமுகமான உதவிகள் கிடைத்து வருவதால் இந்நிலை பாரதூரமான நிலைமைக்கு தள்ளப்படுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது. இவ்விடயத்தில் கூடிய கவனமெடுக்கப்படாதுவிடின் வனங்கள் குறுகிய காலத்தில் அழிந்து விடும் ஆபத்து நிலவுவதாகவும் சுட்டிக்காட்டப்படுகிறது.

# இலஞ்சம் பெற்ற பொலிஸ் அதிகாரிக்கு எதிராக சட்டநடவடிக்கை

ஹற்றன் நீதவான் நீதிமன்றில் விசாரிக்கப்பட்டு வரும் வழக்கொன்றுக்காகமுறைப்பாட்டுதரப்பினரிடமிருந்து 20,000 ரூபாய் இலஞ்சப் பணம் பெற்ற சம்பவத்துடன் தொடர்புடைய பொலிஸ் சார்ஜன்ட் ஒருவர், இலஞ்சம் மற்றும் ஊழல் ஒழிப்பு பிரிவினரால் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

சந்தேகநபர் நேற்றுமுன்தினம் ( 17) கைதுசெய்யப்பட்டுள்ளார்.

ஹற்றன் பிரதேசத்தைச் சேர்ந்த ஒருவரின் காணாமல் போன வங்கி அட்டை தொடர்பில் ஹற்றன் பொலிஸாரால் கைது செய்யப்பட்ட சந்தேகநபரை, நீதிமன்றில் ஆஜர்படுத்தி, சட்ட நடவடிக்கையை கடுமையாக்க தேவையான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என தெரிவித்து, முறைபாட்டு தரப்பினரிடம் இருந்து 50,000 ரூபாயை சந்தேகநபரான பொலிஸ் சார்ஜன்ட் கோரியுள்ளார்.

இது தொடர்பில் பாதிக்கப்பட்ட தரப்பினர் இலஞ்சம் மற்றும் ஊழல் ஒழிப்பு குழுவினரிடம் செய்த முறைப்பாட்டுக்கு அமைய, இலஞ்சம் கோரிய தரப்பிடமிருந்து 20,000 ரூபாயைப் சார்ஜன்ட் பெற்றுக்கொண்ட போதே, அவர் அதிகாரிகளால் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

கைதுசெய்யப்பட்ட சந்தேகநபரான பொலிஸ் சார்ஜன்ட் ஹற்றன் நீதவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்படவுள்ளார்.

# பலாங்கொடை யூ.பி.ஜி தோட்ட குடியிருப்புகள் மீது தாக்குதல்

## செந்தில் தொண்டமான் கண்டனம்



தொழில் நிமித்தம் பலாங்கொடையிலிருந்து பொகவந்தலாவைக்கு செல்லும் போது பொகவந்தலாவையை சேர்ந்த இளைஞர், யுவதிகள் இனந்தெரியாத கும்பலினால் தாக்கப்பட்டதுடன், அவர்கள் தன்னை காப்பாற்றிக் கொள்ளும் நோக்கில் அருகிலிருந்த தோட்ட குடியிருப்புகளுக்கு சென்றுள்ளனர். அச்சமயத்தில் பெரும்பான்மையினத்தவரால் தோட்ட குடியிருப்புகள் மீதும் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. இச்சம்பவம் குறித்து உடனடியாக பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரியை தொடர்பு கொண்ட இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் தலைவர் செந்தில் தொண்டமான், இச்சம்பவத்துடன் தொடர்புடைய நபர்களை உடனடியாக கைது செய்ய வேண்டும் என வலியுறுத்தியுள்ளார்.

இச்சம்பவம் தொடர்பில் தோட்ட மக்கள் பின்னவள பொலிஸ் நிலையத்தின் பொறுப்பதிகாரிக்கு அறிவித்தனர். அதனையடுத்து இவ்விடயம் தொடர்பாக இரத்தினபுரி மாவட்ட பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரியிடம் சம்பவத்துடன் தொடர்புபட்டவர்கள் உடனடியாக கைது செய்யப்பட வேண்டும் எனவும், அவர்கள் மீது உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் செந்தில் தொண்டமான் வலியுறுத்தினார்.

அவ்வாறு அவர்கள் மீது உரிய சட்ட நடவடிக்கை எடுக்கப்படாவிடின் பலாங்கொடை பகுதியிலுள்ள அனைத்து தோட்டங்களிலும் போராட்டங்கள் முன்னெடுக்கப்படுமென பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரிக்கு கடுமையான எச்சரிக்கையை செந்தில் தொண்டமான் விடுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# தோட்ட குடியிருப்புகள் மீது இனந்தெரியாத கும்பல் தாக்குதல்

## பலாங்கொடை யூ.பி.ஜி தோட்டப்பகுதியில் குழப்பம்

அவிசாவளை நிருபர்

பலாங்கொடை யூ.பி.ஜி தோட்ட குடியிருப்புகள் மீது தாக்குதல் நடத்தியவர்களுக்கு எதிராக உரிய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என இ.தொ.கா உப செயலாளர் ரூபன் பெருமாள் தெரிவித்துள்ளார்.

ஆடை தொழிற்சாலையில் கடமையை நிறைவு செய்து பலாங்கொடை பிரதேசத்திலிருந்து பொகவந்தலாவை நோக்கி இளைஞர், யுவதிகள் (18ஆம் திகதி இரவு) சென்று கொண்டிருந்த போது அவர்கள் சென்ற பஸ்சை மறித்து இனந்தெரியாத கும்பலொன்று இளைஞர், யுவதிகள் மீது தாக்குதல் நடத்தியுள்ளனர். அதனைத் தொடர்ந்து அவர்கள் அதனை அண்மித்திருந்த தோட்ட குடியிருப்புகளுக்கு சென்று வீடுகளை சேதமாக்கியுள்ளனர். எனவே இவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படவேண்டும் எனவும் சம்பவத்திற்கு தமது கண்டனத்தையும் அறிவிப்பதாக இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் உப செயலாளர் ரூபன் பெருமாள் தெரிவித்துள்ளார்.

# திருமண வீடுகளில் கலந்து கொண்டவர்களுக்கு திடீர் சுகவீனம்

## சுகாதார பிரிவினர் விரிவான விசாரணை

கண்டி அம்பிட்டிய பிரதேசத்திலுள்ள பிரதான ஹோட்டலொன்றில் நடைபெற்ற பல திருமண நிகழ்வுகளில் கலந்து கொண்ட சுமார் 600 பேர் திடீரென சுகவீனமடைந்துள்ளதாக தெரியவருகின்றது.

இது தொடர்பில் கங்கவத்தகோரல உள்ளூராட்சி சபையின் சுகாதார பிரிவினர் விரிவான விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

சில நாட்களுக்கு முன்னர் அந்த ஹோட்டலில் மூன்று தி ருமண விழாக்கள் நடந்துள்ளன. அந்த மூன்று திருமண விழாக்களிலும் கலந்து கொண்ட சுமார் 600 பேர் வாந்தி, பேதி, காய்ச்சலால் பாதிக்கப்பட்டு தனியார் மற்றும் அரசாங்க மருத்துவமனைகளில் சிகிச்சை பெற்றுவருகின்றனர்.

கண்டியைச் சேர்ந்த பிரபல வர்த்தகர் ஒருவரின் குடும்ப திருமண வைபவமும் இந்த ஹோட்டலில் இடம்பெற்றுள்ளது. இங்கு திருமணம் முடித்த தம்பதியினர் தேனிலவுக்காக வெளிநாடு சென்றிருந்த போது அங்கு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இது தொடர்பில் கங்காவத்தகோரல உள்ளூராட்சி சபையின் சிரேஷ்ட அதிகாரி ஒருவரிடம் வினவிய போது, ஹோட்டலில் சாப்பிட்டவர்களுக்கு ஒருவித ஒவ்வாமை ஏற்பட்டுள்ளதாகவும், ஹோட்டல் நீரால் ஒவ்வாமை ஏற்பட்டிருக்க கூடுமென சந்தேகிப்பதால், ஹோட்டலின் நீர் மாதிரிகள் மேலதிக பரிசோதனைகளுக்காக பேராதனைப் பல்கலைக் கழகத்துக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக தெரிவித்தார்.

இச்சம்பவங்கள் இடம்பெற்று சில நாட்களின் பின்னர் சம்பவம் தொடர்பில் முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளமையினால் விசாரணைகளை முன்னெடுப்பதில் சிக்கல் ஏற்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.




நுவரெலியா மாவட்ட மக்கள் வங்கி கிளைகளில் இயங்கும் இந்து மா மன்றம் ஊடாக உலர் உணவுப் பொருட்கள் வழங்கும் வைபவம் இந்து மா மன்ற இணைப்பாளர் திரு எம்.ஜெகதீசன். (மக்கள் வங்கி முகாமையாளர் மஸ்கெலியா) தலைமையில் இடம்பெற்றது. இதன்போது 50 வறிய குடும்பங்களுக்கு உலர் உணவு பொதிகள் வழங்கப்பட்டது.
படம்: மஸ்கெலியா நிருபர்

# வனராஜா வட்டார மக்களின் மயான பிரச்சினைக்கு தீர்வு



நோர்வூட் பிரதேச சபைக்கு உட்பட்ட வனராஜா வட்டாரம் – தரவளை கொலனி வாழ் மக்கள், இறந்தவர்களை நல்லடக்கம் செய்வதற்காக இதுவரை காலமும் பயன்படுத்திய மயான பூமியை தொடர்ந்து பயன்படுத்த நோர்வூட் பிரதேச சபையில் ஏகமானதாக தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

நோர்வூட் பிரதேச சபையின் மாதாந்த சபையமர்வு டின்சின் மண்டபத்தில் சபைத்தலைவர் ரவி குழந்தைவேலு தலைமையில் நேற்று (18) இடம்பெற்றது.

இதன்போது அமர்வில் வட்டார உறுப்பினர் ஒருவர் வனராஜா வட்டாரத்திற்கு உட்பட்ட தரவளை கொலனி மக்கள் இறந்தவர்களை நல்லடக்கம் செய்வதற்காக இதுவரை காலமும் பயன்படுத்தி வந்த பொது மயான பூமியில் இறப்பவர்களின் உடலை நல்லடக்கம் செய்ய ஹற்றன் – டிக்கோயா நகரசபை அனுமதி மறுத்துள்ளமை தொடர்பில், விசேட பிரேரணையை முன்வைத்தார்.

இதனையடுத்து சபையமர்வில் கலந்து கொண்ட அனைத்து உறுப்பினர்களும் ஆதரவு வழங்கியமையால் வனராஜா வட்டாரத்திற்கு உட்பட்ட தரவளை கொலனி வாழ் மக்கள் தொடர்ந்துபயன்படுத்திய அதே மயான பூமியை பயன்படுத்த ஏகமானதாக தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

# சட்டவிரோதமாக மாணிக்கக்கல் அகழ்வில் ஈடுபட்ட மூவர் கைது

மஸ்கெலியா தினகரன் விசேட நிருபர்

மஸ்கெலிய சாமி மலை ஸ்டொக்ஹோம் தோட்டப்பகுதியிலுள்ள மவுஸ்சாகலை நீர்த்தேக்கத்திற்கு நீரை வழங்கும் சாமிமலை ஓயாவில் பாரியளவில் சட்டவிரோதமாக மாணிக்கக்கல் அகழ்வு இடம்பெற்றுவருவதாக தெரிவிக்கப்படுகின்றது.

இச் சட்டவிரோத செயலானது நீண்டகாலமாக இடம்பெற்றுவருவதாக அப்பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர்.

மாணிக்கக்கல் அகழ்வில் ஈடுபடுவதாக ஹற்றன் குற்றத்தடுப்பு பொலிஸ் அதிகாரிகளுக்கு கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலையடுத்து நேற்று காலை ஹற்றன் பொலிஸார் இச்சுற்றிவளைப்பை மேற்கொண்டிருந்தனர்.

இதன்போது மூன்று பேரை பொலி!ஸார் கைது செய்துள்ளனர்.



மேலும் அவர்களிடமிருந்து அகழ்வுக்கு பயன்படுத்திய உபகரணங்களும் கைப்பற்றப்பட்டுள்ளது.

சந்தேகநபர்களை ஹற்றன் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தவுள்ளதாக ஹற்றன் வலய குற்றத்தடுப்பு உயர் அதிகாரி பிரேமலால் தெரிவித்தார்.




# பிரதேச சபை செயலாளர்களின் இடமாற்றம் காலவரையறையின்றி பிற்போடல்

## கிழக்கு மாகாண பிரதிப் பிரதம செயலாளர் எம்.எல்.ஏ.மன்சூர்

கிழக்கு மாகாணத்தின் அம்பாறை, மட்டக்களப்பு, திருகோணமலை ஆகிய மாவட்டங்களில் இயங்கி வரும் 18 பிரதேச சபைகளின் செயலாளர்களுக்கு வழங்கப்பட்ட இட மாற்றங்கள் காலவரையறையின்றி பிற்போடப்பட்டுள்ளன.

இதற்கான உத்தரவை கிழக்கு மாகாண ஆளுநர் திருமதி அனுராதா ஜகம்பத் மாகாணத்தின் பிரதம செயாளருக்கூடாக, தமக்கு வழங்கியுள்ளதாக கிழக்கு மாகாண சபையின் நிர்வாகத்திற்கு பொறுப்பான பிரதிப்பிரதம செயலாளர் எம்.எல்.ஏ மன்சூர் தெரிவித்தார்

இதுபற்றி அவர் மேலும் தெரிவித்ததாவது ,அம்பாறை, மட்டக்களப்பு மாவட்டங்களில் தலா 07 பிரதேச சபைகளுக்கும், திருகோணமலை மாவட்டத்தில் 04 பிரதேச சபைகளுக்குமாக மொத்தம் 18 பிரதேச சபைகளின் செயலாளர்கள் இந்த இடமாற்றங்களில் உள்வாங்கப்பட்டிருந்தனர். க

டந்த இருவாரங்களுக்கு முன்னர், மாகாண ஆளுநரின் உத்தரவின்பேரில் இந்த இடமாற்றங்கள் வழங்கப்பட்டிருந்தன. இவை அனைத்தையும் காலவரையறையின்றி பின்போடுமாறு ஆளுநர் உத்தரவிட்டுள்ளார். பிரதே சபைகளின் சில தலைவர்களும், இவ்விடமாற்றத்தை இரத்துச் செய்யவேண்டுமென ஆளுநரை கடந்த (17) அவரது செயலகத்தில் சந்தித்து கோரிக்கை விடுத்திருந்தமை குறிப்பிடத்தக்கது



அக்கரைப்பற்று அல்பாயிஸா பாடசாலையின் முன்னாள் அதிபர் எம்,ஏ,ஏ,இஸ்ஸடீன் அண்மையில் புரவலர் புத்தகப்பூங்கா நிறுவுநர் ஹாஸிம் உமரைச் சந்தித்தி, இலக்கியப் பணிகள் குறித்து கலந்துரையாடினார். இதன்போது, புத்தகம் ஒன்றை வழங்கி நட்பை பரிமாறியபோது பிடிக்கப்பட்ட படம். ஒருதொகை நூலை பாடசாலை நூலகத்துக்கு வழங்குவதாகவும் புரவலர் உறுதியளித்தார். படம்: அட்டாளைச்சேனை குறூப் நிருபர்

## திருமலையில் நல்லிணக்கத்தை கட்டியெழுப்பும் சிரமதான நிகழ்வு

தம்பலகாமம் குறூப் நிருபர்

நல்லிணக்கத்தைக் கட்டியெழுப்பும் வகையில் திருகோணமலை நகரசபைக்குட்ட சமுத்திராகம கரையோரப்பகுதியை சுத்தப்படுத்தும் நிகழ்வு நேற்று முன்திம் (18) இடம் பெற்றது.சர்வமத இளைஞர்களின் ஒத்துழைப்பில், இந்நிகழ்வு இடம்பெற்றது.

விழுது நிறுவன ஏற்பாட்டில் இடம்பெற்ற இந்நிகழ்வில் "கழிவு முகாமைத்துவமூடாக ஏற்படும் தொற்றுநோய்களைக் குறைத்தல், அருகிவரும் மானினங்களை பாதுகாக்க ஒன்றிணைதல்" போன்ற தொனிப்பொருளில் நிகழ்வுகள் இடம்பெற்றன.

மான்களை பாதுகாப்பது மானிடத்தின் பொறுப்பு போன்ற வாசகங்கள் அடங்கிய ஸ்டிக்கர்களும் அப்பகுதியில் ஒட்டப்பட்டு இதன்போது விழிப்புணர்வூட்டப்பட்டது.

திருகோணமலை சுகாதார வைத்திய அதிகாரி விஜயகுமார் மற்றும் பொது சுகாதார பரிசோதகர்கள் ஆகியோர் இதில் பங்கேற்று கழிவுமுகாமைத்துவத்தின் அவசியம் பற்றி விளக்கமளித்தனர்.

திருகோண மலை நகரசபையும் இதற்கா ன ஒத்துழைப்புக்களை வழங்கியதுடன்,அப்பகுதி இளைஞர்களும் ஆர்வத்துடன் செயற்பட்டனர்.

மானினங்கள் வாழும் பகுதியும் இதன்போது விஷேடமாக சுத்தம் செய்யப்பட்டது.

## கல்லடி திருச்செந்தூர் முருகன் ஆலய வருடாந்த மஹோற்சவப் பெருவிழா



புதிய காத்தான்குடி தினகரன் நிருபர்

கிழக்கிலங்கையின் வரலாற்றுச் சிறப்புடையதும் தொன்மை வாய்ந்ததுமான மகா துறவி சுவாமி ஓங்காரானந்த சரஸ்வதி அவர்களால் ஸ்தாபிக்கப்பட்ட, மட்டக்களப்பு கல்லடி ஈழத்து திருச்செந்தூர் முருகன் ஆலய வருடாந்த மஹோற்சவ பெருவிழா (17) புதன்கிழமை நண்பகல் 12 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமானது.

கொடியேற்றத்தைத் தொடர்ந்து முதல் எட்டு நாட்களும் திருவிழாக்கள் நடைபெற்று, ஒன்பதாம் நாளாகிய 25.08.2022 வியாழக்கிழமை பி.ப மூன்று மணியளவில் தேர்த்திருவிழாவும் பத்தாம் நாளாகிய 26.08.2022 திகதி வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு வங்கக் கடலில் சமுத்திர தீர்த்தோற்சவமும் இடம் பெற்று, இவ்வாண்டிற்கான மஹோற்சவ பெருவிழா நிறைவடையவுள்ளது.

நாட்டில் ஆகம முறைப்படி அமைக்கப்பட்ட ஆலயங்களில், தமிழ் மொழியில் வேத பாராயணங்கள் ஓதப்பட்டு முருகப்பெருமானிற்கு பூசை வழிபாடுகள் இடம்பெறும் ஒரேயொரு ஆலயமாக இவ்வாலயம் திகழ்வதும் குறிப்பிடத்தக்கது.

## கட்டார் புகைப்பட போட்டியில் சாய்ந்தமருது இளைஞனின் புகைப்பட தெரிவு



நற்பிட்டிமுனை விசேட நிருபர்

கட்டார் ஸஃபாரி மால் நடாத்தும் புகைப்பட போட்டியில் சாய்ந்தமருதைச் சேர்ந்த இளைஞர் ஜே. எம். பாஸிதின் புகைப்படமும் தெரிவு செய்யப்பட்டுள்ளது.சிறு வயதிலிருந்து டிஜிட்டல் மற்றும் புகைப்பட துறையில் ஆர்வம் கொண்ட இவர், பல போட்டிகளிலும் பங்கு பற்றியுள்ளார்.

கட்டாரில் நடைபெறும் இப் புகைப்பட போட்டியில் சுமார் 500க்கும் மேற்பட்ட போட்டியாளர்கள் கலந்து கொண்டிருந்தனர். அதில் தெரிவு செய்யப்பட்ட முப்பது புகைப்படங்களை ஆகஸ்ட் 17 தொடக்கம் ஆகஸ்ட் 30 வரை கட்டார் அபு ஹமூரிலுள்ள ஸஃபாரி மாலில் மக்களின் பார்வைக்கு வைக்கப்பட்டுள்ளது.

இந்த கண்காட்சியில்,புகைப்படங்களுக்கு மக்கள் வாக்களித்து மூன்று வெற்றியாளர்களை தெரிவு செய்யவுள்ளனர்.

முதலாவது வெற்றியாளருக்கு 3000 ரியால், இரண்டாவது வெற்றியாளருக்கு 2000 ரியால், மூன்றாவது வெற்றியாளருக்கு 1000 ரியால் பரிசுத் தொகையாக வழங்கப்படவுள்ளது. இதில் மாணவர்கள் மற்றும் பெரியவர்கள் என இரண்டு பிரிவுகளில் பரிசு வழங்கப்படவுள்ளன.

பல நாடுகளிலிருந்தும் போட்டியாளர்கள் இதில்,பங்குபற்றுகின்றனர்.

## தென்கிழக்கு பல்கலைக்கழக முப்பெரும் விழா பல்கலைக்கழக உபவேந்தர் பிரதம அதிதி

ஒலுவில் விசேட நிருபர்

தென்கிழக்குப் பல்கலைக்கழக கலை கலாசார பீடத்தின் முப்பெரும் விழா புதன்கிழமை (17) கலாசார பீடத்தின் பீடாதிபதி பேராசிரியர் எம். எம். பாஸில் தலைமையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில், பல்கலைக்கழக உபவேந்தர் பேராசிரியர் றமீஸ் அபூபக்கர் பிரதம அதிதியாகக் கலந்துகொண்டார். உலக வங்கியின் 120 மில்லியன் ரூபா நிதியுதவியுடன், புதிதாக நிர்மாணிக்கப்பட்ட மாணவர் செயற்பாட்டு மையம் இதன்போது, உத்தியோகபூர்வமாகத் திறந்துவைக்கப்பட்டது.

சகல வசதிகளுடன் கூடியதாக அமைக்கப்பட்டுள்ள இந்த மாணவர் செயற்பாட்டு மையத்தில், இளம் கலை மாணவர்களின் இணைப்பாடவிதான செயற்பாடுகளுக்கான ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளதுடன் தொழில் வழிகாட்டல் அலகு, சமூக நல்லிணக்க மைய்யம், மாணவர் பிரத்தியேக நூலகம் என்பனவும் அமைக்கப்பட்டுள்ளன. எஹட் நிகழ்ச்சித் திட்டத்தினூடாக மாணவர் மையத்திற்காக சுமார் 15 மில்லியன் ரூபா செலவிடப்பட்டுள்ளது.

மேலும், ஆங்கில மொழியாற்றல், கணினி அறிவு என்பவற்றை மேம்படுத்துவதற்காக சுமார் 18.6 மில்லியன் செலவிடப்பட்டுள்ளது. இதில், விரிவுரை மண்டபங்களை டிஜிடல்மயப்படுத்துவதற்காக 8.6 மில்லியன் ரூபா செலவிடப்பட்டு, விரிவுரை மண்டபங்களில் ஸ்மார்ட் போட், எல்.ஈ.டீ.திரைகள்என்பனவும் பொருத்தப்பட்டுள்ளதுடன் விரிவுரை மண்டபங்களும் நவீனமயப்படுத்தப்பட்டுள்ளன. கலை கலாசார பீடத்தின் இணைய வழிமூலமான கற்றல், கற்பித்தல் செயற்பாடுகளை மேம்படுத்த தனியான தரவுத்தள சேமிப்பகம் ஒன்றும் நிறுவப்பட்டுள்ளது.



மீனவர்களுக்கான நவீன தொழில்நுட்பம் தொடர்பான பயிற்சிகளை மேற்கொள்ள, தென் கிழக்குப்பல்கலைக்கழகம் ஆலோசனைகளை மேற் கொண்டு வருகின்றது. இது தொடர்பான சாத்தியங்களை ஆராயும் பொருட்டு பல்கலைக்கழக உப வேந்தர் பேராசிரியர் ரமீஸ் அபூபக்கர், ஒலுவிலுள்ள மீனவத்துறைமுகத்திற்கு அண்மையில் விஜயம் செய்து கலந்துரையாடிய போது. படம்: கல்முனை குறுப் நிருபர்

## வரட்சியால் பாதிக்கப்பட்ட மஜ்மா நகர் பகுதிகளுக்கு குடிநீர் விநியோகம்

புதிய காத்தான்குடி தினகரன் நிருபர்

வரட்சியால் பாதிக்கப்பட்டு குடிநீர்த்தட்டுப்பாடு நிலவும் மஜ்மா நகரின் சில பகுதிகளுக்கு குடிநீர் விநியோகிக்கப்பட்டது. மாவட்ட அனர்த்த நிவாரண சேவைகள் நிலையத்திடம் பிரதேச செயலாளர் வேண்டிக்கொண்டதற்கிணங்க, பிரதேச சபையின் ஏற்பாட்டில்,இப்பகுதிகளுக்கு குடிநீர் விநியோகிக்கப்பட்டது.

கிராம அபிவிருத்திச் சங்கம் இதற்கான ஏற்பாடுகளைச் செய்தமை குறிப்பிடத்தக்கது.

இதில் அப்துர் ரஹ்மான் வீட்டுத் திட்டம், முஹைதீன் அப்துல் காதர் வீட்டுத்திட்டம், சிராஜிய்யா அரபுக் கல்லூரி, பிலால் பள்ளிவாசல் மற்றும் றஹ்மா ஜும்ஆ பள்ளிவாசல் போன்ற பிரதேசங்களுக்கு ஆரம்பக்கட்டமாக நீர்த்தாங்கி வைத்து குடிநீர் விநியோகிக்கப்பட்டது.

இந்நிகழ்வில், பிரதேச செயலக அனர்த்த சேவைகள் உத்தியோகத்தர் கே.புவிதரன், கிராம அபிவிருத்திச் சங்கத்தலைவர் ஏ.எல்.சமீம், பிரதேச சபை சாரதி முஹம்மது ஜபீர் மற்றும் பிரதேச பொதுமக்களும் கலந்துகொண்டனர்.

இதற்கான ஏற்பாட்டைச்செய்த தவிசாளர் ஏ.எல்.நௌபர், ஓட்டமாவடி பிரதேச செயலார் வீ.தவராஜா, ஓட்டமாவடி பிரதேச சபை செயலாளர் எஸ்.சிஹாப்தீன், உத்தியோகத்தர் கே.புவிதரன், கிராம சேவை உத்தியோகத்தர் எம்.எச்.எம்.அஸ்ஹர், பிரதேச சபை உறுப்பினர், பிரதேச செயலக மற்றும் பிரதேச சபை உத்தியோகத்தர்கள் ஆகியோருக்கு அப்பகுதி மக்கள் சார்பாக கிராம அபிவிருத்திச் சங்கத்தலைவர் ஏ.எல்.சமீம் நன்றி தெரிவித்தார்.

## தமிழ்மொழி தின போட்டிகளை நடாத்தும் திகதிகள் கல்வி அமைச்சினால் மாற்றம்

### திருத்தப்பட்ட புதிய திகதிகள் வலயங்களுக்கு அறிவிப்பு

காரைதீவு குறூப் நிருபர்

தமிழ்மொழி தினப்போட்டிகளை நடாத்துவதற்கான திகதிகளில் மாற்றம் செய்யப்பட்டுள்ளது.சமகால நிலைமைகளை கருத்திற்கொண்டு கல்வி அமைச்சு இந்தத் திருத்தங்களைச் செய்துள்ளது.இதற்கமைய,

கிழக்கு மாகாண கல்விப்பணிப்பாளர் திருமதி என், புள்ளநாயகம் கிழக்கு மாகாணத்தில் போட்டிகள் நடத்தப்படுவதற்கான திருத்தப்பட்ட திகதிகள் தொடர்பாக சகல வலயக் கல்வி பணிப்பாளர்களுக்கும் அறிவித்துள்ளார்.

இதன்படி, சகல வலயமட்ட தமிழ்மொழி தினப்போட்டிகளும் எதிர்வரும் (29) திகதிக்கிடையில் நடத்தப்பட வேண்டும். அதே போன்று மாவட்ட மட்ட போட்டிகள் எதிர்வரும் செப்டம்பர் மாதம் (04) திகதிக்கு இடையே நடத்தப்பட வேண்டும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. கிழக்கு மாகாணமட்ட போட்டிகள் எதிர்வரும் செப்டம்பர் 24 மற்றும் 25 ஆம் திகதிகளில் நடைபெற ஏற்பாடாகியுள்ளதால்,இதற்கான விண்ணப்பங்கள் எதிர்வரும் செப்டம்பர் (10) திகதிக்கிடையில் அனுப்பப்பட வேண்டும்.

எனினும், எழுத்தாக்கப்போட்டிகளுக்கான வலய மட்டப்போட்டிகளுக்குரிய விண்ணப்ப முடிவுத் திகதி 20. 08 2022 எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. இதே நேரம்,மாவட்ட மற்றும் மாகாண எழுத்தாக்க போட்டிகளுக்கான விண்ணப்ப முடிவு திகதி 11.09.2022 எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

## உதிரம்கொடுப்போம், உயிர்கொடுப்போம் பள்ளிவாசலில் இரத்ததான நிகழ்வு



(புதிய காத்தான்குடி தினகரன் நிருபர்)

மட்டக்களப்பு ஸலாமா பௌன்டேஷனின் ஏற்பாட்டில் "உதிரம் கொடுப்போம் உயிர் காப்போம்" எனும் தொனிப்பொருளில் ஆறாவது தடவையாக இரத்ததான முகாம் நடாத்தப்பட்டது.

மட்டக்களப்பு ஜாமியுஸ்ஸலாம் ஜும் ஆ பள்ளிவாசலில், இடம் பெற்ற குறித்த இரத்ததான முகாமிற்கு, பிரதம அதிதியாக மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபர் கே.கருணாகரன் கலந்துகொண்டு இரத்ததான முகாமை ஆரம்பித்து வைத்தார்.

ஆரம்ப நிகழ்வில், ஆன்மீக அதிதிகளாக மட்டக்களப்பு மாவட்ட சர்வமத ஒன்றியத்தின் தலைவர் சிவஸ்ரீ .வீ.கே.சிவபாலன் குருக்கள், கிழக்கு பல்கலைக்கழகத்தின் சிரேஸ்ட விரிவுரையாளரும் அருட் தந்தையுமான

நவரெட்ணம் நவாஜி அடிகளார், பிஸ்மி நிறுவனத்தின் பணிப்பாளர் அஷ்ஷெய்க் எம்.பி.எம்.பிர்தௌஸ் நழீமி ஆகியோர் கலந்து சிறிப்பித்தனர்.

விஷேட அதிதிகளாக மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையின் பிரதிப்பணிப்பாளர் எம். பி.மதன்,மட்டக்களப்பு மாநகர சபையின் ஆணையாளர் எம். மதிவண்ணன், மட்டக்களப்பு சிரேஸ்ட பொலிஸ் அத்தியட்சகர் எல்.ஆர்.குமாரசிறி, மட்டக்களப்பு ஜாமியுஸ்ஸலாம் ஜும்மா பள்ளிவாசல் தலைவர் எம்.எச்.எம.சியாம், மாவட்ட ஊடக அதிகாரி வீ.ஜீவானந்தன், மட்டக்களப்பு வர்த்தக சங்கத்தின் செயலாளர் தியாகராஜா, பள்ளிவாசலின் செயலாளர்

அமீன் நழீமி உட்பட மேலும் பலர் கலந்து சிறப்பித்தனர்.

மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையின் இரத்த வங்கியின் வைத்தியர் தியாகராஜா தவனேசன் தலைமையிலான இரத்த வங்கியின் உத்தியோகத்தர் குழாம், இரத்தக் கொடையாளர்களிடமிருந்து இரத்தத்தை சேகரிக்கும் பணியை மேற்கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

மட்டக்களப்பு ஜாமியுஸ்ஸலாம் பள்ளிவாசலுடன் இயங்கி வருகின்ற ஸலாமா பௌன்டேஷனானது, கடந்த 2016 ஆண்டு தொடக்கம் மட்டக்களப்பில் சமூக சமயங்களுக்கிடையிலான ஒற்றுமையை மேம்படுத்துவதற்காக செயற்பட்டு வருகிறது.

# நகர்வலம்



## உல்லாச பயணத்துறை அபிவிருத்தி தொடர்பான விசேட கலந்துரையாடல்

### அமைச்சர் ஹரீன் பங்கேற்பு





பேருவளை விசேட நிருபர்

பேருவளை, அளுத்கம பிரதேச உல்லாசப் பயணத் துறை அபிவிருத்தி மற்றும் அதுதொடர்பான குறைபாடுகள் பற்றி ஆராயும் விசேட கூட்டமொன்று அளுத்கம களுவாமோதர அயேஷா உல்லாசப்பயண ஹோட்டலில் அண்மையில் நடைபெற்றது.

பாராளுமன்ற உறுப்பினர் பியல் நிஷாந்த தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் உல்லாசப்பயணத் துறை மற்றும் காணி அமைச்சர் ஹரீன் பெர்னாண்டோ பிரதம அதிதியாக கலந்து கொண்டார்.

பாராளுமன்ற உறுப்பினர்களான மர்ஜான் பளீல், பேருவளை நகர பிதா மஸாஹிம் மொஹமட், பேருவளை பிரதேச சபை தலைவர் மேனக விமலரத்ன, பிரதேச செயலாளர் ரஞ்சன் பெரேரா, உல்லாசப் பயண அதிகாரசபை தலைவர் பிரியந்த பெர்ணாந்து மற்றும் மேல் மாகாண உல்லாசப்பயண சபைத் தலைவர் சுதத் ஹேவாபத்திரன உட்பட உல்லாசப்பயண அமைச்சின் உயரதிகாரிகள் உல்லாச ஹோட்டல் உரிமையாளர்களும், வழிகாட்டிகளும் கலந்துகொண்டனர்.

## பொலிஸ் பொறுப்பதிகாரி பொதுமக்கள் சந்திப்பு



திறப்பனை தினகரன் நிருபர்

அநுராதபுரம் மாவட்ட ஹிதோகம பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரியாக கடமை பொறுப்பேற்றுள்ள சமன் குணதிலக (OIC) அண்மையில் நாச்சியாதீவு பொதுமக்களுடன் விசேட சந்திப்பை மேற்கொண்டார். கடந்த வெள்ளிக்கிழமை (12) ஜும்ஆத் தொழுகையின் பின் இச்சந்திப்பு நாச்சியாதீவு ஜும்மா பள்ளிவாசலில் நடைபெற்றது. இதன்போது பிரதேசத்தின் முக்கிய விடயங்கள் தொடர்பில் கலந்துரையாடினார். இச்சந்திப்பில் பள்ளிவாசல் நிர்வாக சபைத் தலைவர் தேசமான்ய ஏ.ஆர். எம்.தாரிக், ஓய்வு பெற்ற கிராம சேவையாளர் நிர்வாக உத்தியோகத்தர் எச்.எம். இஸ்மாயில் உட்பட நிருவாக அங்கத்தவர்கள் மற்றும் உலமாக்கள், ஊர் ஜமா அத்தினர்களும் கலந்து சிறப்பித்ததோடு பிரதேசத்தின் முக்கிய பாதுகாப்பு தொடர்பிலும் இதன்போது கலந்துரையாடப்பட்டது.

வண்ணாத்தவில்லு பிரதேச

## விவசாய நிலங்கள் காட்டு யானைகளால் துவம்சம்; பயிர்ச் செய்கைகள் கடும் பாதிப்பு

### வாழ்வாதாரம் பாதிக்கப்படுவதாக விவசாயிகள் கவலை

கற்பிட்டி தினகரன் விசேட நிருபர்



புத்தளம் வண்ணாத்தவில்லு, எலுவான்குளம் பகுதியில் காணப்படும் விவசாய நிலங்களை காட்டு யானைகள் தொடர்ச்சியாக துவம்சம் செய்து வருவதாக அந்தப்பகுதி விவசாயிகள் கவலை தெரிவிக்கின்றனர்.

வண்ணாத்தவில்லு பிரதேச செயலகத்திற்கு உட்பட்ட எலுவன் குளம், தவுசமடு, கம்பியடித்துண்டு மற்றும் குத்தடிவெளி ஆகிய பகுதிகளில் 750 இற்கும் அதிகமான ஏக்கர் நிலப்பரப்பில் நெற்பயிர் செய்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

விவசாயத்தை நம்பி வாழும் இந்தப் பகுதி மக்கள் வங்கிகளில் கடன்களைப் பெற்றும் தங்க நகைகளை அடகு வைத்தும் வழமை போல இம்முறையும் வேளாண்மை பயிர் செய்கையில் ஈடுபட்டு வருகின்றனர்.

பொருளாதார ரீதியாக கடுமையாக பாதிக்கப்பட்டிருக்கும் எலுவன் குளம் பகுதி விவசாயிகள் நெற்பயிர் செய்கைக்குத் தேவையான உரம் உள்ளிட்ட பசளை இன்மை, பசளைகளின் விலை அதிகரிப்பு மற்றும் எரிபொருள் தட்டுப்பாடு உள்ளிட்ட பல பிரச்சினைகளுக்கும் முகம் கொடுத்தே தாம் இம்முறை நெற்பயிர் செய்கையை மேற்கொண்டு வருவதாகவும் சுட்டிக்காட்டுகின்றனர்.

இந்த நிலையில், ஒவ்வொரு நாளும் மாலை வேளைகளில் 5 மணிக்குப் பின்னர் காட்டு யானைகள் விவசாய நிலங்களுக்குள் புகுந்து பயிர் செய்கைகளை துவம்சம் செய்து வருவதாகவும் விவசாயிகள் கூறுகின்றனர்.

கடன்களை பெற்று செய்கை பண்ணப்பட்ட நெற்பயிர் செய்கையை ஒரே இரவில் வந்து யானைகள் துவம்சம் செய்வதால் தமது வாழ்வாதாரம் முழுமையாக பாதிக்கப்படுவதாக எலுவங்குளம் விவசாயிகள் கவலை தெரிவிக்கின்றனர்.

முன்னர் ஓரிரு யானைகளே வந்து சென்றிருந்த நிலையில், தற்போது கூட்டம் கூட்டமாக யானைகள் வயல்வெளிக்கு வருகை தந்து பயிரை முற்றாக சேதப்படுத்திவிட்டு சென்றுவிடுகின்றன என விவசாயிகள் குறிப்பிடுகின்றனர்.

## கால்வாயில் விழுந்து பெண் உயிரிழப்பு

அநுராதபுரம் தினகரன் நிருபர்

ராஜாங்கனை நீர்த்தேக்க கால்வாயில் விழுந்து பெண் ஒருவர் பரிதாபகரமான முறையில் உயிரிழந்துள்ளதாக தமுத்தேகம பொலிஸார் தெரிவித்தனர்.

இச்சம்பவம் நேற்று முன்தினம் மாலை தமுத்தேகம ராஜாங்கனை நீர்த்தேக்கத்திற்கு அருகில் இடம் பெற்றுள்ளதாக விசாரணைகளை மேற்கொண்டு வரும் பொலிஸார் தெரிவித்தனர். சம்பவத்தில் 43 வயதுடைய யாய மூன்று ராஜாங்கனை பகுதியைச் சேர்ந்த பெண் ஒருவரே உயிரிழந்துள்ளார் என்பது தெரிய வந்துள்ளது.

சம்பவம் பற்றி மேலும் தெரிய வருவதாவது; உயிரிழந்த பெண் சம்பவ தினமான மாலை கால்வாயிலில் துணிகளை துவைப்பதற்கு சென்றிருந்தவேளை இச்சம்பவம் இடம் பெற்றுள்ளமை மேலும் தெரிய வந்துள்ளது. சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை தமுத்தேகம பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.



வெலிகம கப்புவத்தை அந்நூர் மகாவித்தியாலயத்தில் இடம்பெற்ற மாணவர் தலைவர்களுக்கு சின்னம் சூட்டும் நிகழ்வில் பிரதம அதிதியாக கலந்து கொண்ட மாத்தறை மாவட்ட ஆசிரிய ஆலோசகரும் மாணவர் வழிகாட்டல் அதிகாரியுமான எம். ஐ. எம். நியாஸ் மற்றும் விஷேட அதிதியாக கலந்து கொண்ட மாத்தறை மாவட்ட ஆசிரிய ஆலோசகர் எம். ஏ. எம். அமீன் ஆகியோரும் பாடசாலை அதிபர் எம். எச். எம். நவாஸ், உப அதிபர் அஷ்ஷேக் எம். யூ. எம். வாஸில் (நளீமி) மற்றும் எம். எச். எம். இன்பாஸ் ஆகியோரும் மாணவர்களுக்கு சின்னங்கள் சூட்டுவதை படங்களில் காணலாம். (படங்கள் வெலிகம தினகரன் நிருபர்)

## புத்தளம் நகர சபையின் இலவச ஆயுர்வேத வைத்தியசாலை விரைவில் திறக்க ஏற்பாடு

புத்தளம் தினகரன் நிருபர்



புத்தளம் நகரசபையின் சவீவபுர இலவச ஆயுர்வேத வைத்தியசாலை எதிர்வரும் மாதம் திறக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

இது சம்பந்தமான முக்கிய கலந்துரையாடல் (15) நகர பிதா எம்.எஸ். எம்.ரபீக் தலைமையில் நகரசபை உறுப்பினர் ரனீஸ் பதுர்தீனின் பங்குபற்றுதலுடன் நகரசபை காரியாலய கேட்போர்கூடத்தில் இடம்பெற்றது.

வைத்தியர் எம்.எஸ்.எம்.முனவ்வர் தலைமையில் வருகை தந்திருந்த வைத்தியர் குழு இக்கலந்துரையாடலில் பங்கேற்றது.

அதனைத் தொடர்ந்து நகர சபையினால் மூலிகை உற்பத்தித் தோட்டத்திற்காக தெரிவுசெய்யப்பட்டுள்ள இடத்தினையும் குழுவினர் நேரில் சென்று பார்வையிட்டனர்.

இதன்போது நகரபிதாவினால் தெரிவுசெய்யப்பட்டுள்ள இடம் மூலிகை செய்கைக்கு மிகவும் பொருத்தமான இடமாகவும் அங்கு ஏற்கனவே பெறுமதியான மருத்துவ குணம் மிக்க மூலிகை மருத்துவ செடிகளும், மரங்களும் காணப்படுவதாகவும் தமது உற்பத்தி செயற்பாடுகளை தாம் விரைவில் ஆரம்பிக்கவுள்ளதாகவும் வைத்தியர்கள் தெரிவித்தனர்.

## என்லங்காவினால் கிராமிய மக்களுக்கு போஷாக்கு திட்டம்

திறப்பனை தினகரன் நிருபர்



என்லங்கா திட்டத்தின் கீழ் கிராமிய பகுதிகளில் வாழும் மக்களின் சுற்றுச்சூழல், உணவு, வாழ்க்கை நிலைமைகள், சுகாதாரம் போன்றவைகளை அதிகரிக்கும் மக்கள் போஷாக்கு திட்டம் ஒன்றை ஏற்படுத்தும் நோக்கில் முன்மாதிரி வேலைத்திட்டம் ஒன்று திரப்பனை பிரதேச செயலகப் பிரிவின் நல்லமுதாவ ,நாச்சாதுவ பிரதேச செயலக பிரிவில் நாச்சாதுவா கிராமிய பிரதேசம் இதற்காக தெரிவு செய்யப்பட்டுள்ளன.

இந்த திட்டத்திற்கு உலக சுற்றுச் சூழல் அமைப்பு நிதி வசதிகளை வழங்கியுள்ளது.

இதன் கீழ் முதற் கட்டமாக திறப்பனை பிரதேச செயலகப் பிரிவிற்குட்பட்ட நல்லமுதாவ பிரதேச மக்களின் போசாக்கு நிலையை உயர்த்தும் நோக்குடன் கூடிய குளங்கள் மற்றும் குளங்களை அண்டி வாழும் சமூகத்துடன் இணைந்து பல வேலை திட்டங்கள் இதன் கீழ் மேற்கொள்ளப்படுகின்றன.

ஹெல ஒசு மூலம் உயிரைக் காக்கும் விழுமியங்கள் நிறைந்த ஆரோக்கியமான சமுதாயத்தை உலகுக்கு வழங்குவோம் என்ற தொனிப்பொருளில் இப்போஷாக்கு நிகழ்ச்சி திட்டங்கள் இங்கு நடத்தப்பட்டன.

இத் திட்டத்தின் கீழ், சத்தான போஷாக்கு உணவுகள் தேர்ந்தெடுக்கப்படுதல்,பின்னர் அவ் உணவுகளின் ஊட்டச்சத்து, அதன் தரம், மற்றும் அவற்றை உணவாக எப்படி எடுத்துக் கொள்வது என்பது பற்றி பிரயோக ரீதியில் இது மேற் கொள்ளப்படுகிறது. இதன் கீழ் குறிப்பாக கர்ப்பிணி தாய்மார்களுக்குத் தேவையான போஷாக்கு உணவை வழங்குதல்,பாலர் குழந்தைகளுக்கு உணவு மற்றும் பரிசுகளை வழங்குவதும் இதன் கீழ் நடைமுறை படுத்தப்படுகின்றன.

## கம்பளையில் மனாகி மஜ்லிஸ் தமாம்

கம்பளை நகரில் அமைந்துள்ள செய்ஹ் சம்ஸ் அல் பாஸி ஸாவியாவில் வருடாந்தம் நடைபெற்றுவரும் சாதுலிய்யா மனாகிப் தமாம் வைபவம் நாளை ஞாயிற்றுக்கிழமை (21) மு.ப. 11 மணிக்கு நடைபெறவுள்ளது. ளுஹர் தொழுகையை தொடர்ந்து துஆ, ஹழரா, முஸாக்கரா நிகழ்ச்சிகள் நடைபெறும்.

மாத்தறை மின்னதுல் பாஸியா அரபுக் கல்லூரி முதல்வர் உஸ்தாத் கலீபதுஷ் ஷாதுலி மௌலவி எம்.எஸ்.எம். இஸ்திகார் ஆலிம் (பாரி,) முஸாக்கரா நிகழ்த்துவார் என கம்பளை ஸாவியா செயலாளர் மூத்த ரயீஸுல் முகத்தமுஷ் ஷாதுலி எம்.எஸ்.எம். ஸாபிர் தெரிவித்தார்.

முகத்தமுஷ் ஷாதுலி எம். யூ.எம் இப்றாஹிம் ஹாபிஸ் தலைமையில் தொடர்ந்து, 7 நாட்கள் மனாகிப் மஜ்லிஸ் நடைபெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

## கொழும்பில் பல பகுதிகளில் உணவுப்பொருட்களின் விலை வீழ்ச்சி

கொழும்பில் பல உணவுப் பொருட்களின் மொத்த மற்றும் சில்லறை விலைகள் கடந்த மாதங்களுடன் ஒப்பிடுகையில் வீழ்ச்சியடைந்துள்ளதாக, வர்த்தகர்கள் மற்றும் நுகர்வோர் தெரிவிக்கின்றனர்.

எனினும், இந்த நன்மை வெளிமாகாண மக்களுக்கு இதுவரை கிடைக்கவில்லை என அப்பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர்.

கடந்த சில மாதங்களாக, அத்தியாவசியப் பொருட்களுக்கு கடும் தட்டுப்பாடு நிலவியதால், அதனைத் தடுக்கும் வகையில், திறந்த கணக்கு முறை மூலம் இறக்குமதியாளர்களுக்கு பொருட்களை இறக்குமதி செய்ய அரசாங்கம் அனுமதி அளித்தது.

அதன்படி, புறக்கோட்டை மற்றும் நாரஹேன்பிட்டியில் உள்ள மொத்த விற்பனை நிலையங்களில்அத்தியாவசியப் பொருட்களின் விலைகள் சற்று குறைந்துள்ளதைக் அவதானிக்க முடிந்தது.

மொத்த விலை குறைவினால், கொழும்பு சில்லறை விற்பனை நிலையங்களிலும் விலை குறைந்துள்ளது. எவ்வாறாயினும், கொழும்பிற்கு வெளியே உள்ள சில கடைகளில், வெங்காயம், பருப்பு, கிழங்கு மற்றும் காய் கறிகளின் விலை புறக்கோட்டை மொத்த விலையை விட அதிகமாகக் காணப்படுவதாக பொதுமக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

## நாச்சியாதீவு குளத்தில் நன்னீர் மீன் குஞ்சுகள் விடல்



திறப்பனை தினகரன் நிருபர்

நன்னீர் மீன் உற்பத்தியை அதிகரிக்கும் எண்ணத்தில் நாச்சியாதீவு குளத்தில் மேலும் ஒரு தொகை நன்னீர் மீன் குஞ்சுகள் விடப்பட்டுள்ளன.

இதில் புதிதாக 29,166 'திலாப்பியா' இன நன்னீர் மீன் குஞ்சுகள் விடப்பட்டுள்ளதோடு, ஏற்கனவே, கெட்லோ,மெடிகல், ரூஹு இன நன்னீர் மீன் குஞ்சுகளும் இங்கு விடப்பட்டுள்ளன.

இவைகள் சரியாக வளர்ந்ததும், சுமார் 10, 15 கிலோ எடையுடன் கூடிய பெரிய மீன்களை பெற்றுக் கொள்ளும் வாய்ப்பு மீனவர்களுக்கு கிடைக்கின்றன.

குளத்தின் மீன் பெருக்கத்தை அதிகரித்து, மீன் உற்பத்தியை கூட்டி, நுகர்வோரின் தேவையை பூர்த்தி செய்யும் நோக்கில், இக்குளத்திலேயே சிறிய மீன் குஞ்சுகளை வளர்க்கும் 'தொட்டிகள்' கட்டப்பட்டு அவற்றில் சிறிய மீன் குஞ்சுகளை இட்டு,அவை ஓரளவு வளர்ந்ததும் பின்னர் அவைகள் குளத்தில் விடப்படுகின்றன.

இங்கு சிறிய ரக மீன் குஞ்சுகளை வளர்க்கும் எண்ணத்தில், சிறிய துவாரம் உள்ள மீன் பிடி வலைகள், மற்றும் தன்கூசு வலைகளை பாவித்து மீன் பிடிப்பதை நீர் வாழ் உயிரின அதிகாரிகள் தடை செய்துள்ளனர்.

இவ்வாறான பெரிய ரக மீன்கள் கிலோ 600 ரூபா தொடக்கம் 700 ரூபா வரையில் விற்பனை செய்யப்பட்டாலும்,நுகர்வோரின் தேவையை பூர்த்தி செய்யும் அளவுக்கு மீன்கள் கிடைப்பதில்லை என நுகர்வோர் தெரிவிக்கின்றனர்.



அநுராதபுரம் மாவட்ட செயலகத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட மாவட்ட ஊடகவியலாளர்களுக்கான இடர் முகாமைத்துவம் சம்பந்தமான ஊடகவியலாளர் கருத்தரங்கு நேற்று அநுராதபுரம் ரந்திய ஹோட்டலில் நடைபெற்றது. இதன் போது கலந்து கொண்ட ஊடகவியலாளர்கள் எடுத்துக் கொண்ட படம். படம்: கல்நேவ தினகரன் விசேட நிருபர்

# இலங்கை இளையோர் அணி சோபித்த பயிற்சிப் போட்டி சமநிலையில் முடிவு



இங்கிலாந்து சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள இலங்கை 19 வயதுக்கு உட்பட்ட அணி மற்றும் இங்கிலாந்தின் யங் லயன்ஸ் அழைப்பு பதினொருவர் அணிகளுக்கு இடையிலான மூன்று நாள் பயிற்சிப் போட்டி சமநிலையில் முடிவுற்றது.

எனினும் இந்த பயிற்சிப் போட்டியில் இலங்கை இளம் கிரிக்கெட் அணி துடுப்பாட்டம் மற்றும் பந்துவீச்சில் அபார ஆட்டத்தினை வெளிப்படுத்தியிருந்தது.

லொப்பிரோப்பில் கடந்த செவ்வாய்க்கிழமை ஆரம்பமான இந்தப் பயிற்சிப் போட்டியின் இரண்டாம் நாள் ஆட்டம் மழை காரணமாக கைவிடப்பட்ட நிலையில் மூன்றாவது நாளில் இலங்கை இளையோர் அணி தனது முதல் இன்னிங்ஸை தொடர்ந்தது.

182 ஓட்டங்களுக்கு நான்கு விக்கெட்டுகளை இழந்த நிலையில் இன்னிங்ஸை தொடர்ந்த இலங்கை அணிக்கு இடது கை துடுப்பாட்ட வீரர் அசித்த வன்னிநாயக்க சதத்தை பூர்த்தி செய்தார்.

81 ஓட்டங்களுடன் மூன்றாவது நாளை ஆரம்பித்த வன்னிநாயக்க 200 பந்துகளில் 13 பௌண்டரிகளுடன் 100 ஓட்டங்களை பெற்ற நிலையில் ஆட்டத்தை இடைநிறுத்திக் கொண்டார். அணித் தலைவர் ரவீன் டி சில்வா 33 ஓட்டங்களை பெற்றார். இலங்கை இளையோர் அணி 248 ஓட்டங்களுக்கு 7 விக்கெட்டுகளை இழந்த நிலையில் முதல் இன்னிங்ஸை இடைநிறுத்திக்கொண்டது.

தொடர்ந்து இலங்கை இளையோர் அணி பந்துவீச்சாளர்கள் சிறப்பாக பந்துவீசி யங் லயன்ஸ் அணியை 104 ஓட்டங்களுக்கு மட்டுப்படுத்தினர். இடதுகை சுழற்பந்து வீச்சாளர் வனுஜ சஹன் குமார 13 ஓட்டங்களுக்கு 4 விக்கெட்டுகளை வீழ்த்தினார்.

முதல் இன்னிங்ஸில் 144 ஓட்டங்களால் முன்னிலை பெற்ற நிலையில் தனது இரண்டாவது இன்னிங்ஸை ஆரம்பித்த இலங்கை 19 வயதுக்கு உட்பட்ட அணி கடைசி நாள் ஆட்டநேர முடிவில் 2 விக்கெட் இழப்புக்கு 132 ஓட்டங்களை குவித்தது. ஆரம்ப துடுப்பாட்ட வீரர் அபிஷேக் லியனாரச்சி அதிகபட்சமாக 57 பந்துகளில் 51 ஓட்டங்களை பெற்றார்.

# மின்னஞ்சலுக்கு பதிலளிக்காததால் முக்கிய பேஸ்போல் தொடரை தவறவிட்ட இலங்கை

இலங்கை பேஸ்போல் சங்கத்துக்கு கிடைத்த அழைப்புக்கு பதிலளிக்க தவறியதாலேயே மலேசியாவின் கோலாலம்பூரில் நடைபெற்ற சர்வதேச பேஸ்போல் போட்டியில் பங்கேற்கும் வாய்ப்பை இலங்கை இழந்திருப்பதாக குற்றச்சாட்டு எழுந்துள்ளது.



இலங்கை உட்பட ஒன்பது நாடுகள் இந்தத் தொடருக்காக பரிந்துரைக்கப்பட்டிருந்தபோதும் இலங்கைக்கு மின்னஞ்சல் மூலம் கிடைத்த அழைப்பை அது கண்டுகொள்ளாமல் செயற்பட்டதால் இந்த நிலைமை ஏற்பட்டிருப்பதாக மேலும் குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.

கோலாலம்பூர் நகரில் கடந்த புதன்கிழமை (17) ஆரம்பமான இந்த பேஸ்போல் தொடர் நேற்று (19) வெள்ளிக்கிழமை முடிவுற்றது. இந்த பேஸ்போல் போட்டி பேஸ்போல் விளையாட்டின் புதிய வடிவத்துக்கு அமைய ஏற்பாடு செய்யப்பட்ட ஐந்து பேர் கொண்ட தொடராகும். இதன் காரணமாக இந்தப் போட்டித் தொடரில் அழைப்பு கிடைக்கப் பெற்ற நாடுகள் பங்கேற்பது முக்கியமானதாக பார்க்கப்படுகிறது. இது தொடர்பில் இலங்கை தேசிய பேஸ்போல் அணியின் முன்னாள் உப தலைவரான தீக்ஷன கம்மன்பில கருத்துக் கூறும்போது, புது வடிவத்திலான பேஸ்போல் விளையாட்டில் பங்கேற்பதற்கு கிடைத்த வாய்ப்பு ஒன்று இலங்கையிடம் இருந்து கைவிட்டுப் போயுள்ளது என்றார். இந்தத் தொடரில் பேஸ்போல் விளையாட்டில் முன்னணியில் இருக்கும் நாடுகளான ஜப்பான், தென் கொரியா போன்ற நாடுகளுடனும் போட்டியிடும் வாய்ப்பை இலங்கை தவறவிட்டிருப்பதாகவும் அவர் குறிப்பிட்டார்.

மலேசியாவில் முடிவுற்ற இந்தத் தொடரில் முதல் மூன்று இடங்களைப் பிடிக்கும் அணிகளுக்கு அடுத்த ஆண்டு மெக்சிகோவில் நடைபெறும் உலக பேஸ்போல்–5 போட்டியில் பங்கேற்க முடியும்.

உலக பேஸ்போல் தரப்படுத்தலில் இலங்கை தற்போது 42 ஆவது இடத்தில் உள்ளது.

# பாக். அணிக்கு தொடர் வெற்றி



நெதர்லாந்துடனான இரண்டாவது ஒருநாள் போட்டியிலும் 7 விக்கெட்டுகளால் வெற்றியீட்டிய பாகிஸ்தான் அணி இரு அணிகளுக்கும் இடையிலான ஒருநாள் தொடரை ஒரு போட்டி மிச்சம் வைத்து 2–0 என கைப்பற்றியுள்ளது.

நெதர்லாந்து சுற்றுப்பயணம் மேற்கொண்ட பாக். அணி கடந்த வியாழக்கிழமை ரொட்டர்டாமில் இரண்டாவது ஒருநாள் போட்டியில் ஆடியது. நாணய சுழற்சியில் வென்று முதலில் துடுப்பெடுத்தாடிய நெதர்லாந்து அணி 44.1 ஓவர்களில் 186 ஓட்டங்களுக்கு சுருண்டது. பேஸ் டி லீட் மற்றும் டொம் கூப்பர் 4ஆவது விக்கெட்டுக்காக பெற்ற 109 ஓட்ட இணைப்பாட்டமே நெதர்லாந்தின் ஓட்டங்கள் அதிகரிக்க உதவியது. லீட் 89 ஓட்டங்களையும் கூப்பர் 66 ஓட்டங்களையும் பெற்றனர்.

தொடர்ந்து பதிலெடுத்தாடிய பாக். அணி 33.4 ஓவர்களில் 3 விக்கெட்டுகளை இழந்து 191 ஓட்டங்களை பெற்று வெற்றியீட்டியது. அதிகபட்சமாக முஹமது ரிஸ்வான் ஆட்டமிழக்காது 69 ஓட்டங்களை பெற்றார்.

# தேசிய சாதனையாளர் புஸாந்தன் கௌரவிப்பு



**சாவகச்சேரி விஷேட நிருபர்**

தேசிய மட்ட பளுதூக்கல் போட்டியில் புதிய சாதனை படைத்து தங்கப் பதக்கம் வென்ற சாவகச்சேரியைச் சேர்ந்த ச. புஸாந்தனை பாராளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதன் கௌரவித்துள்ளார்.

கடந்த புதன்கிழமை (17) தென்மராட்சிப் பிரதேசத்திற்கு விஜயம் மேற்கொண்டிருந்த போதே அவர் சாதனையாளரின் வீட்டிற்கு சென்று கௌரவித்திருந்தார். அத்துடன் பளு தூக்கல் சாதனையாளர் புஸாந்தன் தனது அடுத்த கட்ட நகர்வுகளை முன்னெடுக்க தான் உறுதுணையாக இருப்பேன் எனவும் அதன் ஓர் அங்கமாக விளையாட்டுத்துறை அமைச்சருடன் பேசி தெற்காசிய, ஆசிய மற்றும் சர்வதேச பளு தூக்கல் போட்டிகளில் பங்குபற்றுவதற்கான உதவிகளை செய்வதாகவும் அவர் உறுதியளித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

# காரைதீவு ஹொக்கி லயன்ஸ் கிழக்கு மாகாண சம்பியனானது



**காரைதீவு குறூப் நிருபர்**

கிழக்கு மாகாண ஹொக்கி அணிகளுக்கிடையிலான போட்டியில் அம்பாறை மாவட்ட அணியான காரைதீவு ஹொக்கி லயன்ஸ் அணி 8–7 என்ற கோல்களால் வெற்றிபெற்று மாகாண சாம்பியனாக மீண்டும் தெரிவாகியுள்ளது.

இதன் மூலம் கிழக்கு மாகாணத்தில் தொடர்ச்சியாக நான்கு தடவைகள் மாகாண சம்பியனாக காரைதீவு ஹொக்கி லயன்ஸ் அணி தெரிவாகியுள்ளது.

இம் மாகாண மட்ட போட்டி கடந்த வாரம் கந்தளாய் லீலாரத்ன மைதானத்தில் நடைபெற்றது. எதிர்வரும் மாதத்தில் தேசிய மட்ட ஹொக்கி போட்டி கொழும்பில் நடைபெறவுள்ளது.

# இந்திய அணி இலகு வெற்றி



சிம்பாப்வே உடனான முதலாவது ஒருநாள் போட்டியில் இந்திய அணி 10 விக்கெட்டுகளால் இலகு வெற்றியீட்டியது.

ஹராரேயில் கடந்த வியாழக்கிழமை (18) நடைபெற்ற இந்தப் போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாட பணிக்கப்பட்ட சிம்பாப்வே அணி 40.3 ஓவர்களில் 189 ஓட்டங்களுக்கு சுருண்டது. முதல் நான்கு வீரர்களும் ஒற்றை இலக்கத்துடன் ஆட்டமிழக்க கடைசி வரிசை வீரர்கள்தான் இரட்டை இலக்க ஓட்டங்களை பெற்றனர். பந்துவீச்சில் தீபக் சஹர், பிரசித் கிரிஷ்னா மற்றும் அக்சார் படேல் ஆகியோர் தலா 3 விக்கெட்டுகளை வீழ்த்தினர்.

பதிலெடுத்தாட வந்த இந்திய அணி விக்கெட் இழப்பின்றியே 30.5 ஓவர்களில் 192 ஓட்டங்களை பெற்று வெற்றியீட்டியது. ஆரம்ப வீரர்களான ஷிகர் தவான் 113 பந்துகளில் ஆட்டமிழக்காது 81 ஓட்டங்களையும் ஷுப்மன் கில் 72 பந்துகளில் ஆட்டமிழக்காது 82 ஓட்டங்களையும் பெற்றனர்.

சிம்பாப்வே அணி 8 பந்துவீச்சாளர்களை பயன்படுத்தியபோதும் எவராலும் விக்கெட் வீழ்த்த முடியவில்லை.

இதன்படி மூன்று போட்டிகளைக் கொண்ட ஒருநாள் தொடரில் இந்திய அணி 1–0 என முன்னிலை பெற்றுள்ளது.

# உலகக் கிண்ண கால்பந்து: 2.45 மில். டிக்கெட் விற்பனை

கட்டாரில் நடைபெறவுள்ள உலகக் கிண்ண கால்பந்து போட்டிக்கான டிக்கெட் விற்பனை ஆரம்பித்து 100 நாட்களுக்கும் குறைவான காலத்தில் மொத்தம் 2.45 மில்லியன் டிக்கெட்டுகள் விற்பனையாகியுள்ளன.



முதல்முறையாக மத்திய கிழக்கில் நடைபெறவுள்ள உலகக் கிண்ணப் போட்டி வரும் நவம்பர் 20 ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளது. இதில் குழுநிலைப் போட்டிகளில் பிரேசில் மற்றும் கெமரூன், பிரேசில் மற்றும் செர்பியா, போர்த்துக்கல் மற்றும் உருகுவே, ஜெர்மனி மற்றும் கொஸ்டாரிகா, அதேபோன்று அவுஸ்திரேலியா மற்றும் டென்மார்க் இடையிலான போட்டிகளுக்கே அதிக டிக்கெட்டுகள் விற்பனையாகியுள்ளன.


"கட்டார், சவூதி அரேபியா, அமெரிக்கா, மெக்சிகோ, ஐக்கிய அரபு இராச்சியம், இங்கிலாந்து, ஆர்ஜன்டீனா, பிரேசில், வேல்ஸ், அவுஸ்திரேலியா ஆகிய நாடுகளின் ரசிகர்களே டிஜிட்டர் வரிசையில் முன்னணியில் இருந்தனர்" என்று சர்வதேச கால்பந்து சம்மேளனம் குறிப்பிட்டுள்ளது.

செப்டெம்பர் மாத இறுதியில் அடுத்த கட்ட டிக்கெட்டுகள் வழங்கப்படும் திகதி அறிவிக்கப்படும் என குறிப்பிடப்பட்டுள்ளது. கடைசி நேரத்தில் டிக்கெட்டுகளை வாங்குபவர்களுக்கு டோஹாவில் அதற்கான வாய்ப்பு வழங்கப்படும் என்று மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது.

நவம்பர் 20 ஆம் திகதி கட்டார் மற்றும் ஈக்வடோர் அணிகளுக்கு இடையிலான போட்டியுடனேயே உலகக் கிண்ணம் ஆரம்பிக்கவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# ரசிகரின் கைபேசியை தட்டிவிட்ட ரொனால்டோவுக்கு எச்சரிக்கை

கால்பந்து நட்சத்திரம் கிறிஸ்டியானோ ரொனால்டோ கடந்த பருவத்தின்போது எவர்டன் அணி ரசிகர் ஒருவரின் கையில் இருந்த கைபேசியைத் தட்டிவிட்டு நொறுக்குவதைப்போல் தோன்றும் வீடியோ தொடர்பில் பிரிட்டிஷ் பொலிஸார் அவருக்கு எச்சரிக்கை விடுத்துள்ளனர்.



அந்தச் சம்பவம் கடந்த ஏப்ரல் 9ஆம் திகதி மான்செஸ்டர் யுனைடெட் அணியும் எவர்டன் அணியும் மோதியபோது நடந்தது. அதில் 0–1 என்ற கோல் கணக்கில் மான்செஸ்டர் யுனைடெட் அணி தோல்வி அடைந்தது.

திடீர்த் தாக்குதல், குற்றவியல் சேதம் ஆகிய குற்றச்சாட்டுகள் தொடர்பில் 37 வயது ரொனால்டோ அதிகாரிகளால் விசாரிக்கப்பட்டார். அவருக்கு நிபந்தனையுடன் கூடிய எச்சரிக்கை விடுக்கப்பட்டது.

அந்தச் சம்பவத்திற்குப் பின்னர், ரொனால்டோ சமூக ஊடகத்தில் மன்னிப்புக் கேட்டுக்கொண்டார். மேலும் வேறோர் ஆட்டத்தைப் பார்க்க வருமாறு அவர் பாதிக்கப்பட்ட ரசிகருக்கு அழைப்புவிடுத்தார்.

இப்பத்திரிகை அஸோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிடட் கம்பனியரால் கொழும்பு இல. 35, டி ஆர். விஜயவர்தன மாவத்தையிலுள்ள லேக் ஹவுஸில் 2022 ஓகஸ்ட் மாதம் 20ம் திகதி சனிக்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.

# Daraz ஊக்குவிப்பு திட்ட பங்காண்மைக்கான விருதை சுவீகரித்துள்ள யூனியன் வங்கி

Daraz கொடுப்பனவு பங்காளர் விருதுகள் வழங்கும் நிகழ்வில் தொடர்ச்சியான இரண்டாவது வருடமாகவும் யூனியன் வங்கி விருதை சுவீகரித்திருந்தது. ஜுலை 28 ஆம் திகதி கொழும்பு Uga Residencies இல் இடம்பெற்ற விருதுகள் வழங்கும் நிகழ்வில் "பெருமளவு ஊக்குவிப்புத் திட்ட பங்காண்மைக்கான விருதை யூனியன் வங்கி சுவீகரித்திருந்தது.

eவணிக கட்டமைப்பில், கடனட்டை பயன்பாட்டை மேம்படுத்தும் வகையில் யூனியன் வங்கி தொடர்ச்சியான முயற்சிகளை முன்னெடுத்து வருகின்றமையை இந்த விருது மீண்டும் உறுதி செய்திருந்தது. 2021 – 2022 வருட காலப்பகுதியில் Daraz கட்டமைப்பில் பெருமளவு பிரச்சாரத் திட்டங்களை முன்னெடுப்பதில் யூனியன் வங்கி பங்களிப்பு வழங்கியிருந்தது. Daraz கொடுப்பனவு பங்காளர் வினைத்திறன் விருதுகள் என்பது கொடுப்பனவு பங்காளர்கள் மற்றும் வெகுமதித் திட்டங்கள் போன்றவற்றுக்கான வருடாந்த நிகழ்வாக அமைந்திருப்பதுடன், கட்டமைப்பின் வியாபார வளர்ச்சிக்கு வங்கிப் பங்காளர்கள் வழங்கும் பங்களிப்பை கௌரவிக்கும் வகையில் அமைந்துள்ளது.

தெற்காசியாவின் முன்னணி ஒன்லைன் சொப்பிங் சந்தைப்பகுதியாக Daraz திகழ்வதுடன், சர்வதேச eவணிக ஜாம்பவானாகத் திகழும் Alibaba குழுமத்தின் வலுவூட்டலில் இயங்குகின்றது. இலங்கையின் மாபெரும் eவணிக கட்டமைப்பாகத் திகழச் செய்யும் வகையில் விற்பனையாளர்களையும் வாடிக்கையாளர்களையும் தம்வசம் கொண்டுள்ளது.

கோல்ட், பிளாட்டினம் மற்றும் சிக்னேச்சர் போன்ற தெரிவுகளில் யூனியன் வங்கி கடன் அட்டைகள் கிடைக்கின்றன. நாடு முழுவதிலும் காணப்படும் பரந்த கிளை வலையமைப்பினூடாக இந்த அட்டைகள் வழங்கப்படுகின்றன. கடனட்டைக்கு விண்ணப்பிக்க ஆர்வமுள்ளவர்கள், ஒன்லைன் ஊடாக கோரிக்கையை சமர்ப்பிக்கலாம். அல்லது வங்கியின் அழைப்பு நிலைய ஹொட்லைன் இலக்கமான 011 5800 5800 ஊடாக தொடர்பு கொண்டு சேவையைப் பெற்றுக் கொள்ளலாம். யூனியன் வங்கி கடனட்டைகள் மற்றும் வங்கியின் இதர தீர்வுகள் தொடர்பான மேலதிக தகவல்களை, வங்கியின் கூட்டாண்மை இணையத்தளமான www.unionb.com இலிருந்து பெற்றுக் கொள்ளலாம்.



யூனியன் வங்கி அணி (இடமிருந்து) வினு டி சில்வா – முகாமையாளர் – வணிக அபிவிருத்தி மற்றும் சந்தைப்படுத்தல் – அட்டைகள், சாமர கோமிஸ் – பிரதம முகாமையாளர் – சொத்துகள் மற்றும் கார்ட்கள் விற்பனை, மனுரி ரொட்ரிகோ – உதவி முகாமையாளர் – வியாபார விருத்தி – கார்ட்கள் ஆகியோர் Daraz இன் முகாமைத்துவ பணிப்பாளரும் பிரதம நிறைவேற்று அதிகாரியுமான ராகில் பெர்னான்டோ, கொடுப்பனவுகள் மற்றும் பங்காண்மைகள் தலைமை அதிகாரி துலிகா ஜயமான்ன ஆகியோரிடமிருந்து விருதைப் பெற்றுக் கொள்வதை படத்தில் காணலாம்.




# ETI,AAFA ஆகியன இலங்கையின் பொருளாதார வீழ்ச்சிக்கு பதிலளிப்பதை வரவேற்கும் JAAF

மின்வெட்டு, எரிபொருள் தட்டுப்பாடு போன்ற தற்போதைய பொருளாதார நெருக்கடியை எதிர்நோக்கியுள்ள இலங்கையர்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ள சூழ்நிலையில் தொழிலாளர்களின் நலனை உறுதிப்படுத்தும் வகையில் இலங்கையில் ஆடைத் துறை மேற்கொள்ளும் முயற்சிகளுக்கு ஆதரவாக Ethical Trading Initiative (ETI) மற்றும் American Apparel அமெரிக்க ஆடை மற்றும் பாதணி சங்கம்AAFA இன் பதிலுக்கு கூட்டு ஆடைகள் சங்கங்களின் மன்றம் (JAAF) தனது பாராட்டுகளை தெரிவித்துள்ளது.

ETI ஆனது இலங்கையிலுள்ள பொருளாதார நிபுணர்கள், தொழில் சங்கங்கள், பணியாளர் பிரதிநிதிகள் மற்றும் அங்கத்துவ நிறுவனங்களுடன் இணைந்து தொழிலாளர்கள், வழங்குநர்கள் மற்றும் தொழில்துறையினர் மீதான பொருளாதார அழுத்தங்களைப் புரிந்துகொண்டு அவர்களின் நலனுக்காக ஒன்றிணைந்து செயல்படும். முதற்கட்ட நடவடிக்கையாக உலர் உணவுகள், மருந்துகள், மளிகைப் பொருட்கள் மற்றும் சமைத்த உணவுகள் விநியோகிக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. கூடுதலாக, சரியான நேரத்தில் பணம் செலுத்துவதை உறுதி செய்வதற்கும் சட்டத்திற்கு இணங்குவதற்கும் சப்ளையர்களுடன் இணைந்து பணியாற்ற AAFA உறுதிபூண்டுள்ளது.

ஊழியர்களின் வாழ்வாதாரம் மற்றும் நலனை உறுதி செய்வதற்கு தொழில்துறை முன்னுரிமை அளிக்கிறது. இது போன்ற நெருக்கடியான காலங்களில், தொழில்துறையால் ஏற்கனவே எடுக்கப்பட்ட பணியாளர் நலன்புரி நடவடிக்கைகள் மேலும் விரிவுபடுத்தப்படும், மேலும் இந்த கூட்டு நடவடிக்கையை JAAF பாராட்டியுள்ளது. சில தொழிற்சாலைகள் உலர் உணவுப் பொருட்களை விநியோகிக்க நலத்திட்டங்களைச் செயல்படுத்தியுள்ளன, ஏனைய தொழிற்சாலைகள் தங்கள் தொழிலாளர்களுக்கு வீட்டிற்கு கொண்டு செல்ல மேலதிக உணவை வழங்குகின்றன, இதனால் அவர்கள் தங்கள் குடும்ப உறுப்பினர்களுக்கும் உணவளிக்க உதவுகிறார்கள். சிறு மற்றும் நடுத்தர நிறுவன ஊழியர்களின் குழந்தைகளுக்கு இலவச பாடசாலை புத்தகங்கள், மருத்துவ வசதிகள் மற்றும் கர்ப்பிணிப் பெண்களுக்கு சிறப்பு உணவுப் பொதிகளும் வழங்கப்படுகின்றன.

"ஆடைத்தொழிற்சாலை உரிமையாளர்கள் தங்கள் ஊழியர்களின் தேவைகளுக்கு ஏற்ற வகையில் நலன்புரி நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு நாங்கள் ஊக்குவிக்கிறோம். ஜூன் 2022க்குள், சுமார் 80% ஆடை உற்பத்தியாளர்கள் ஆண்டு ஊதிய உயர்வுக்கு மேலதிகமாக வாழ்க்கைச் செலவு கொடுப்பனவை அதிகரித்துள்ளனர். இது 25% அதிகரிப்பு மற்றும் இந்த அதிகரிப்புகள் 2021இல் இருந்து நடைமுறைக்கு வருகிறது." என JAAF பொதுச்செயலாளர் யொஹான் லோரன்ஸ் கூறினார்.

# புதிய வணிக பாதையில் இணைந்துள்ள MAS Holdings மற்றும் BAM Knitting

இலங்கையின் முன்னணி ஜவுளி உற்பத்தியாளரான BAM Knitting (Pvt) Ltd இன் சொத்துக்களைப் கையகப்படுத்தியதன் மூலம் MAS ஹோல்டிங்ஸ் புதிய வணிகப் பாதைக்கு தமது தடத்தை பதித்துள்ளது. அதன்படி, புதிய வணிகத்தின் பெரும்பான்மையான பங்குகளை MAS ஹோல்டிங்ஸ் கையப்படுத்தியுள்ளதனால் BAM Knitting அதன் வணிகப் பங்காளியாக செயல்படுகிறது. இந்த முதலீட்டின் மூலம், பருத்தி துணிகளுக்கு பின்னல், சாயமிடுதல் மற்றும் அச்சிடுதல் ஆகியவற்றில் MASஇன் திறன்கள் மேலும் மேம்படுத்தப்படுவதுடன், ஆடை உற்பத்திக்குத் தேவையான மூலப்பொருட்களை இறக்குமதி செய்வதற்குப் பதிலாக, அவற்றை உள்நாட்டிலேயே உற்பத்தி செய்வதற்குத் தகுந்த ஆதாரங்கள் பலப்படுத்தப்படுகின்றன.

இந்த புதிய கூட்டு முயற்சியானது, அதன் முக்கிய பொறுப்புக்களுக்கு MAS நிபுணர்களை நியமித்த பின்னர், MAS இன் தொழில்நுட்ப வளங்கள் மற்றும் நிபுணத்துவம் ஆகியவற்றிலிருந்து பயனடைவதோடு, அத்துடன் MAS இன் ஆடை மற்றும் ஜவுளி உற்பத்தியில் விரிவான சர்வதேச அனுபவத்தையும் பெறும்.

இந்த புதிய கூட்டாண்மை மூலம், உற்பத்தி திறன் மேம்பாடு மற்றும் புதிய தயாரிப்பு மேம்பாடுகள் என்பன எதிர்பார்க்கப்படுகிறது.

MAS ஹோல்டிங்ஸ் நிறுவனத்தின் பிரதம நிறைவேற்று அதிகாரி சுரேன் பெர்னாண்டோ இது குறித்து கருத்து தெரிவிக்கையில், "இந்த கூட்டாண்மை MAS மற்றும் இலங்கையின் பொருளாதாரம் ஆகிய இரண்டிற்கும் மிகவும் பொருத்தமான ஒரு நடவடிக்கையாக நான் பார்க்கிறேன். இது MASஐ நம் நாட்டில் அதன் செயல்பாடுகளின் நோக்கத்தை அதிகரிக்க உதவுகிறது.

மேலும், இந்த முதலீட்டின் மூலம், உலகளாவிய விநியோகச் சங்கிலியின் ஏற்ற இறக்கத்தை வலுவாக நிவர்த்தி செய்வதன் மூலம் விநியோகச் செலவைக் குறைக்கும் அதே வேளையில் கணினியில் சேர்க்கப்படும் ஒட்டுமொத்த மதிப்பை MAS அதிகரிக்கும். பொருளாதார சவால்களுக்கு மத்தியிலும் ஆடை உற்பத்தியில் இலங்கையை நிலையான மற்றும் போட்டித்தன்மை வாய்ந்த இடத்துக்கு கொண்டு செல்வதில் எங்களின் தொடர்ச்சியான நம்பிக்கையை இது எடுத்துக்காட்டுகிறது." என தெரிவித்தார்.

"குறிப்பாக இலங்கை பல பொருளாதார சவால்களை எதிர்நோக்கி வரும் இவ்வேளையில், இந்த புதிய முதலீடு, இந்நாட்டின் ஆடைத் தொழிலில் MASஇன் மீதான தொடர்ச்சியான நம்பிக்கையை உறுதிப்படுத்துவதாகும். இது போன்ற முயற்சிகள் நாட்டின் நீண்ட கால பொருளாதார பின்னடைவு மற்றும் ஸ்திரத்தன்மையை உறுதி செய்வதற்காக இறக்குமதியைக் குறைப்பதற்கும் ஏற்றுமதியை வலுப்படுத்துவதற்கும் முக்கியமானவை. இலங்கையின் மிகப்பெரிய ஏற்றுமதியாளராக இந்த முயற்சிகளை முன்னெடுப்பதில் MAS பணிவுடன் பெருமை கொள்கிறது." என பெர்னாண்டோ மேலும் தெரிவித்தார்.

"MASஇன் இந்த கையகப்படுத்தல் BAM மற்றும் MASஇன் பயனுள்ள மற்றும் திறமையான உற்பத்தி செயல்முறைகள், தயாரிப்பு மேம்படுத்தல் நிபுணத்துவம் மற்றும் வலுவான நபர்களை மையமாகக் கொண்ட அணுகுமுறை என்பன தற்போதுள்ள செயல்பாட்டை உண்மையிலேயே உலகத் தரம் வாய்ந்த வணிகமாக மாற்றும்." என BAM Knitting இன் தலைவரான பிரதம நிறைவேற்று அதிகாரி அமண்டா பெர்னாண்டோ கூறினார்.

# நிபுணத்துவம், பணம் செலுத்தும் தொழில்நுட்பம் மூலம் நிதி சார்ந்த தொழில்நுட்பங்களை மேம்படுத்த திட்டமிடும் Visa

டிஜிட்டல் கொடுப்பனவுகளில் உலகளாவிய ரீதியில் முன்னணியில் உள்ள Visa நிறுவனம், நாட்டிலுள்ள நிதி சார்ந்த தொழில்நுட்ப புத்தாக்கங்களை (fintech innovation) முன்னெடுப்பதற்காக, Fintech Initiative: Sri Lanka (VFI) (நிதி சார்ந்த தொழில்நுட்ப திட்டத்தை) வெளியிட்டுள்ளது. இக்கடினமான தருணத்திற்கு முகம் கொடுக்க நாடு தயாராகி வரும் நிலையில், Hatch நிறுவனத்துடன் இணைந்து, டிஜிட்டல் கட்டண செலுத்தல் தொடர்பான சிக்கல்களைத் தீர்ப்பதற்கும், டிஜிட்டல் சேவைகளை ஏற்றுக்கொள்வதற்கான கட்டணத் தீர்வுகளை உருவாக்குவதற்கும் உள்நாட்டில் fintech இனை மேம்படுத்துவதை Visa Fintech Initiative: Sri Lanka திட்டம் நோக்கமாக கொண்டுள்ளது.

இலங்கை மற்றும் மாலைதீவுக்கான Visa நிறுவனத்தின் நாட்டுக்கான முகாமையாளர் (Country Manager) அவந்தி கொலம்பகே இது தொடர்பில் தெரிவிக்கையில், "நிதி தொழில்நுட்ப நிறுவனங்களுக்கு தங்களது தயாரிப்பு திட்டங்களை மேம்படுத்த, எமது சிறந்த தரத்திலான திறன்களை வழங்குவதற்காக, இலங்கையில் Visa Fintech Initiative திட்டத்தை அறிவிப்பதில் நாம் மகிழ்ச்சியடைகிறோம். அதிகமான மக்கள் டிஜிட்டல் கட்டண செலுத்தல்களை நாடுவதால், அவர்களின் அனுபவங்களை எளிமையாகவும், தடையற்றதாகவும், வசதியாகவும் மாற்றுவது அவசியமாகும்." என்றார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், "இந்த திட்டம் மூலம் இலங்கையில் உள்ள நிதி தொழில்நுட்ப நிறுவனங்கள் (fintechs) Visa வின் நிபுணத்துவத்தைப் பயன்படுத்தி சிறந்த தயாரிப்புகள் மற்றும் சிறந்த பயனர் அனுபவங்களை வழங்க முடியும். Visa வின் உலகளாவிய ரீதியிலான வியாபித்தல் மற்றும் அதன் உயர் நிபுணத்துவம் ஆகியவற்றை பயன்படுத்துவதற்காக, அனைவரும் எம்மை கூட்டாளராக்கிக் கொள்ள முடியும். இலங்கையின் கட்டணச் செலுத்தல் தீர்வுகளுக்காக fintech களுடன் கூட்டுசேர்வதற்கும் புத்தாக்கமான தீர்வுகளை உருவாக்குவதற்கும் நாம் எதிர்பார்க்கிறோம்." என்றார்.




உலகெங்கிலும் உள்ள சிறந்த நடைமுறைகளின் அடிப்படையில் தொழில்நுட்ப திறன்கள் மற்றும் வடிவமைப்பு கருத்தாக்கத்தை மேம்படுத்துவதற்காக, தொழில்நுட்ப உதவி மற்றும் Visa விடயம் தொடர்பான நிபுணர்களின் பட்டறைகளில் இணையவும் இலங்கையின் fintech களுக்கு வாய்ப்புள்ளது. வணிக வாய்ப்புகளை ஒவ்வொரு சந்தர்ப்பத்தின் அடிப்படையிலும் ஆராய்தல், Visa உடன் இணைந்து கட்டமைக்கப்பட்ட தயாரிப்புகள் மற்றும் தீர்வுகளைத் ஆரம்பிக்கும் போதான GTM (go to market) ஆதரவை வழங்குவதும், Visa கூட்டாளர்களுக்கு வங்கியியல், கொடுக்கல் வாங்கல் செயலாக்கம், மென்பொருள் முகாமைத்துவம், பரிவர்த்தனை செயலாக்கம் போன்றவற்றிற்கு முன்னுரிமையான அணுகலை வழங்குவதும் இதன் ஏனைய நன்மைகளாகும்.

பிரத்தியேகமான வைத்திய ஆலோசனை சேவைகளை வழங்குவதற்காக

# eChannelling இடமிருந்து One-touch Tele-Channelling அறிமுகம்

டிஜிட்டல் வாழ்க்கை முறை மற்றும் சுகாதாரத் தீர்வுகளை வழங்குவதற்கான தனது அர்ப்பணிப்பை உறுதி செய்யும் வகையில், இலங்கையின் மாபெரும் வைத்திய முற்பதிவு வலையமைப்பும், SLTMOBITEL இன் துணை நிறுவனமுமான eChannelling, புத்தம் புதிய Onetouch TeleChannelling சேவையை அறிமுகம் செய்துள்ளது. இந்தச் சேவையினூடாக, வைத்தியருடன் ஒன்லைன் வீடியோ அழைப்பினூடாக தொடர்பை ஏற்படுத்தி ஆலோசனைகளைப் பெற்றுக் கொள்ள முடியும். நோயாளர்களுக்கு உள்நாட்டிலிருந்து அல்லது வெளிநாடுகளிலிருந்த வைத்தியர்களுடன் ஒன்லைனில் தொடர்பை ஏற்படுத்த முடியும் என்பதுடன், சௌகரியமான முறையில் பிரத்தியேகமான சேவைகளைப் பெற்றுக் கொள்ளக்கூடியதாக இருக்கும்.




உயர் தரம் வாய்ந்த டிஜிட்டல் சுகாதார பராமரிப்பு தீர்வுகளை வழங்குவதற்கான உறுதி மொழியுடன், டிஜிட்டல் மயமாக்கத்தை நோக்கி இலங்கையை நகர்த்துவதில் பங்களிப்பு வழங்கி, ஒன்லைன் வீடியோ வைத்திய ஆலோசனை சேவைக் கட்டமைப்பை eChannelling தற்போது அறிமுகம் செய்துள்ளது. இதனூடாக நோயாளர்களுக்கு வைத்திய முற்பதிவு சேவைகளை சௌகரியமாக பெற்றுக் கொள்வதுடன், நவீன தொழில்நுட்ப வசதிகளைப் பயன்படுத்தி தமது வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்திக் கொள்வதற்கும் பங்களிப்பு வழங்குகின்றது.

2022 முதல் அரையாண்டில்

# நிலையான வருமான வளர்ச்சியைப் பதிவு செய்துள்ள SLT குழுமம்

தேசிய தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப தீர்வுகள் வழங்குனரான ஸ்ரீ லங்கா டெலிகொம் குழுமம் (SLT குழுமம்), 2022 முதல் அரையாண்டு காலப்பகுதியில் உறுதியான நிதிப் பெறுபேறுகளை பதிவு செய்துள்ளது. முன்னைய ஆண்டின் இதே காலப்பகுதியுடன் ஒப்பிடுகையில் வருமானம் 6% இனால் அதிகரித்து ரூ. 52.9 பில்லியனாகவும், வரிக்கு முந்திய இலாபம் (PBT) 19.8% இனால் அதிகரித்து ரூ. 7.2 பில்லியனாகவும் பதிவாகியுள்ளது. நாட்டில் சிக்கல்கள் நிறைந்த சமூகப் பொருளாதாரச் சூழல்கள் காணப்பட்ட போதிலும், குழுமத்தினால் மீட்சியுடன் கூடிய வியாபார மாதிரியை பின்பற்றப்பட்டிருந்தமையை வெளிப்படுத்தியிருந்தது.

தொழிற்பாட்டு வினைத்திறனை வெளிப்படுத்தி SLT குழுமத்தின் EBITDA (Earnings Before Interest, Tax, Depreciation and Amortisation) பெறுமதி 2022 முதல் அரையாண்டு காலப்பகுதியில் ரூ. 20.9 பில்லியனாக அதிகரித்தது. முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் 7.8% வளர்ச்சியைப் பதிவு செய்திருந்தது. மீளாய்வுக்குட்படுத்தப்பட்ட காலப்பகுதியில் EBITDA எல்லைப் பெறுமதி(EBITDA Margin) 39.7% ஆக காணப்பட்டது.

முன்னைய காலாண்டின் வெற்றிகரமான செயற்பாட்டுக்கு மேலதிகமாக, SLT குழுமத்தினால் நேர்த்தியான போக்கை 2022 இரண்டாம் காலாண்டிலும் பேண முடிந்திருந்தது. முன்னைய காலாண்டுடன் ஒப்பிடுகையில் தொழிற்படு இலாபத்தில் 4% அதிகரிப்பை பதிவு செய்ய முடிந்தது. குழுமத்தினால் ரூ. 135 மில்லியன் அந்நியச் செலாவணி வருமானம் பதிவு செய்யப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், முன்னைய காலாண்டுடன் ஒப்பிடுகையில், இரண்டாம் காலாண்டில் வரிக்குப் பிந்திய இலாபம் 26.5% இனால் வீழ்ச்சியடைந்திருந்ததுடன், இதில் பிரதானமாக வருமான வரிச் செலவுகளில் ஏற்பட்ட உயர்வுகள் தாக்கம் செலுத்தியிருந்தன.



வருடத்தின் ஆரம்பத்தில் SLT குழுமத்தினால் நடைமுறைப்படுத்தப்பட்ட உத்திகளை தொடர்ந்து பின்பற்றியிருந்ததுடன், இரண்டாம் காலாண்டில் அதன் பெறுபேறுகளை அவதானிக்க முடிந்தது. எவ்வாறாயினும், ஏப்ரல் முதல் ஜுன் மாதம் வரையான காலப்பகுதியில், குழுமம் பல்வேறு வியாபார வளர்ச்சிச் சவால்களுக்கு முகங்கொடுத்திருந்தது.

# 2020-/21 ஆம் ஆண்டிற்கான சிறந்த விநியோகஸ்தர்களை கௌரவிக்க புதிய மாதிரியை பின்பற்றுகிறது சியெட்

சியெட் களனி ஹோல்டிங்ஸ் தனது முன்னணி விநியோகஸ்தர்கள் 99 பேருக்கு அவர்களது வீடு தேடி சென்று விருதுகளையும் பணப்பரிசில்களையும் வழங்கி அவர்களை கௌரவித்துள்ளது. நாட்டின் இக்கட்டான சூழ்நிலைக்கு மத்தியிலும் நிறுவனத்தின் வளர்ச்சிக்கு பங்களிப்பு செய்தவர்களை அங்கீகரிக்கும் பாரம்பரியத்தின் ஒரு பகுதியாகவே. இந்நிகழ்வு ஒழுங்கமைக்கப்பட்டிருந்தது.

வழமையாகவே ஆண்டின் சிறந்த 99 விற்பனை முகவர்களுக்கு ஐந்து நட்சத்திர விடுதியில் 'கலா விருதுகள்;" வழங்கப்படும், எனினும் நாட்டின் தற்போதைய நிலவரத்தை கருத்திற்கொண்டு இம்முறை இந்த புதிய மாதிரி பின்பற்றப்பட்டது. இதன்போது மொத்தமாக 14 கேடயங்களும், 85 சான்றிதழ்களும், 85 காசோலைகளும், ரேடியல் டயர்கள், டிரக் டயர்கள், இலகுரக டிரக் டயர்கள் மற்றும் முச்சக்கர வண்டி டயர்கள் போன்ற நான்கு தயாரிப்பு வகைகளின் கீழ் கையளிக்கப்பட்டன.

சியெட் தரமுத்திரைக்கு அதிக விற்பனை வருவாயை ஈட்டிக் கொடுத்த முதல் 10 விற்பனை முகவர்களுக்கு குறிப்பிட்ட தயாரிப்பு வகைகளின் அடிப்படையில்; 'தங்க விற்பனை முகவர்கள்" என்ற பிரிவின் கீழ் விருதுகள் வழங்கி கௌரவிக்கப்பட்டனர்.

இதற்கு மேலதிகமாக பிளாட்டினம்;, தங்கம் மற்றும் வெள்ளி பிரிவுகளின் கீழ் வழங்கப்படும் வெளிநாட்டுப் பயணச் சுற்றுலாவுக்கு மாற்றாக அந்தந்த விற்பனை முகவர்கள் காசோலை வழங்கி கௌரவிக்கப்பட்டனர்.



சியெட் இன் ஆண்டிற்கான சிறந்த விற்பனை முகவர், கொழும்பு 2 ருரூர் வீல் சேவையின் முகாமைத்துவப் பணிப்பாளர் வசந்த பெரோராவிற்கு (இடமிருந்து மூன்றாவது), சியெட் இன் துணைத் தலைவர் விற்பனை மற்றும் சந்தைப்படுத்தல், ஏற்றுமதி திரு ரவி டி கூங்கே தலைமையிலான குழுவினால் வெற்றிக் கேபயம் வழங்கப்பட்டது.

# டவர் மண்டப அரங்க மன்றம் திறந்த பல்கலைக்கழகம் இணைந்து நடத்தும் கல்வி மானி கற்கை

டவர் மண்டப அரங்க மன்றம் 1978 ஆம் ஆண்டு முதலாம் இலக்க பாராளு மன்றச் சட்டத்தின் கீழ் ஸ்தாபிக்கப்பட்ட நிறுவனம். இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசின் பிரதம மந்திரியின் கீழான அறங்காவலர் குழு இதனை நிருவகிக்கின்றது. இந்நிறுவனத்தின் பிரதம நிறைவேற்று நிருவாகியாக பணிப்பாளர் நாயகம் விளங்குகின்றார். இப்போது கலாச்சார அமைச்சுடன் இணைக்கப் பட்டுள்ளது.

பிரத மந்திரியின் அனுமதியுடன் கலாச்சார அமைச்சர் விதுர விக்கிரமநாயக்கவின் வழிகாட்டலின் கீழ் டவர் மண்டப அரங்க மன்றத்தின் பணிப்பாளர் நாயகம் டி.எம்.எஸ். திசாநாயக்க தலைமையின் கீழ் டவர் நாடகப் பாடசாலை தமிழ் மொழி மூலமான உயர் டிப்ளோமா பட நெறியினை யாழ் சண்டிலிப்பாய் கலாச்சார மத்திய நிலையத்தில் இவ் வருடம் மே மாதம் 4 ஆம் திகதி ஆரம்பித்தது.

இவ்வுயர் டிப்ளோமா பாடநெறி சிங்க மொழி மூலமாக 2007 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது. இப்போது தமிழ் மொழி மூலம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இப்போது யாழ் சண்டிலிப்பாய் கலாச்சார மத்திய நிலையத்தை மையமாக்க கொண்டு 50 மாணவர்களை உள்ளடக்கிய பாட நெறி நடைபெற்று வருகின்றது.

இந்த மாணவர் தொகையை அதிகரிப்பதற்கான டவர் மண்டப அரங்க மன்றத்திற்கும் திறந்த பல்கலைக்கழகத்திற்குமான புரிந்துணர்வு உடன்படிக்கை இம்மாதம் 24 ஆம் திகதி கைச்சாதிடப்பட உள்ளது.

இவ்வளவு காலமும் 50 மாணவர்களை டவர் மண்ட பாடசாலையினூடாக திறந்த பல்கலைக்கழகம் உள்வாங்குவதாக இருந்தது. இந்த புரிந்துணர்வு உடன் படிக்கையின் மூலம் தமிழ் மொழி மூலம் 70 மாணவர்களையும் சிங்கள மொழி மூலம் 50 மாணவர்களையும் உள் வாங்கும் நடவடிக்கை கைச்சாத்திட பட உள்ளது.

திறந்த பல்கலைக்கழக துணை வேந்தர் காரியாலயத்தில் நடைபெற இருக்கின்ற இந்நிகழ்வில் கலாச்சார அமைச்சர் விதுர விக்கிரமநாயக்கவும் கலாச்சார அமைச்சின் செயலாளர், திற்நத பல்கலைக்கழ துணை வேந்தர், திறந்த பல்கலைக்கழ கல்விப் பீடாதிபதி, டவர் மண்டப அரங்க மன்றத்தின் பணிப்பாளர் நாயகம் டி.எம்.எஸ்திசாநாயக்க மற்றும் டவா மண்டப அரங்க மன்றத்தின் பிரதிப்பணிப்பாளர் (தமிழ் நாடக அபிவிருத்தி) ஆகியோர் கலந்து கொள்கின்றனர்.

இதன் மூலம் தமிழ் மொழி மூலமான நாடகமும் அரங்கியலும் கற்ற மாணவர்களுக்கு நாடகமும் அரங்கியலும் தொடர்பான கல்வி மானி பட்டமும் அதற்கான ஆசிரியத் தொழிலும் கிடைக்கும். இதன் மூலம் இத்துறை வளர்ச்சி அடையும்.

## தாய்லாந்து தூதரகத்தின் நன்கொடை

இலங்கைக்கான தாய்லாந்து நாட்டு தூதரகத்தின் நன்கொடையின் கீழ் கர்ப்பிணி தாய்மார்களுக்கு உலர் உணவு பொதிகள், அத்தியாவசிய மருத்துவ பொருட்கள் மற்றும் போசாக்கு உணவுகளை வழங்கும் நிகழ்வு அண்மையில் ஐ.தே.கவின் தலைமையகமான சிறிகொத்தாவில் இடம்பெற்றது.

ஐ.தே.கவின் பொதுச்செயலாளர் பாலித ரங்கே பண்டார, இலங்கைக்கான தாயலாந்து தூதுவர் , ஐதேகவின் மகளிர் அணித்தலைவி சாந்தினி கொன்ககே, ஐதேகவின் இரத்தினபுரி மாவட்ட அமைப்பாளர் எஸ்.ஆனந்தகுமார் உட்பட பல முக்கியஸ்தர்கள் இந்நிகழ்வில் கலந்துகொண்டனர்.



இலங்கைக்கான தாய்லாந்து நாட்டு தூதரகத்தின் நன்கொடையின் கீழ் கர்ப்பிணி தாய்மார்களுக்கு உலர் உணவு பொதிகள், அத்தியாவசிய மருத்துவ பொருட்கள் மற்றும் போசாக்கு உணவுகளை வழங்கும் நிகழ்வு ஐ.தே.கவின் தலைமையகமான சிறிகொத்தாவில் இடம் பெற்றது. ஐ.தே.க.வின் பொதுச்செயலாளர் பாலித ரங்கே பண்டார, இலங்கைக்கான தாய்லாந்து தூதுவர், ஐ.தே.கவின் மகளிர் அணித்தலைவி சாந்தினி கொன்ககே உட்பட பல முக்கியஸ்தர்கள் இந்நிகழ்வில் கலந்து கொண்டனர். ஐதேகவின் இரத்தினபுரி மாவட்ட அமைப்பாளர் எஸ். ஆனந்தகுமாரும் இதில் கலந்து கொண்டார்.









நாட்டிய கலா மந்திர் ஸ்தாபக இயக்குனர் கலாசூரி வாசுகி ஜெகதீஸ்வரன் மற்றும் இங்கிலாந்து சாஸ்வதம் நடன அமைப்பின் நிறுவனர் டாக்டர் ஜெயந்தி யோகராஜா தலைமையில் நாட்டிய கலா மந்திர் மாணவர்கள் பங்கேற்ற பரத நாட்டிய பயிற்சிப் பட்டறை 17 ஆம் திகதி மாலை "கலாமந்திர் "மண்டபத்தில் நடைபெற்றது. இந்தியாவில் இருந்து வருகை தந்திருந்த "நாட்டிய ரூபன்" ரூபேஷினால் இப்பயிற்சிப் பட்டறை நடாத்தப்பட்டது குறிப்பிடத்தக்கது.





சென்னை எழும்பூரில் உள்ள இலங்கை மகா போதி சங்கத்திற்கு சென்ற சென்னைக்கான இலங்கை தூதுவர் கலாநிதி துரைசாமி வெங்கடேஸ்வரன் மகா சங்கத்தினரின் ஆசி பெற்றார். இதன்போது மகா போதி சங்க கட்டிடத்தின் பராமரிப்பு குறித்தும் அதன் முன்னேற்றம் குறித்தும் கலந்துரையாடப்பட்டது.






இலங்கையிலிருந்து கொவிட்டை துரிதமாக நீக்குவதற்கும் சில பொருளாதார அடிமட்ட திட்டங்களுக்கு உதவுவதற்கும் ஐக்கிய நாடுகளின் அபிவிருத்தி கூட்டுத்தாபன அமைப்பினால் 60 மில்லியன் அமெரிக்க டொலரும் 2030 வரை 325 மில்லியன் அமெரிக்க டொலரும் இலங்கைக்கு வழங்கப்படவுள்ளது. இதற்கான ஒப்பந்தத்தில் அண்மையில் நிதியமைச்சில் வைத்து கைச்சாத்திடப்பட்டது. நிதியமைச்சின் செயலாளர் மகிந்த சமரசிங்கவும் ஐக்கிய நாடுகள் இலங்கைப் பிரதிநிதி ஹனா சிங்கர் ஹம்டியும் இந்த ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டனர். இந் நிகழ்வில் வெளிநாட்டு விவகார அமைச்சின் செயலாளர் திருமதி அருனி விஜயவர்தன, ஐக்கிய நாடுகள் அபிவிருத்தி கூட்டுத்தாபனத்தின் ஆசிய பசுபிக் இணைப்பாளர் டேவிட் மெக்கலனும் கலந்து கொண்டனர். இந் நிதி 2023- 2027 ஆம் ஆண்டுவரை இலங்கையில் உள்ள ஐக்கிய நாடுகள் அபிவிருத்தி நிறுவனங்களால் இனம் காணப்பட்ட திட்டங்களுக்கு பயன்படுத்தப்படுமென அமைச்சின் ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (படங்கள்: அஷ்ரப் ஏ சமத்)

## இந்தியாவின் 75 ஆவது சுதந்திர தினம்













இந்தியாவின் 75 ஆவது சுதந்திர தினம் இந்திய உயர் ஸ்தானிகரின் உத்தியோக பூர்வ வாசஸ்தலமான இந்திய இல்லத்தில் கடந்த 15ஆம் திகதி இந்திய உயர்ஸ்தானிகர் கோபால் பாக்லே தலைமையில் நடைபெற்றது. நிகழ்வில் "பாரத் கோ சலாம்" பாடலுக்கு ஆசிரியர் சதாரா சுபுதும் மாணவர்கள் வழங்கிய நடனத்தையும் நடன ஏற்பாட்டுக் குழுவினரையும் படங்களில் காணலாம்.

## காஷ்மீரிலும் இந்திய தேசியக்கொடி



இந்தியாவின் 75வது சுதந்திர தினத்தை முன்னிட்டு இந்தியாவெங்கும் தேசிய கொடியை வீடுகளில் பறக்கவிடும் அரசின் முயற்சி வெற்றி பெற்றுள்ளதாகவும் காஷ்மீரிலும் கொடிகள் பறக்கவிடப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

காஷ்மீருக்கு வடக்கே இந்திய – பாகிஸ்தான் எல்லைக் கருகே அமைந்துள்ள பரமுல்லா மாவட்டத்தின் சிறு கிராமங்களின் உள்ள சுய உதவிக் குழுக்கள் தமது வீடுகளிலேயே இந்திய தேசியக் கொடிகளை தயாரித்து பறக்க விட்டதோடு அவற்றை ஏனையோருக்கு விற்கவும் செய்தனர்.

இந்திய இராணுவத்தின் உதவியோடு இப்பெண்கள் கொடிகளைத் தயாரித்தனர். கொடிகளைத் தயாரிக்க உதவிய சப்ரீனா என்ற பெண்மணி தாம் 250 தேசிய கொடிகளைத் தயாரித்ததாகவும் அதற்காக பெருமைப் படுவதாகவும் கூறினார்.

# எனது கட்சியை தடை செய்ய அரசு முயற்சி

## இராணுவத்தை தனக்கு எதிராக தூண்டி விடுவதாகவும் காட்டம்

### -இம்ரான்கான் குற்றச்சாட்டு



தனது பாகிஸ்தான் தெரீக் ஈ இன்சாப் கட்சி தடை செய்யவும் தமது கட்சிக்கும் இராணுவத்துக்கும் இடையே மோதல் நிலையை உருவாக்கவும் ஆளும் கட்சி பகீரதப் பிரயத்தனம் செய்து வருவதாக அக் கட்சியின் தலைவர் இம்ரான்கான் தெரிவித்துள்ளார். தனது வீட்டில் இருந்தபடியே வீடியோ காணொளி வழியாக அளித்த இப் பேட்டியில் தமது கட்சி மக்கள் பலம் கொண்ட கட்சி என்றும் நினைத்தால் முழுநாட்டையும் தன்னால் ஸ்தம்பிக்கச் செய்ய முடியும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

'நாடு பொருளாதார ரீதியாக வீழ்ச்சி கண்டிருப்பதால் தான் அமைதிவழிப் போராட்டத்தை நாம் முன்னெடுக்கிறோம்.

எம்மை தேர்தல் களத்தில் தோற்கடிக்க முடியாது என்பதால் இந்த அரசு தேர்தல் ஆணைக் குழுவைப் பயன்படுத்தி எமது கட்சியைத் தடை செய்ய முனைகிறது.

வெளிநாடுகளில் இருந்து முறைகேடாக நிதி வந்ததாக குற்றம் சாட்டப்பட்டுள்ளது. ஆனால் 2012ம் ஆண்டிலேயே எமது கட்சிக்கு நிதியுதவி செய்பவர்கள் என்று 40 ஆயிரம் பேர் கொண்ட பட்டியலை நாம் அளித்துள்ளோம். நாம் எமது கட்சிக்காகத் திரட்டும் பணம் தொடர்பான சகல விவரங்களையும் கையளித்திருக்கிறோம்' என்று தன் நேர்காணலில் தெரிவித்துள்ள இம்ரான்கான், உறுதியான பாகிஸ்தானை விரும்பாதவர்களே தமது அரசை கவிழ்த்தார்கள் என்றார்.

இந்தியாவில் நடைபெறும் பயங்கரவாதத் தாக்குதல்களில் பாக். இராணுவமும் பாக். உளவுத் துறையும் தொடர்புபட்டுள்ளதாக முன்னாள் பிரதமர் நவாஸ் ஷெரிப் தெரிவித்திருந்ததாகவும் முன்னாள் கமாண்டர் ஜெனரல் ரஹீல் ஷரீப்பை பயங்கரவாதத் தலைவர் என பாரதப் பிரதமர் நரேந்திரமோடி பல தடவைகள் குறிப்பிட்டிருப்பதாகவும் சுட்டிக் காட்டிய இம்ரான்கான், இப்படிக் கூறிய பாரதப் பிரதரை லாஹூரில் நடைபெற்ற ஒரு திருமண வைபவத்தில் கலந்து கொள்ள நவாஸ் ஷெரீப் அழைத்திருந்தார் என்பதை நினைவுபடுத்தினார்.

தன்னை பாக். இராணுவத்திடமிருந்து காப்பாற்றும்படி நவாஸ் ஷெரீப் பாரதப் பிரதமர் நரேந்திர மோடியை இரகசியமாக சந்தித்தபோது கோரிக்கை விடுத்ததாகவும் இப் பேட்டியில் இம்ரான் தெரிவித்திருந்தது குறிப்பிடத்தக்கது.

## சம்பள உயர்வு கோரி பைசலாபாத் மின்தறி ஊழியர்கள் போராட்டம்



பைசலாபாத் கைத்தொழில் வலயத்தைச் சேர்ந்த மின்தறி நெசவாளர்கள் கடந்த ஒன்பது நாட்களாக சம்பள உயர்வு கோரிக்கையை முன்வைத்து உள்ளிருந்து போராட்டம் நடத்தி வருவதாக செய்திகள் தெரிவிக்கின்றன. அரசு அறிவித்துள்ள சம்பளத் தொகையைத் தர மின்தறி நிறுவன உரிமையாளர்கள் மறுத்ததையடுத்தே கோரிக்கை நிறைவேறும் வரை போராட்டத்தை நடத்த முன் வந்திருப்பதாக தொழிலாளர் குவாமி இயக்கத் தலைவர் பாபா அன்சாரி கூறியுள்ளார். இதேசமயம் பைசலாபாத்தின் வெவ்வேறு இடங்களில் மின்சார கட்டணம் அதிகரிக்கப்பட்டிருப்பதாக தெரிவித்து பாவனையாளர்கள் ஆர்ப்பாட்டங்களில் ஈடுபட்டிருந்தனர். சமுந்திரி வீதி மின்சார அலுவலகத்தின் முன்பாகக் கூடியிருந்த பொதுமக்கள் கட்டண உயர்வை எதிர்த்து கோஷங்களை எழுப்பினர்.